தேச ஜோதி



தமிழ்நாடு வெளியீடு

இது பழைய சரித்திரக் கதையாய்
இருக்கிறது.
ஒரு ஆசிரியருக்கு

பதிப்பாசிரியர் : பி. ஸ்ரீ.

தேச ஜோதி

ஆசிரியர் :

எம். எஸ். சுப்பிரமணிய அய்யர்

பிரசுரம் :

மதராஸ் பிரிமியர் கம்பெனி

விற்பனை உரிமை :

தமிழ்நாடு வெளியீடு

33, பிராட்வே, சென்னை.

முதற்பதிப்பு : நவம்பர் 1946

விலை ரூ. 2/-

Printed at Thompson & Co. Ltd (Minerva Press)
33, Broadway, Madras. (P. I. C. No. Ms. 15)
Published by Madras Premier Co.,
3, Perianna Maistri Street, Madras (P. I. C. No. Ms. 39-a)

திவ்யப் பிரபந்த ஸாரம்

தமிழ் நாட்டுப் பக்தமணிகளில் ஆழ்வார்களும் நாயன்மார்களும் மிகப் பிரசித்தர் என்பதை அறியாதார் இல்லை. இவர்களில் ஸ்ரீ வைஷ்ணவத்தை உருவாக்கிய ஆழ்வார்களின் உள்ளத்திற்கு இந்நூல் ஒரு திறவுகோல்.

பரிசுப் பதிப்பு விலை ரூ. 5 0

மாணவர் பதிப்பு ,, ரூ. 2 8

காந்தீய நவநீதம்

மதம், அரசியல், பொருளாதாரம் முதலிய வாழ்க்கையின் பல்வேறு துறைகளைப் பற்றி காந்தி அடிகளின் கருத்துக்களை அவருடைய முக்கிய சிஷ்யரும் வித்துவானும் சிந்தனை சீலருமான ஸ்ரீ மஷ்ரூவாலா இதில் சுருங்கக் கூறி விளக்கியிருக்கிறார். தம் கருத்துக்கள் சிறிதும் மாறுபடாமல் விளக்கப்பட்டிருப்பதாக காந்தி அடிகள் இந்நூலைப் பற்றி அபிப்பிராயம் கூறியிருக்கிறார். சொற்பப் பிரதிகளே கைவசமிருக்கின்றன.

அழகிய படங்களுடன் விலை ரூ. 5 0 0

படித்துப் பாருங்கள்—

—புதிய வெளியீடுகள்

கதைகள்		ரூ.	அ.
ஸ்வர்ணலதா (வங்க நவீனத்தின் தமிழாக்கம்)	...	*6*	*0*
இன்பத்துளி முதலிய சிறு கதைகள்	...	*2*	*0*

யாத்திரைப் புத்தகம்

கைலாசம்—மானஸரோவர்	... ...	*2*	*0*
சித்திரமும் சொற்சித்திரமும்	... ...	*5*	*0*
Pictures and Pen-pictures	... ...	*5*	*0*

ஆராய்ச்சி

Research in Dravidian Languages	...	1	0

சட்டம்

Madras Essential Articles Control and Requisitioning (Temporary powers) Act 1946	... ...	2	0
Madras Buildings Lease and Rent Control Act (Sold out)	... ...	1	4

வாங்கிவிட்டீர்களா? - - - - முந்துங்கள்

சரித்திர நவீனம்

ஸெலிமா பேகம் அல்லது மொகல் மன்னரின் அந்தப்புரம் ... ரூ. 2 0 0

காலச்சுடர்

சுதந்திரமா, பாகிஸ்தானா? ... ரூ. 2 0 0

Freedom or Pakistan? ... ரூ. 2 0 0

நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ... ரூ. 4 0 0
(வசீகரமான படங்களுடன்)

புரட்சி செய்த பேனாவீரர் ... ரூ. 3 0 0

Just a Peep into the Muslim Mind! ... ரூ. 5 0 0

ஜி. யூ. போப்பையர்

தமிழுக்கு உழைத்த ஆங்கில அறிஞரின் வாழ்க்கையும் தமிழ்த் தொண்டும் தமிழ்ச் சுவை மிகுந்த நடையில் விளக்கப் பெறுகின்றன. இதுவரை தமிழ்நாடு அறியாத பல செய்தி களையும் ஆசிரியர், அருள் தங்கையா சேகரித்துத் தந்திருக்கிறார். "தமிழ் மாணவர்" என்று தம்மைப் பெருமையுடன் சொல்லிக் கொண்ட **போப்பையர்** தமிழ் மாணவர்களுக்கெல்லாம் ஒரு நல்ல வழிகாட்டி.

ரூ. 1 4 0

மஹாதேவ தேசாய்

மகாத்மாவின் அந்தரங்கக் காரியதரிசியாக இருந்து 'ஆகாகான் அரண்மனை' என்ற சிறையில் உயிர்நீத்த தியாக மூர்த்திக்கு மஷ்ரூவாலா, சரோஜினிதேவி, பியாரேலால் ஜி. டி. பிர்லா, முதலான தேச பக்த சிரோமணிகள் சூட்டிய நினைவு மாலை. வர்தா ஆசிரம வெளியீடாக ஹிந்தியில் வருகிறது; அதன் தமிழுருவம் இது.

ரூ. 2

வி. ஓ. சி. கண்ட பாரதி

தமிழ் நாட்டின் தவப் புதல்வரான கவிச் சக்ரவர்த்தி பாரதி யாருடன் இளமையிலிருந்து இறுதிவரையில் நெருங்கிப் பழகிய கப்பலோட்டிய தமிழர் வி. ஓ. சிதம்பரம் பிள்ளை பாரதி யாரைப் பற்றி எழுதி வைத்திருந்த நினைவுக் குறிப்புக்கள் முதன் முதலாக இப்பொழுது வெளியிடப்பட்டிருக்கின்றன. இதில் அடங்கியுள்ள சூரத் காங்கிரஸ் வரலாறும், பகவான் அரவிந்தர், லோகமான்ய திலகர், வ. வே. சு. ஐயர் ஆகியோரைப் பற்றிய சொற் சித்திரங்களும் படிக்கத்தக்கவை.

அழகிய படங்களுடன் விலை ரூ. 1

முன்னுரை.

'சரித்திரத் தேர்ச்சி கொள்' என்றார் தேசியகவி பாரதி. நம்மவருக்குள்ளே நமது சரித்திரத் தேர்ச்சியோ, இன்றேல் பயிற்சியோ, அல்லது பரிசயமோ எம்மட்டு?

அத் தேர்ச்சியும் பயிற்சியும் எதற்கு? பழம் பெருமை பேசிப் பரவசங் கொள்ளவா, பழமையில் ஒரு பிரேமை கொள்ளவா? அன்று. பழமையும் புதுமையும் பிணைந்த ஓர் அற்புதம் அமைக்கவேயாம்!

உலகிலே ஒரு யுத்தம்! இரண்டு யுத்தம், இனி எங்கும் ஒரு மாற்றம், ஒரு புதிய போக்கு, ஒரு புதிய பேச்சு, ஒரு புதிய வாழ்வு.

நவீன உலகை அமைக்கவே எங்கும் முயற்சி, கிளர்ச்சி நடைபெறுகின்றன. நவீன அமைப்பினுக்கு ஓர் அடிப்படை, ஒரு வழிகாட்டி—வேண்டுமே. இதற்கு நம் தேச சரித்திரம் பயன்படும்.

குருட்டுத்தனமான பழமைப் பித்தும் வேண்டாம்: பரவசமான புதுமை மோகமும் வேண்டாம். புதுமையும் பழமையும் பிணைந்த நவீன அமைப்பு—சமூகத்திலும் அரசியலிலும்—தேவை.

இதற்கு "தேச ஜோதி"யில் உள்ள கதைகள் நம் கருத்தைத் துலக்கலாம்; இளைஞருக்கு ஓர் உற்சாகம் ஊட்டலாம்.

தவிர, சரித்திரத்திலே இலை மறை காய் போலுள்ள சம்பவங்கள் பகிரங்கமாதல் வேண்டும். இந்த ஆசையோ அதிகம். அந்த ஆசைகொண்டே, தமிழன்பர்க்கு இக்கதைகள் சமர்ப்பணம் ஆகும்.

எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்,

ஆசிரியர்.

பொருளடக்கம்

ஜெய ஸ்தம்பம்

வான வீதியிலே சூரிய காந்தி வீசாத இடம் ஏது? அங்ஙனமே, அன்றும் இன்றும் பூவுலகிலே இந்தியர் பிரவேசியாத பிரதேசம் உண்டோ? முன்னாளில், மானிட கோடிகளுக்கு மகிமையூட்டவே நமது மூதாதையர் பாரெங்கும் பொங்கிப் பரந்தனர். இந் நாளிலோ, வயிற்றைக் கழுவும் வகை தேடவே நம்மவர் எங்கும் போகின்றனர்! இந்த இழி நிலை எத்தனை நாளைக்கு?

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே, வட நாட்டாரும் ஆந்திரரும் பர்மா தேசஞ் சென்று, அங்கே மக்களுடன் மக்களாகி, மாட்சிமையுடன் ஆட்சி செலுத்தினர். ஆயிரம் வருஷங்களுக்கு முன்னம், சோழவேந்தனொருவன் பர்மா சேர்ந்து, அங்கே **ஜெய ஸ்தம்பம்** நாட்டி வந்ததை இங்கே நவில்வோம் :

வடநாட்டில்தான் வல்லரசுகளும் பேரரசுகளும் தோன்றின; தென்னாட்டிலே, நம் தமிழகத்திலே வல்லரசோ சாம்ராஜ்யமோ உண்டா?—என்று யாருக்கும் ஐயப்பாடு வேண்டாம். சோழவேந்தர் சீர்மிகுந்த சாம்ராஜ்யமொன்று கண்டு, இமயத்தின் சிகரத்திலே புலிக் கொடி பொறித்தனர்; மேலைக்கடலிலும் கீழைக்கடலிலும் பற்பல தீவுகளையும் தீவாந்தரங்களையும் ஜெயித்துப் பிடித்தனர்; தவிரவும் பெருமிதமான கப்பல் படை கொண்டு கருங்கடலிலும் பெருங்கடலிலும் திறை கொண்டனர். இப்பெருமை, பத்தாம் நூற்றாண்டில் தலையெடுத்த சோழ வமிசத்தைச் சாரும்.

தட்சிணத்தில் தலையெடுத்த பல்லவரின் பெருமிதத்தின் நிமித்தம் சோழர் சிறிது காலம் தலைசாய்ந்து நிற்க நேர்ந்தது. அப்பால், பத்தாம் நூற்றாண்டிலோ சோழவரசர் மீண்டும் தலைதூக்கிப் பல்லவர், ராஷ்டிரகூடர், சாளுக்கியர் முதலியோரைப் போரில் புறங்கண்டு, பேரரசொன்று நிலைநாட்டுகின்றனர். இந்தச் சோழ வமிசத்தின் முதல்வன் ஆதித்தன். கி. பி. 900 முதல் 1200 வரையில் இவர்கள் உண்மையில் சக்கரவர்த்திகளாக விளங்குகின்றனர். அப்போது இவர்களின் ராஜதானி திருச்சி உறையூரிலிருந்து தஞ்சாவூருக்கு மாறுகிறது.

பத்தாம் நூற்றாண்டின் கடைசியிலே, ராஜராஜ சோழன் என்பான் ஈடும் எடுப்புமின்றிக் கிளம்புகின்றான்; எங்கும் வெற்றிக்கொடி தூக்குகின்றான்; வடக்கே விந்தம், தெற்கே குமரி, மேற்கிலும் கிழக்கிலும் கடல்—இந்நான்கு எல்லைக்கு உட்பட்ட பூமி முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆளுகின்றான்; பகைவர் பிரமிக்கும் வண்ணம் பெரிய கப்பல் படை சமைக்கின்றான்; காந்தளூர்ச் சாலையிலே சேரரின் சிறந்த கப்பல் படையைச் சிதைக்கின்றான்; அரபிக் கடலிலுள்ள லட்சத் தீவுகளை வசஞ் செய்கிறான். மேலைக்கடலெங்கும் அவன் கொடியே பறக்கின்றது! போர்முகத்தில் மட்டுமல்லாது, அரசியலிலும் அறநெறியிலும் நாகரிகத் துறையிலும் நலம் பல புரிவதிலும் அப்பார்த்திபன் பராக்கிரமம் காட்டுகின்றான். தஞ்சையிலே ராஜராஜேசுவரம் எனும் பெருமை மிக்க பிரகதீசுவரர் ஆலயத்தை எழுப்பியவன் அவனே!

ராஜராஜன் பரமபதம் சேர்ந்ததும், அவன் மைந்தன் பரகேசரிவர்மன் ராஜேந்திரன் என்பான் சிம்மாசனம் ஏறுகிறான்; கி. பி. 1012 முதல் 1044 வரையில் ஆண்மை

செலுத்துகிறான்; "கங்கையும் கடாரமுங் கொண்ட ராஜேந்திரன்" என்று சிறப்புப் பெயர் எய்துகிறான். முடிகொண்ட சோழன், பண்டிதசோழன், வீரராஜேந்திரன் என்றும் இவனுக்குப் பட்டப் பெயர்கள் உண்டு. உடையார்பாளையத்தினருகே இவன் கட்டிய ஏரியின் கரை பதினான்கு மைல் நீளம். கொள்ளிடத்திலிருந்தும், வெள்ளாற்றிலிருந்தும் இதற்கு நீர் வந்து பாய, வசதிகள் இருந்தன. அந்நாளில் இதனைக் "குட்டிக்கடல்" என்பார். தற்போது மரமும் செடியும் நிரம்பிய காடாகக் காணினும், கூர்ந்தறியவல்லோரின் நெஞ்சத்தை அள்ளவல்ல தோற்றமுடையது.

தந்தையைப் போலவே ராஜேந்திரனது மெய்க்கீர்த்தியும் வீரப்பிரதாபமும் சிலாசாஸனங்களில் மட்டுமல்லாமல் செப்பேடுகளிலும் சிறந்து காணப்படும். சிம்மாசனத்தில் அமர்ந்து சின்னாள் சென்றதும், பரகேசரியான ராஜேந்திரன் தன் புதல்வன் ராஜகேசரி என்பானுக்கு யுவராஜ பட்டாபிஷேகம் செய்கின்றான். பின்பு இருவரும் சேர்ந்து, இருபது வருஷ காலம் ராஜ்ய பாரம் பண்ணுகின்றனர். அப்போது தான், கங்கை, கடாரம் இரண்டையும் படை கொண்டு ராஜேந்திரன் வெல்லுகின்றான். தென்னாட்டினைத்தையும் ராஜராஜன் அடிப்படுத்தி, அரசியலையும் அற்புதமாக அமைத்துச் சென்றதனால், நாடெங்கும் நிம்மதி நிலவுகிறது. நிலவவே, இவ் விஜயத்தில் தந்தையை விஞ்சவேண்டுமென ராஜேந்திரனுக்கு ஆவல் ஓங்கி உயர்கிறது.

தந்தை கைப்பற்றாது விட்ட ஈழ நாட்டின்மீது ராஜேந்திரன் நோக்கம் பாய்கிறது. உடனே ஆயத்தமெல்லாம் நடக்கின்றன. இலங்கை வேந்தன் மகிந்தன்

என்பான் அதுகேட்டும் இறுமாந்து கிடக்கின்றான். சமர்முனையிலே ராஜேந்திரனது திரண்ட சேனையைக் கண்டதும், மகிந்தன் ஓட்டம் பிடிக்கிறான்; முடிவில் சிறையும் படுகிறான்! விலை மதிக்க ஒண்ணாத ரத்தினக் கிரீடம், முத்துவடம், திரண்ட பொக்கிஷம் முதலியன வெல்லாம் ராஜேந்திரன் கையில் சிக்குகின்றன.

அவ்விதம் ஈழ மண்டலத்தை வென்றதும், கங்கை நதிப் பிரதேசங்களின்மீது சோழ சைன்யம் சீறிச் செல்கிறது. அம் மா நதியைக் கடக்க வாராவதி வேண்டுமே. படகுப் பாலம் அமைக்காமல், யானைப் பாலம் அமைக்கிறான் ராஜேந்திரன். யானைகளை ஒன்றன் பின் ஒன்றாக ஆற்றின் குறுக்கே நிறுத்தி, அவற்றின் முதுகையே பாலமாகக்கொண்டு சோழவீரர் ஆற்றைக் கடந்து செல்லுகின்றனர் செல்லவே, கோசலம் தண்டபுக்தி தென்லாடம் வங்காளம் முதலிய நாடுகள் அடிபணிந்து காணிக்கை செலுத்துகின்றன.

பின்பு, ராஜேந்திரன் ஆயிரக்கணக்கான குடங்களில் கங்கை நீரைக் கொணர்ந்து, தமிழகத்திலே கனக மயமான ஜெய ஸ்தம்பம் நாட்டுவதாகச் செப்பேடு பேசுகிறது. அல்லாமலும், சுத்த சைவரையும் வேதியரையும் அங்கிருந்து கொணர்ந்து காஞ்சிபுரம், கங்கைகொண்ட சோழபுரம் இந்த இடங்களில் குடியேற்றுவதாகவும் திருவாலங்காட்டுப் பட்டயம் பகர்கின்றது. கங்காதீரம் வரையில் கொடி போட்ட பின், கிழக்கே கடல்கடந்து கொடி தூக்கவும் அக் கொற்றவன் கருதுகின்றான்.

கருதியதும், புதிய புதிய கப்பல்கள் கட்டுகின்றான். கடல் வீரரைப் பலவாறான இடங்களிலிருந்தும் திரட்டு

கின்றான். அவசியமான புதிய ஆயுதங்களையும் சேகரிக்கின்றான். கங்கை நதியின் முகத்துவாரத்திலிருந்தும் கோதாவரியின் முகப்பிலுள்ள கோபால புரத்திலிருந்தும் சண்டைக் கப்பல்களென்ன, சாமான் கப்பல்களென்ன, இவையெல்லாம் கருங்கடலில் கன வேகமாகப் போகின்றன. பேரலைகள் பனை மரம்போல் எழுந்து, இரைந்தும் மோதியும், கப்பல்களின் வேகத்தைக் கண்டு தலைசாய்ந்து பின்னே புரண்டு மடிந்து விழுகின்றன !

திருவாலங்காட்டுப் பட்டயம் புகலும் வண்ணம், அக் கப்பல்கள் பொருதிரைக் கருங்கடலைக் கிழித்துக் கொண்டு பாய்ந்து செல்லுகின்றன; கடாரத்தின் வேந்தனான சங்கிராம விஜயதுங்க வர்மன் சிறைப் படுகிறான் ; பெருமிதமான அவன் யானைப் படை பிடிபடுகிறது ; அவன் தேடிவைத்திருந்த பொக்கிஷமெல்லாம் சோழரின் கையில் சிக்குகின்றன. விஜயநகரின் விஜய தோரணம் என்னும் விழுமிய கோட்டை வாயில் கதவுகள்—நவரத்தினங்களும் வைத்திழைக்கப் பெற்ற விலை மிகுந்த வாயில் கதவுகள்—சோழவீரரிடம் அடிப்படுகின்றன. மருத நிலம் போன்ற மண்ணை நகரும் பட்டு வீழ்கிறது. மலையரண்கொண்ட புராதனமான மலாயூர் எனும் நகரும் மண்டியிடுகிறது. கடலரண் கொண்ட மாயூரதிங்கம் எனும் நகரென்ன, கடுஞ் சமர் புரிந்த இலங்கா சோகம் எனும் நகரென்ன, மாபப்பாளம் வளப்பந்துறை தலைத்தக்கோலம் மாடமாலிங்கம் பூம்பொழில் சூழ்ந்த மானக்கவரம் காவல் மிகுந்த கடாரம்—இவை யெல்லாம் பணிகின்றன !

மேலே காட்டிய விவரத்தை உற்று நோக்கின், கப்பல் சண்டையில் அவன் இணையிலா வீரன், சோழ

மக்களும் அப்படியே—என்பன புலனாகும். பிடிபட்ட இடங்களின் பெயரை நோக்கி, அவை பாண்டி நாட்டில் இருந்தவை என்று மேனாட்டு ஆசிரியரொருவர் முதலில் சொன்னார். எனினும், பெரிய கப்பல் சண்டைக்குப் பாண்டி நாட்டில் இடமில்லை, அப் பாண்டி நாட்டின்மீது கப்பல் படை கொண்டு பாயவும் அவசியமில்லை—என்று அப்பால் புலப்பட்டது. புலப்படவே, அந்த இடங்களெல்லாம் பர்மா தேசத்தைச் சேர்ந்தன என்று தமிழ் வல்லுநரும் ஆராய்ச்சியாளரும் முடிவு கட்டினர்.

தமிழ் நூல்களின் துணைகொண்டு பார்க்கையில், காழகம், கடகம் என்பன கடாரத்தையே குறிக்கும். தமிழ் வல்லுநரோ கடாரம் என்றால் பர்மாவையே காட்டும் என்பர். ஸ்ரீ விஜயா என்பது பர்மாவிலுள்ள புராதன புரோம் நகராம். இதற்கு ஸ்ரீக்ஷேத்திரம் என்று ஆதியில் ஒரு பெயருண்டு. ஸ்ரீவிஜயமும் ஸ்ரீ க்ஷேத்திரமும் ஒன்றே. நக்கவரம் என்பது வங்காள குடாக் கடலிலுள்ள லாகடிவ் தீவுகளையே குறிக்கும். மாயூரதிங்கம் என்பது ரங்கூனையே சுட்டுவதாம். ரங்கூனுக்கு ஒரு பழைய பெயர் ரிசிய சிருங்கம். பண்ணை என்பது பர்மாவிலுள்ள பான்பான் எனும் இடத்தைக் குறிக்கும். இலங்கா சோகம் என்பதும் ஐராவதி நதியின் அருகே யிருந்த ஒரு தலமாம்.

பர்மாவிலுள்ள பெகு எனும் பிரதேசத்திலே இரண்டு பெரிய ஜெயஸ்தம்பங்கள் உள்ளன. அவற்றின் அமைப்பும், தோற்றமும் தென்னிந்தியச் சாயலைக் காட்டும். அவ்விரண்டும் தன் வெற்றியின் அடையாளமாக ராஜேந்திரன் கட்டியவை. பர்மாவிலுள்ள பெஸீன் எனும் துறைமுக நகரிலும் பூர்வகாலச் சின்னங்கள்

சில தென்படும். அவை சோழர் சமைத்தவை என்பதே அங்கு வழங்கும் கர்ண பரம்பரைச் செய்தியின் கருத்தாம். சென்ற சிறிது காலமாக ஆராய்ச்சியாளரில் சிலர், "கடாரம் என்பது மலாய் நாட்டி லுள்ளது. மலாயூரும் பிற இடங்களும் ஸுமத்ரா, ஸயாம் இப்பிரதேசங்களின் கரையில் உள்ளன" என்று சொல்லுகிறார்கள். தமிழ் நூல்களையும், தமிழ் வல்லாரையும் ஆதாரமாகக் கொண்டால், கடாரம் என்பது தென் பர்மா நாடு என்பதே தெளிவு.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சோழ ராஜதானியாக விளங்கிய காவிரிப்பூம்பட்டினத்தை வர்ணிக்கையில்,

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கடுங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் துகிலும்
தென் கடல் முத்தும் குண கடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத்(து)உணவும் காழத்(து) ஆக்கமும்"

என்று பத்துப் பாட்டில் "பட்டினப் பாலை" பேசுகிறது. "கலிங்கத்துப் பரணி"யிலே சோழ இராச பாரம்பரியத்தை உரைக்கையில், "களிறு கங்கை நீருண்ண மண்ணையில் காய் சினத் தொடே குலவு செம்பியன், குளிருந் தெண்டிரைக் குரை கடாரமுங் கொண்டு மண்டலங் குடையுள் வைத்ததும்," என்னும் அடிகள் காணப்படும். காழகம், கடாரம் என்றால் பர்மாதேசம் என்றே உரை யாசிரியர்கள் உரைப்பர்.

கிழைக் கடல்வழியே வடக்கிலும் கிழக்கிலும் தெற்கிலுமாகத் தொன்றுதொட்டு ஏராளமான சாமான்கள் கப்பல் மூலம் தமிழகத்துக்கு வந்துகொண்டிருந்தன. இங்கிருந்தும் கீழ்த்தேசங்களுக்கெல்லாம் அபரிமிதமாகச் சரக்குகள் போயின. ராஜேந்திரனது காலத்தில் இந்த வர்த்தகத்துக்குக் கடலிடையே குந்தகம் ஏற்பட்டது போலும். ஏற்படவே, அவ்வர்த்தகத்தைக் காக்கவேண்டி, ராஜேந்திரன் தன் கடல் படையுடன் செல்லலானான்.

மேலும் கடாரத்தின் கொற்றவனது மூதாதையர் பௌத்தர். நாகபட்டினத்திலே அன்னார் புத்த விஹார மொன்று கட்டி வைத்தனர். இதற்கு ராஜ ராஜனது அனுமதியை அன்னார் நாடினர். அவனும் சரியென்றான்; அன்றியும் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி ஆனை மங்கலம் எனும் கிராமத்தை மானியமாகவும் அளித்தான். ராஜ ராஜவிஹாரம் என்று அதற்குப் பெயர் ஏற்பட்டது.

அதுகண்டு கடாரக் கொற்றவர் நம் சோழ ராஜ்யத்தினிடம் பற்றுக்கொண்டனர்; அதன் அடையாளமாக ஆண்டு தோறும் சோழ சாம்ராஜ்யத்துக்கு அன்னவர் காணிக்கையும் செலுத்தி வந்தனர். ராஜேந்திரன் காலத்தில் அக்காணிக்கை வந்து சேரவில்லை போலும். இது காரணமாகவும் ராஜேந்திரன் படைகொண்டு செல்ல நேர்ந்தது. மேலும் தமிழ் மக்கள் ஆதிகாலந்தொட்டு அந்தமான், நிகோபார் தீவுகள் என்ன, பர்மா சயாம் முதலிய தேசங்கள் என்ன, மலாய் சாவகம் போன்ற தீவாந்திரங்கள் என்ன இந்த இடங்களுக்கெல்லாம் சென்று, குடியேறி யிருந்தனர். தாயகத்திலிருந்து அத் தமிழ் மக்களுக்கு ஓர் உற்சாகம் ஊட்டவும் ராஜேந்திரன் அங்கெல்லாம் சென்றிருக்க வேண்டும்.

ராஜராஜனும் ராஜேந்திரனும் மகத்தான சாம்ராஜ்யமொன்று கண்டு, நாற்றிசையிலும் திக்விஜயம் செய்து, கப்பல்படையின் உதவிகொண்டு இரு கடல்களிலும் வெற்றிக் கொடி தூக்கித் தமிழகத்தைத் தலைசிறக்க வைத்தனரென்பது தேற்றம்.

ஆ[illegible]ா - சிம்மன்

உடலின் மானத்தை மூடிக்கொள்ளவே, ஆடைகள் தரிக்கிறோம். மானிடருக்கு ஆடை ஓர் அங்கம்; ஓர் அழகு; அவ்வளவுதான்! காலத்திற்கேற்ற ஆடை உண்டு. குளிர் காலத்தில் கம்பளிஉடை தரிப்போம். வெயில் காலத்தில் மெல்லிய ஆடை பூண்போம். உடை மாறுவதால், உள்ளம் ஏன் மாறவேண்டும்? மாறத்தான் நியதி உண்டோ?

மதமும் ஒரு வகையில் ஆடை போன்றது. உள்ளத்தினுக்கு உயர்வு ஊட்டவும், உயிர் உய்யவுமே மதப் போர்வை கொள்வர் மானிடர். மதம் மாறினால், மனமும் மாற வேண்டுமோ? மாறத்தான் அவசியம் உண்டோ? மத மாற்றத்தால், பிறந்த இடம் மாறுபடாது. கூடப் பிறந்த—அல்லது ஒரே இடத்தில் பிறந்த— மக்களுடன் மாறுபடவும் காரணம் கிடையாது. மதமாற்றத்தினால் மனமாற்றம் ஏற்படின், அது மனப்பிராந்தியே! மத உண்மையை நன்கு உணராத மயக்க நிலையே! வேறில்லை.

ஆண்டவன் ஒருவனே! பலர் பலவாறாக அவனுக்கு நாமமிடலாம், உருவம் சமைக்கலாம், இருப்பிடம் அமைக்கலாம், விதவிதமாகப் பாமாலை சூட்டலாம்! எல்லாம் ஒரு பரம்பொருளைக் குறித்தே! இதுவே எம் மதத்தினுக்கும் சம்மதமான உயரிய உண்மை! அந்த உயர் நிலையை, உண்மையை உணராதாரே நான் ஹிந்து, நான் முகம்மதியன், நீ கிறிஸ்தவன், அவர்கள் யூதர்—என்று பேசுவர்,

பிணங்குவர், வழக்காடுவர், சச்சரவும் போடுவர்! சமூகத்தையும் சீர்குலைப்பர்! என்ன உலகம் இது!

முகமது ஷா என்பான் ஒரு முகம்மதியன். அமர சிம்மன் என்பான் ஒரு ஹிந்து. ஒருவருக்கொருவர் தற்செயலாக நேசம் கொள்கின்றனர்! ஒருவர் பொருட்டு மற்றவர் உயிர் விடுகின்றனர்! உயிர்ப் பிச்சை தருவதாக அலாவுதீன் சக்கரவர்த்தி வாக்களித்தும் என்ன? "மானமே பெரிது! நேசமே உயர்ந்தது! நட்பே நிகரற்றது!" என்று இருவரும் இயம்புகின்றனர்; பெருமை பெறுகின்றனர். இருவரையும் கொன்று குவித்த பகைவனே அது கண்டு, அஞ்சுகின்றான்; அலறுகின்றான். அந்நிகழ்ச்சி வருமாறு:—

நமது டில்லி நகரிலிருந்து அரசு செலுத்திய சுல்தான்கள் பலராவர். அவர்களில் ஒருவன் அலாவுதீன். அவன் கில்ஜி வமிசத்தான். அவனுக்கு முன்பு, முகம்மதிய ரெவரும் தண்டுடன் விந்திய மலையைத் தாண்டித் தட்சிணத்தில் புகுந்ததில்லை. தட்சிணத்தின் மீது முதன்முதல் படைகொண்டு பாய்ந்தவன் அவனே. அப்பால், அவனது தளகர்த்தனான மலிக்காபூர் என்பவனே நம் தமிழகத்திலும் புகுந்து, புராதன ஆலயங்களையும் நகரங்களையும் அழித்து ஆனந்தம் கொண்டவன்.

தந்தையின் சோதரனை வஞ்சனை வழியில் வதைத்து டில்லியிலே அரியணையில் அமர்ந்தான் அலாவுதீன். அப் படுகொலை கண்டு, கில்ஜி ராஜ குடும்பத்தாரில் பலரும் கொதித்தெழுந்தனர். அன்னாரையெல்லாம் அவன் வெட்டிச் சாய்த்தான் உடைவாள் கொண்டு. இரத்த ஆற்றினையே ஓர் அகழியாகக் கொண்டது

அவனது சிம்மாசனம்! முடியுடையோன் சதா நடுங்கி நிற்க நேரும் என்பது மூதுரை யல்லவா? அத்துடன் உட்பகையும் கூடிக்கொண்டால், கேட்கவேண்டுமோ?

முகம்மதியரிலும் பற்பல வகுப்பு, பிரிவு, மரபு உண்டு. அடிமை ராஜ வகுப்பாருக்குப் பின்பே, கில்ஜி வகுப்பார் டில்லி சுல்தான்கள் ஆயினர். அடிமை ராஜ வகுப்பைச் சேர்ந்த பலர் இங்கிருந்தனர். அத்துடன் இங்கே முகம்மதிய ராஜ்யம் ஏற்பட்டது கேட்டு, வெளியிடங்களிலிருந்தும் ஏனைய முகம்மதிய வகுப்பார் இங்கு வந்தனர். வந்ததும் இங்குள்ள கட்சிப் பிரதி கட்சிகளில் கலந்து கொண்டனர். அன்னவரில் ஒரு சாரார் மொகலாயர்!

அயலக மொகலாயர் அடிக்கடி இந்தியாவின் மீது படை கொண்டு புகுந்தனர்; கொள்ளை கொண்டு போயினர்; சிலரோ இங்கேயே தங்கிச் சிம்மாசனம் ஏறவும் முயன்றனர். அத்தகைய ஒரு சிலர் டில்லியரசிலே அலாவுதீன் என்பானிடம் சேவித்து நின்றனர். சிறப்பாக அவ்விதம் சேவித்து நின்றோரில் பலரும் துரோகிகளாக மாறியதுண்டு. துரோகியாக மாறுமல் உண்மையில் சேவகம் புரிந்து வந்தவன் ஒருவன் முகம்மது ஷா எனப்படுவான்.

அம்முகம்மது ஷா உயர் வீரன்; ஒப்புவமை இல்லாத ஊழியன்; மதிநலம் மிகப் படைத்த பேரமைச்சன்; அலாவுதீனது பிரதம தளபதி; பிரதம மந்திரி யுமாம்: அலாவுதீனுக்கு ஆபத்து நேர்ந்த போதெல்லாம், நன்மதி கூறி நெறிப்படுத்தியவன்; அரசியலை அறவியலாக்க முனைந்தவன். அவன் மரபினரான மொகலாயர் அடிக்கடி கலகமாய்க் கிளம்பவே, அவன் மீது அலாவுதீனுக்கு ஐயுறவு பிறந்தது. கலகத்திற் கெல்லாம்

அவனே மூல புருஷனென முடிவு கட்டினான் மதி பிசகிய அம் முடிமன்னவன்.

மூர்க்க வேந்தன் சீறின், ஆந்துணை ஏது?' 'ஆற்றங் கரையின் மரமும் அரசறிய வீற்றிருந்த வாழ்வும் விழு மல்லவா? முகம்மது ஷாவைப் பூண்டறுத்து விடவேண்டு மென ஆணையிட்டு விட்டான் அலாவுதீன். பகிரங்கமாகப் பூண்டறுப்ப தன்று; அந்தரங்கமாகப் பூண்டறுப்பதாம். முகம்மதுஷா அதனை உணர்ந்தான்; தன் குடும்பத்தைக் காக்க எண்ணினான்; உண்மை ஊழியத்தினுக்கு இதுவோ பலனெனப் பிரலாபித்தான்! வீணே வெட்டுண்டு விழ அவன் விரும்பவில்லை. எங்கேனும் அடைக் கலம் புகுதலே சிறந்ததெனக் கொண்டான்.

அந்நாளிலே வடஇந்தியாவில், ரஜபுத்திரர் மிகச் சிறந்த வீர புருஷர்; வேந்தர் மரபினருமாம். முகம்மதிய வேந்தர் பலரும் அந்த ரஜபுத்திரரைப் போரில் புறங் காண முடியாமல் போகவே அவர்களை அணைத்து ஆதரித்துக்கொண்டே இங்கு வாழ நேர்ந்தது. அத் தகைய ரஜபுத்திர வேந்தரில் சிறந்த ஒருவன் அமரசிம்மன். ரணதம்பரம் அவனது ராஜதானி. அத் தலை நகரம் பலவகை அரண்வலி பொருந்தியது; அன் றளவும் அன்னிய ரெவர்க்கும் பணியாததுமாம்.

அத்தகைய ரணதம்பரக் கோட்டையில் தஞ்சம் புகக் கருதி முகம்மது ஷா புறப்பட்டான், தன் மனைவி மக்களுடன். ஒருவரும் அவன் போக்கை உணரவில்லை ஆயினும் அலாவுதீனது ஒற்றரோ கண்குத்திப் பாம்பு போல் அதனைக் கண்டு கொண்டனர்; பிறரறியாமல் அவனை மாய்க்கவும் பின் தொடர்ந்தனர். வில்லிலிருந்து விடுபட்ட அம்பே போல், முகம்மதுஷா வெகு வேகமாகப்

பயணமாகிருன். அப்போது அவன் மனேயாள் பூரண கர்ப்பவதியா யிருந்தாள்.

வாயு வேகமான குதிரை மீது அவளே அமர்த்தி இட்டுச் செல்லுகிருன் முகம்மதுஷா. அந்த அதிர்ச்சியை அத்தேவி தாங்க இயலவில்லே. ஒன்றிரண்டு நாள் கழித்து நடக்க வேண்டிய பிரசவம் முன்னதாகவே நடந்துவிடும்போல் இருந்தது. அந்தோ! ஆண்டவனே! என்று அவள் அலறிஞள். அச்சமயம், வேட்டைக்கு வந்து, தொலேவில் இளேப்பாறி நின்ற அமரசிம்மன் காதில் அத் தீனக் குரல் சென்று தாக்கியது. உள்ள நிலேயை உணர்ந்தான் அவ்வுத்தமன். உடனே தனது பல்லக்கை வரவழைத்து அதில் அம்மாதை அமர்த்தி ரணதம்பரம் சேர்த்தான்.

ரணதம்பரக் கோட்டையினுள் புகுந்து, அமரனது அந்தப்புரத்தில் அம்மாதராள் காலடி வைத்ததுதான் தாமதம், பேரழகு வாய்ந்த பாலனெருவனேப் பெற்றெடுத்தாள் அப்பெண்மணி! முகம்மதுஷா அதுகண்டு மிக்க ஆறுதலடைந்தான். அவன் குடும்பத்தாரும் கவலே விண்டு, அங்கே நிம்மதியுடன் தங்கினர். ஆபத்தில் உதவிய அமரசிம்மனே முகம்மதுஷா மனமார வாழ்த்த, "இக்கோட்டை உள்ள வரையில் உனக்கும் உன் குடும்பத்துக்கும் எத்தகைய ஆபத்தும் நேராது" என முகம்மதுஷாவுக்கு உறுதி கூறிஞன் அமரசிம்மன்.

பிறந்த குழந்தையின் ஜனன பலன் எவ்வாறு உளதென அரண்மனேச் சோதிடர் ஆராய்ந்து பார்த்தனர். உடனே அவர்களின் முகம் வாடியது உள்ளம் கருகியது; உடலும் நடுங்கியது. அதுகண்ட அமரசிம்மன் "அகமும் முகமும் அயர்வதேன்?" என்ருன். சோதிடரோ

உள்ளதை உள்ளவாறு உரைக்க அஞ்சினர். "வருவது வருக; உள்ளதை உள்ளவாறே விளம்புக" என்று பணித்தான் அப்பார்த்திபன். அப்போதும், சோதிடர் தயங்கி, மறைத்துப் பேச முயன்றனர். முடிவில் விதியின்றி அவர்கள் மொழிந்தது :

"அரசே! பிறந்த குழந்தையின் யோகம் மகா மோசம். பிறந்த இடம் பாழ்படுமென நாளும் கோளும் நவில்கின்றன. இடம் மட்டுமா? எண்ணிறந்த உயிர்ப் பலியும் இந்த இடத்தில் நிகழும். தவிர, இக்கோட்டையின் காவலனும் உயிரிழப்பான் என்றே புலப்படுகின்றது. இந்த அழிவைத் தவிர்க்க வேண்டுமாயின், ஒன்று, இச்சிசுவை இப்போதே வாளுக்கு இரையாக்குதல் வேண்டும்; இன்றேல் குழந்தை, தாய், குடும்பம் எல்லாரையும் இவ்விடம் விட்டு விரட்டுதல் வேண்டும்".

அமரசிம்மன் அது கேட்டதும், சிறிதும் கலங்கவில்லை; மற்று, அத்தேவியின் திக்கற்ற நிலை கண்டு, தஞ்சம் அளித்தோம். தலைவிதி எப்படியோ? எங்ஙனமாயினும் சரி, தஞ்சமடைந்தோரைத் தள்ளிவிடுதல் தர்மமோ? அல்லது பச்சைக் குழந்தையை வெட்டிப் புதைத்தல் ஒண்ணுமோ? உயிருக்கஞ்சி ஓடி வந்துள்ள முகம்மது ஷாவைக் கைவிடின், நம் குலதர்மம் என்னாகும்? நம் மரபின் மானம் யாதாகும்? அம்மை பவானி இருக்கிறாள்! எல்லாம் அத்தேவி எண்ணியபடியே, நடக்கும்; ஏன் கவலை நமக்கு?—என்றே துணிந்தான்.

மன்னவனது மனநிலை கண்ட அமைச்சன் அறிவழிந்தான்; ஆறாத்துயர் கொண்டான், இன்றளவும் அழியாத ரணதம்பரக் கோட்டை அழிவதோ, என்று கலங்கினான். ஒரு குடும்பத்தைக் காக்கக் கருதி, ஆயிரம் ஆயிரமாகக்

குடும்பங்களைப் பறிகொடுக்க நேருமே என்று பதறினான்! மன்னவனும் அமரசிம்மனிடஞ் சென்று, சோதிட பலனைச் சுட்டிச் சொல்லி, நாட்டின் நலனே பெரிதென வற்புறுத்தினன்; அலாவுதீனது கடும்பகைமை கிட்டுமெனவும் எச்சரிக்கை செய்தான்! எதற்கும் அமரசிம்மன் தளரவில்லை.

ஈதிங்ஙனமிருக்க. அலாவுதீனது மன நிலையைப் பார்ப்போம். ரணதம்பரக் கோட்டையை மடக்க வேண்டுமென, அச்சுல்தானுக்கு நீண்ட நாளாக மிக்க ஆவலுண்டு. அத்துடன் முகம்மதுஷா அங்கே சென்று, அடைக்கலம் புகுந்த செய்தியும் அவனுக்கு எட்டிற்று. உடனே, ஒரே அம்பில் இருவரை வீழ்த்துவது போல், காரியஞ் சாதிக்க அவனுக்கு முனைப்பும் உதித்தது.

பல சொல்வானேன்? டில்லிப் படைவீரர் ஒரு நூறாயிரவர் திரண்டனர்! ரணதம்பரக் கோட்டையைக் குலைப்பதுடன், முகம்மதுஷாவையும் சிறை செய்து திரும்ப வேண்டுமென அலாவுதீன் ஆணையிட்டான். சரியென்று கிளம்பினர் முகம்மதிய வீரர்.

அமரசிம்மனது வீரர் அது கேட்டு, ஆர்த்தெழுந்தனர். ரணதம்பரக் கோட்டைக்கு அப்பால் பத்து மைல் தூரத்தில் இருதிறத்துப் படைகளும் கைகலந்தன. ஒரு வருஷ காலம் சண்டை நடந்தது. முடிவில் டில்லி வீரரிலே பாதிப்பேர் போர்க்களத்தில் மாண்டு மடிந்தனர். டில்லியின் பிரதம தளபதியும் கொல்லப்பட்டுப் போனான். எஞ்சிய படைஞரோ முதுகுகாட்டி ஓடினர். அஃதறிந்தான் அலாவுதீன், பரிபவங்கொண்டு பல்லைக் கடித்தான்; இந்த ரஜபுத்திரர் எம்மாத்திரம் என்றான். நானே நேரில் செல்வேன், என்று எழுந்தான்.

முன்னம் சித்தூர் ரஜபுத்திர வீரரிடம் சீரழிந்தது போதும்; ரணதம்பரக் கோட்டையின் மீது பாய வேண்டாம், என்றனர் அமைச்சர். "பிரதம தளபதியின் சாவுக்குப் பழிவாங்க வேண்டும்; முகம்மதுஷாவையும் பிடித்துக் கொணர்தல் வேண்டும்," என்று கர்ஜித்தான் அலாவுதீன். பின்னர் ஒரு பெரும் படையுடன் அக் கோட்டையை நெருங்கினன்; தன் படைகளைப் பாங்காக அணி வகுத்தான். பற்பல போர்முனைகளில் பண் பட்டவன் அல்லவா அப்பெரு வேந்தன்?

அத்தகைய வேந்தனை நேரில் வந்திருத்தல் கண்டு, ரணதம்பர அமைச்சன் கதி கலங்கினன்; தலைக்குக் கொள்ளி விலைக்கு வாங்கிக்கொள்வது போல், முகம்மது ஷாவுக்கு அபயமளித்து நாடும் நாமும் நலிய விதி யுளதோ, என்றான். சோதிடர் சொன்ன அன்றே முகம்மதுஷாவை ஓட்டியிருந்தால், இத்தொல்லை நமக்கு ஏது? என்றிசைத்தான்; ஒருவனுக்காக ஊரே அழிதல் ஒண்ணுமோ என்று தேம்பினன்; அண்டின வரை ஆதரித்தலே நம் கடமை என்றான் படைத் தலைவன். ஆருயிர் போயினும் அக்கறை இல்லை என்றான் அரசன் அமரசிம்மன்!

அவ்வளவுதான். போர்க்கோலம் பூண்டான் அப் பெருவீர சிம்மன். அருமையரசன் போர்க்கோலம் பூண்டது கண்டு, வீரர் அனைவரும் சிங்கநாதஞ் செய்து கிளம்பினர். அலாவுதீன் பக்கமோ ஒரு லட்சத்து இரு பத்து ஐயாயிரம் வீரர். அமரசிம்மன் பக்கமோ இருபதா யிரவரே. மீண்டும் பன்னிரண்டு மாதம் டில்லிப் படைகள் அக்கோட்டையை வசஞ் செய்ய முனைந்து, சமர்

முறுக்கின. ரஜபுத்திரரோ என்று மிலா வீரங்காட்டி அமர் செய்தனர்.

ராஜபுத்திர வீரரின் வீராவேசங்கண்டு அலாவுதீன் நிலை கலங்கினான். அவன் படைஞரும் அறிவழிந்து அஞ்சி நின்றனர். தோல்வி கொண்டு திரும்ப அச்சுல்தானுக்கு மனமில்லை. "புறமுதுகிட்டுத் திரும்பின், சூளுரை பேசிச் சிறிவந்தது என்னுவது? பழி வாங்க வேண்டும் என்ற வைரம் என்னுவது? முகம்மதுஷாவைச் சிறை செய்யும் சீற்றம் என்னுவது? அழியாக் கோட்டையை அகப்படுத்தினேம் எனும் பேர் பெறும் பிடிவாதம் என்னுவது? அலாவுதீன் திகைத்தான். முன்னும் ஓடவில்லை, பின்னும் ஓடவில்லை. முடிவில் படைத்துணை வேண்டி டில்லிக்கு ஆள் அனுப்பினான்.

அங்ஙனமே டில்லியிலிருந்து துணைப் படைகள் ஏராளமாக வந்தன. உடனே முன்னையினும் மும்மடங்கு மூர்க்கமாக அவன் போர் புரிந்தான். புரிந்தும் அவன் படைஞர் ஆற்ருது போயினர்; அலமந்தனர். மலையிலே தலையை மோதிக்கொள்வதில் யாது பயன்?—என்றான் டில்லிப் படையின் தளகர்த்தன். வாகை மாலை சூடாமல் டில்லிக்குத் திரும்பின், நமது அரசு ஆட்டம் எடுத்து விடுமே, என் செய்வது? என்றான் அலாவுதீன் வாள் வரிசை பலன் தரவில்லை என்றால், வஞ்சனை வரிசையில் முயன்று பார்க்கலாமென்றான் அமைச்சனொருவன்.

அவ்வாறே வஞ்சனை-வலை வீசினான், அலாவுதீன். ரணமல்லன் எனும் அமைச்சன்—ரணதம்பர நாட்டரசனது நண்பன்—காசாசையில் சிக்கிவிட்டான். உடனே அப்பாவியோ அலாவுதீன் பக்கம் சேர்ந்து கொண்டான். கோட்டையின் உளவெல்லாம் விண்டுரைத்தான்

சுல்தானுக்கு! அலாவுதீனை அமரசிம்மன் புறங்காண வேண்டிய சமயம்; ரணதம்பரக்கோட்டை ஓரிடத்திலே தகர்ந்தது. அழியாக் கோட்டை, அசையாக் கோட்டை ஒருபுறம் தகர்ந்தமை கேட்டதும் உளவன் தோளறி விட்டான், இனி ஊரழிந்துபோம்-என்று முடிவு கட்டினன் அமரசிம்மன்.

ஆயினும் அமரன் மனந்தளராமல், முன்னேறினன் தன் வீரருடன், எதிர்த்து வந்த பகைவர் அனைவரையும் வெட்டிக் குவித்தான். அலாவுதீனும் படுகாயமடைய வேண்டிய சமயம். மெய்க்காவலனொருவன் அச்சமயம் அவனை வேறிடம் இழுத்துச் சென்றதனல் அவன் உயிர் தப்பியது. அமரசிம்மனது போர்முனைப்பைக் கண்டு "இஃது மானிட வடிவமா? அல்லது வீரமே வடிவு கொண்டு வந்த விந்தையா?" என்று அலாவுதீன் வியந்தும் பயந்தும் நின்றான், தூரத்தில். சுருங்கச் சொல்லின், விதிவலியால் அமரன் ஆவியிழந்தான்!

உடனே அக்கோட்டைக்குள் புகுந்தான் அலாவுதீன். வெட்டிச் சாய்த்த மரம்போல் அமரனது உடலம் தென் பட்டது. உயிரிழந்த உடலாயினும், அதன் முகத்தில் ஓர் ஒளி, வீர ஒளி, வீசுவதைக் கண்டு பிரமித்தான் டில்லி சுல்தான். பின்னர் முகம்மதுஷா எங்கே? முகம்மதுஷா எங்கே? என்று கறுவினன்; சவக் குவியலின் மீது ஏறி ஏறி, யாங்குளான் முகம்மதுஷா? என்று தேடினன்; அங்கே ஒரு மூலையில் வீர வாலிபனொருவன் தன் தந்தையின் கதியையும் கவனியாமல், குற்றுயிராய்க் கிடக்கும் முகம்மதின் காயங்களை ஆற்றி நின்றான்.

அதுகண்டான் அலாவுதீன்; ஆத்திரம் மிகக்கொண் டான். முகமதுக்குக் காயம் கட்டி நிற்கும் வாலிபனை

உற்று நோக்கினன். உடனே, "இவன்தான் அமரன் மகன். தந்தைக்கு ஏற்ற பிள்ளை!" என்று வியந்து பேசினன். பின்னர் முகம்மதுஷாவின் எதிரே நின்று பல்லைக் கடித்தான் உதட்டை மடித்துக் கொண்டு, உறுத்து நோக்கினன். "பேதாய்! அழியாக் கோட்டை என்று கருதி, இங்கே வந்து அடைக்கலம் புகுந்தனையே! என்ன பலன் கண்டாய்? என் கையில் இப்போது சிக்கிக்கொண்டாய்!" என்று எள்ளனஞ் செய்தான்.

மீண்டும் அவனை நோக்கி, "முகம்மது! இப்போதேனும் நன்மதி கொண்டனையா? எங்கே ஓடி ஒளியினும், நிழல் போல் உன்னைத் தொடர்ந்து வருவேன் என்பதைக் கண்டு கொண்டனையா? இது கிடக்கட்டும். அந்தோ! உன் காயமெல்லாம் காயங்கள்! உன்னை இக்கோலத்தில் காண என் மனம் நடுங்குகின்றது. நல்லது. உன் காயங்களை எல்லாம் கட்டியாற்றி, உனக்கு உயிர்ப் பிச்சையும் அளித்தால் என்னிடம் எவ்வாறு நன்றி காட்டுவாய்?" என்று அலாவுதீன் வினவினன்.

முகம்மதுக்கோ தொண்டைக்குழியில் உயிர் துடிக்கின்றது. எனினும் தக்க மூலிகைகள் ஊட்டினல், பிழைக்கலாம் என்று தெரியும். அது பற்றியே, அமரசிம்மனது மைந்தன் முனைந்து நிற்பதையும் அவன் அறிவான். எதிரே நிற்கும் மூர்க்கனது குணத்தையும் நன்கு உணர்வான். பழிவாங்கவே அவன் வந்திருப்பதையும் கண்டு கொண்டான். அச்சமயத்தில் — உயிர்ப் பிச்சை கிடைக்கக்கூடிய சமயத்தில்— யாதுசொன்னன் அம் முகம்மது ஷா?

"டில்லி வேந்தே! எனக்கு உயிர்ப் பிச்சை யளித்தால் எங்ஙனம் நன்றி காட்டுவேன் என்பதை உணராயோ நீ? நான் நன்றி காட்டும் விதம் கேள். என் உடம்பு குணமாயின், உடனே ஒரு பெரும் படை திரட்டுவேன். உன் மீது போருக்குக் கிளம்புவேன். உன்னை ஒரேயடியில் மாய்ப்பேன். அந்த டில்லியைக் கைப்பற்றுவேன். இம் மைந்தனை—அமரசிம்மனது இளஞ் சிங்கத்தை—டில்லி யரியணையில் அமர்த்துவேன். அவனுக்கு உற்ற துணையாக நின்று, ஆட்சியை நடத்தச் செய்வேன்,'' என்றான் அத்தீர புருஷன்.

அலாவுதீனுக்கோ அவ்வுரை கேட்டதுதான் தாமதம். சினவெறி பொங்கிவிட்டது. போர்முனையில் சின்னத்தனஞ் செய்யக்கூடாது என்பதை அவன் மறந்தான். குற்றுயிராய்க் கிடப்போன்மீது தன் யானையை ஏவினான். முகம்மதின் தலையை இடறச் செய்தான். உடலை விட்டு உயிர் பிரியும் தருணம், "நாட்டையும் மக்களையும் பாராமல், ஆருயிரை விடுத்து, வீரசுவர்க்கம் புகுந்த உத்தமனைக் காணச் செல்வேன்'' என்று கூறிக் கண்ணை மூடினான் முகம்மதுஷா!

முகம்மதின் ஆவி பிரிந்த பின்பு அச் சவத்தைக் கண்டான் அலாவுதீன். மனம் சலித்தான்; உடல் சலித்தான்; சொல்லும் சலித்தான்; சிறிது நேரம் தம்பம்போல் அசைவற்று நின்றான்; முடிவில் அவனது உடலை உரியவாறு அடக்கஞ் செய்யும் வண்ணம் ஆணையிட்டான்.

ஆபத்தில் புரிந்த அரிய உதவியை அலாவுதீன் மறவானென எண்ணிக் கிடந்தான் ரணமல்லன். தக்க பரிசும் கிட்டுமென ஆவலுடன் நின்றான். அப்போது

"உண்ட வீட்டினருக்கு இரண்டகம் நினைத்த பாவியை வெட்டித் தள்ளு," என்றான் அச்சுல்தான். துரோகத்திற்கு ஏற்ற பலன்தான் என்பது போல் ரணமல்லன் சிரம் பூமியில் உருண்டது.

முடிவில் அலாவுதீன் டில்லி திரும்பினான். திரும்புகையில், "என்னே அமரசிம்மனது அடைக்கல தர்மம்! என்னே முகம்மதுஷாவின் நன்றியறிவு!" என்று வாழ்த்தினான் தன்னையும் மறந்து.

உயிர்ப் பிச்சை

மத்திய இந்தியாவில் மகத்தான ஒரு கோட்டை சண்டிகிரி! பரம்பரையாக அதன் அதிபர் ரஜபுத்திரர், அன்னார் வீரவிளக்கு. அவர்களை மடக்க அரும்பாடு பட்டனர் பலர். இவர்களில் முக்கியமானவர் பட்டாணியர், அரபியர், பாரசீகர், மங்கோலியர் முதலியோர். பன்னிரண்டு, பதின் மூன்று, பதினான்கு, பதினைந்து —இந்த நூற்றாண்டுகளில் அக்கோட்டை கண்ட உயிர்ப் பலி அனந்தம். ஆயினும் அக்கோட்டையின் புகழ் குலைய வில்லை.

பதினாறும் நூற்றாண்டின் துவக்கத்திலே அக் கோட்டையின் தலைவன் மேதினிராய். அப்போது மாளவம், கூர்ஜரம் இந்நாடுகளை முகம்மதிய மன்னவர் ஆண்டிருந்தனர். அவர்களுக்கும் மேதினிராய்க்கும் கடும்பகை உண்டு. அவனை முதுகுகாண அம்மன்னவர் எத்துணையோ முறை முனைந்தனர். பெருமலையைப் பிளக்க முயலும் குத்தீட்டியின் கதி யாதாகும்? அக்கதி தான் அம்மன்னவருக்கு!

ஒரு நாள் மாலை வேளை மேதினிராயும் அவன் மைந்தனும் குதிரை மீது சவாரிபோயினர். நெடுந்தூரம் சென்றதும், தொலைவிலே ஓர் உயரிய குன்று தென்பட்டது அதன் உச்சியின் மீது! இருவரும் குதிரை மீது செல்லா நின்றனர். மகா செங்குத்தான சிகரத்தில் நின்று, அடித்தலத்தைப் பார்ப்பின், பாதாளம் போன்ற பள்ளத்தைக் கண்டு யாவருக்கும் மனம் பதைக்கும்.

"எந்தாய்! என்னே இக்குன்றின் உயர்வும் செங்குத்தான நிலையும்!" என்றான் மைந்தன்.

"அப்பனே! இது கொலைக்குன்றம். வைரிகளைப் பிடித்துக் கொணர்ந்து, இதன் பள்ளத்தில் தள்ளி விடுவர் மாளவ முகம்மதிய மன்னர். பள்ளமோ ஒரே பாதாளந்தான். கீழே விழுந்தோர் கட்டாயம் மடிய வேண்டியதுதான். மேலே ஏறி வருவதென்பது இயலாத காரியம்," என்றான் மேதினிராய். "அப்படியா! கொலைக்குன்றமா இது? பாதாளம் போன்ற பள்ளமா? கீழே இறங்கிப் பார்த்து வருகிறேன்," என்று இறங்கி விட்டான் இளைஞன் ராஜசிம்மன்.

"பச்சைப் பாலன் படபடப்பாக இறங்குகின்றனனே, இளங்கன்று பயமறியாது என்பர். நம் குலக் கொழுந்தினுக்கு ஆபத்து நேரக்கூடாதே!" என்று கருதி மேதினிராயும் தன் மைந்தனைத் தொடர்ந்து பள்ளத்தில் இறங்கலானான். மைந்தனோ அதற்குள் குன்றின் அடிப்பாகம் சேர்ந்து விட்டான். குடவாயில் கதிரவன் மறையும் வேளை. செங்கிரணங்கள் நாலாபக்கத்திலும் ஒளிபரப்பி நின்றன.

தொலைவிலே கழுகுகள் ஆகாயத்தில் கூட்டம் கூட்டமாக வட்டமிட்டு நின்றன. அப்பறவைகளில் பலவும் கீழே விரைந்து பாய்வதையும், பின்பு மேலே வேகமாகக் கிளம்புவதையும், அப்புதல்வன் கண்டான். உடனே அவ்விடம் நோக்கி விரைந்தான். சுற்றிலும் முள் புதர். அப்புதரின் நடுவிலிருந்து ஜோதி யொன்று கிளம்பிற்று. சூரிய கிரணம் தாக்கிய நாகமணியின் ஜோதியே யென அவன் கண்டு கொண்டான்.

இதற்குள், அந்தரத்தே வட்டமிட்டு நின்ற கழு கொன்று சரேலெனக் கீழே பாய்ந்து, மாமிச பிண்ட மெனக் கருதி, செந்நிறமான ஜரிகைத் தலைப்பாகை யொன்றைக் கால்நகங்களில் இடுக்கிக் கொண்டு உயரக் கிளம்பிற்று. உடனே அவ்விடத்தைக் கூர்ந்து நோக்கி ஞன் ராஜசிம்மன். மிகவும் தீனமான மனிதக்குரல் காதில் படலாயிற்று. அக்குரல் வரும் திக்கில் காதைத் திருப்பி உற்றுக் கேட்கலானுன். அப்போது இளவலின் காதில் பட்டது இது:—

"என்ன உலகம் இது? தமையனுவது, தம்பியாவது? எல்லாம் வீண் மாயை. உடன் பிறந்தே கொல்லும் வியாதி என்பது மூதுரை. அப்பழமொழி பொய்க்குமோ? அரசின் ஆசை யாரை விட்டது? அனர்த்தமே விளைக்கும் என்பது சத்திய வசனமன்ருே? என்னுடன் பிறந்தான், என் இளைஞன்; அரசின் மீது ஆசை கொண்டு என் உயிரை வாங்கும் சமயம், வரிப்புலி யொன்று விரைந்து வந்தது. இன்றேல், என் சிரத்தை அவன் சீவியிருப் பான். விதியில்லை. என்னை இப்படுகுழியில் தள்ளி விட்டுப் பறந்து விட்டான்.

"ஆண்டவனே! அல்லாவே! ஏக நாயகனே! எனது மரண வேதனையை என்னென்று இயம்புவேன்? என் தலையை அப்போதே வாங்கியிருந்தால், இப்போது நலமாக இருந்திருக்குமே. வெள்ளெலும்பெல்லாம் நொறுங்கிக் குற்றுயிரும் குலை உயிருமாகக் கிடக்க, நான் என்ன பாதகம் செய்தேனே? இக்குன்றின் உச்சியும், பாதாளம் போன்ற இப்பள்ளமும் பெருவீரருக் கும் வயிற்றைக் கலக்குமே. நிமிர்ந்து நோக்கவும், என் நெஞ்சம் கூசுகின்றதே! மாளவநாட்டு மன்னவன்,

சுல்தானெனச் சிறந்தவன் கதி இதுவோ? சிறிது சிறிதாகவா நான் சாகவேண்டும்!

"கிடு கிடு பள்ளத்தில் நான் கிடப்பதை யாவரே அறிவர்! கழுகுகள் வந்து வட்டமிடுகின்றனவே, எஞ்சியுள்ள உயிரைப் புசிக்க! பள்ளத்திலிருந்து நான் மேலே ஏறினல் அன்றோ, என் தம்பியை—அப்படு பாவியை—நான் பழி வாங்கலாம். மேலே ஏறுவது எப்படி? என் அவயவங்களைச் சற்றே அசைக்கவும் இயலவில்லையே! உடலினின்று உயிர் பிரியும் சமயம். இப்போதும், வர்மமே கொள்கின்றது என் மட நெஞ்சம். அன்னய்! உன் புதல்வரில் ஒருவன் இவ்விதமா திக்கின்றி மாய்வது?

"கண்ணுக்கினிய, கருத்துக்கிசைந்த என் காதலியே! என் கண்மணியே! உன்னைக் கைப்பிடித்து ஓராண்டு கூட ஆகவில்லையே! உன் கதி இனி என்னகும்? உன் வயிற்றிலுள்ள கருவும் யாதாகும்? அக்கரு வளருமோ? வதைபடுமோ? ஆண்டவனே அறிவான். அண்ணனைக் கொன்றவன் அண்ணியையும் கொன்றே களிப்பான். அக்கரு முற்றி வளரின், முடியில் இடி விழும், என்று அவன் கலங்குவான் அன்றோ? ஆதலின் அக்கருவையும் சிதைப்பான். அந்தோ! அந்தோ! உற்றார் உறவினர் அனைவரையும் விட்டுப் போகின்றேன். யாருமற்ற பாவியாக மரிக்கின்றேன். என் உடலுக்கு விதிப்படி அடக்கம் ஏது? கழுகுகளுக்கே நல்லுணவாதல் வேண்டும்."

இவ்விதம் தீனக் குரலில் புலம்புவதை ராஜசிம்மன் உற்றுணர்ந்தான். உடனே வேல் கம்பை ஊன்றி, அப்புதரினூடே பாய்ந்தான். அங்கே பதுங்கிக் கிடந்த

வேங்கை யொன்று உறுமியது. அதனைக் கண்டான் அக்காளை. உடனே அவனது குத்தீட்டி அதன் உயிரைப் பருகிவிட்டது. பின்னர் அப்புதரின் நடுவே நோக்கினுன் அப்பாலன். ராஜவடிவுங் கோலமுந் தாங்கிய புருஷ வடிவ மொன்று தென்பட்டது. அவ்வடிவத்தின் கை, கால்கள் சிறிதும் அசையவில்லை. ஆனுல் உயிருள தென்று உணர்த்த மூச்சு மட்டும் தென்பட்டது.

அவ்வளவில் அவ் வடிவத்தை ராஜசிம்மன் வாரி யெடுத்தான். தோள் மீது சார்த்திக்கொண்டான். உச்சியின் மீது கன வேகமாக ஏறினுன். இதற்குள் கையெழுத்து மறையும் சமயம் வந்துவிட்டது. குன்றின் உச்சி சேர்ந்தான். தந்தையைக் காணவில்லை. உடனே கூவியழைத்தான். அருமந்த மைந்தன் குரல் கேட்டு மேதினிராயும் உச்சி சேர்ந்து அவ்வடிவத்தைக் கண்டு திடுக்கிட்டான். சுருங்கச் சொல்லின் தோளில் சாத்திக் கொண்ட வண்ணம், அசுவத்தின்மீது அமர்ந்து, அதனைத் தட்டிவிட்டான் ராஜசிம்மன்.

மேதினிராயும் உடன் சென்றுன் தனது உயர் பரியின் மீது. அப்போது அப் புதல்வன், "எந்தையே! கொலைக்குன்றத்தில், பகைவனைக் கீழே தள்ளியா பழி தீர்ப்பது? சுத்த வீரர்க்கு அழகோ இது? சோதாக்கள் செய்யும் வேலை இது! பகைவனைப் பழிவாங்கவேண்டின், முன்னெச்சரிக்கை கொடுக்க வேண்டும். பின்னர் வாள் வரிசை காட்டவேண்டும். அதில் ஆவியை வாங்க வேண்டும், ஆண்மையுடன்! வஞ்சனையாக உயிரை வதைத்தல் அழகோ? ஆண்மையோ? தர்மந்தான் ஆகுமோ?" என்றுன்.

"புதல்வ! வீரம் என்பது பிறவிக் குணம். தர்ம யுத்தம் என்பதும் அப்படியே. அக்குண நலம் படையாதார் கோழைச் செயல் புரிதல் வியப்போ! மணி முடியின் மீது மோகம் பிறந்து விட்டால், பலருக்கும் மதி பிசகும்; பராக்கிரமம் புரளும்; மனம் மாசுறும்; மாபாவம் செய்யத் தோன்றும். இஃதே உலக இயற்கை!" என்றான் மேதினிராய். "அன்னாரை மானிடரோ நான் ஒரு போதும் கொள்ளேன். மிருகமெனவும் மதியேன். விலங்குகளிடமும் வீர தீரம் புலப்படுமே. என்னே! மானிடரின் மயக்கம்" என்றான் இளவல்.

அவ்வாறு பேசிக்கொண்டே இருவரும் சண்டிகிரி சேர்ந்தனர்; மாளிகை புகுந்தனர். மலரணையில் அவனைக் கிடத்தினர்; மருத்துவரை அழைத்தனர்; மூலிகையும் பிறவும் ஊட்டினர்; அம்மானிடனைக் காப்பாற்ற வகை துறை யாவும் தேடினர். நாட்கள் சில சென்றன. அம்மனிதனது காயங்கள் ஆறும் முகம் காட்டின. நொறுங்கிய எலும்புகளும் கூடிக் கிளைக்க முற்பட்டன. மேலும் சின்னாள் சென்றதும் மாளவ நாட்டின் மன்னவன், சுல்தான் என்னும் நாமம் படைத்தவன், முற்றிலும் குணமடைந்தான்.

உடனே சுல்தான் தன் மஞ்சத்தை விட்டு எழுந்தான்; மைந்தன் ராஜசிம்மனை மார்புறத் தழுவிக் கொண்டான். "ஆண்டில் நீ இளைஞன். ஆயினும் என்னை? எனக்கு ஆருயிர் ஊட்டினாய் அன்றோ? ஆதலின் நீயே என் தந்தை. பெற்றெடுத்த பிதாவினும் பிழைப்பூட்டும் பிதாவே பெரியவன்! என்னை ஈன்ற தந்தையே இன்று உன் வடிவில் வந்துள்ளார் போலும்! உன் குலத்தாரை ஜென்மப் பகைவரென என் இனத்தார் கருதி

யுளரே! என்ன பாவம் இது! என்ன பழி இது? நானும் சிந்தை திரிந்து, முன்னம் உன் தந்தை மீது சீறிக் கிளம்பினேன். முதுகில் அடியுண்டு ஓட்டம் பிடித்தேன். இன்றுணர்ந்தேன் உன் தந்தையின் குண நலத்தை. உங்கள் இருவரையும் ஆண்டவன் அல்லா வாழ்த்துவாராக. வேறென்ன விளம்புவேன்? உங்களுக்கு என்ன கைம்மாறு புரிவேன்?'' என்று புலம்பினன்.

ராஜசிம்மன் அதுகேட்டு "அன்ப! ஆபத்தில் தவிப்போனைக் காத்தல், தலை கொடுத்தேனும் மீட்டல் எங்கள் குல தர்மம். இப்பாரத பூமியின் பெருங்குணமுமாம். நாங்கள் கடமையையே செய்தோம். கைம்மாறு விரும்போம். கொற்றவ! வீணே பேசுற வேண்டாம். காயங்கள் எல்லாம் ஆறிவிட்டன. ஆயினும் பழைய உடம்பு வரவில்லை. அதுவரையில், இம்மாளிகை நின்னது. நாங்கள் உன் பணியாளர், சத்தியம். இது வீண் உபசார வார்த்தையன்று,'' என்று மொழிந்தான்.

அவ்வேளை சுல்தானது தாயும் மனைவியும் முகமூடி அணிந்தவராய், மேதினியின் மாளிகையில் புகுந்தனர். தாயைக் கண்டதும் பள்ளத்தில் பாயும் நீரேபோல் விரைந்து அவள் பாதம் வணங்கினன். சுல்தான் பின்பு தன் இளமனைவியை நோக்கிக் கண்ணீர் உகுத்தான். உயிருடன் சந்தித்தோமே என்று இருவரும் ஆண்டவனை ஏத்தினர், தொழுதனர், துதித்தனர். அச்சமயம் மே தி னி ரா யு ம் அங்கு வந்து சேர்ந்தான். உடனே சுல்தான் தனது ஆசனம் விட்டெழுந்து தாயையும் தேவியையும் பார்த்து இங்ஙனம் பகர்வான்:

"என் தாயே! அன்புடைய தேவி! உங்கள் புண்ணியம் நான் செத்துப் பிழைத்தேன். தம்பியும் நானும் சவாரிபோன சமயத்திலே என்னைக் கொலைக்குன்றிலிருந்து கீழே பள்ளத்தில் தள்ளினன், என் தம்பி. அவனே ஜென்மப் பகைவன், எனக்கு. அவ்வேளை கழுகுகள் வட்டமிட்டு என் பாகையை இறைச்சியெனக் கவர்ந்த வேளை எனக்கு உயிர்ப்பிச்சை யளித்தான் இப்பாலன். இப் பெரியாரும் உடனிருந்து உதவினர். இவர்களும் இவர்கள் குலத்தாரும் ஜென்மப் பகைவரென நம்மவர் நவிலுதல் அடுக்குமோ? ஆண்டவனுக்குத்தான் ஏற்குமோ?

"உடன்பிறந்தவனே என்னை மாய்க்கப் பார்த்தான். உடன் பிறவா இந்த இருவரும என்னைக் காத்தளித்தனர். மலையின் சிகரத்திலிருந்து என் சோதரன் என்னைத் தள்ளுகையில், இன்றோடு உலக வாழ்வு தீர்ந்துவிட்டதென நினைத்தேன். தெய்வமே என்று அலறினேன். தெய்வம் இவ்விருவரின் வடிவில் வந்து, அருள் புரிந்துளது. பெற்ற தந்தை எனக்கு மாளவ நாட்டின் அரசுரிமை தந்தார். கூடப்பிறந்தவனே அதனைப் பறித்துக்கொண்டான் வஞ்சனையாக. நீங்கள் இருவரும் என்னைக் காத்தளித்தீர்கள். உங்கள் இருவரையும் நான் என்றும் மறவேன். என் தாயும் மனைவியுமே சாட்சி."

அவ்வாறு சுல்தான் பேசி முடிக்குமுன் தூதுவனொருவன் வந்து, மேதினிராயிடம் ஓலை யொன்றை நீட்டினன். அதனைப் பிரித்துப் பார்த்தான் அவ்வீர வேந்தன். உடனே கோபங்கொண்டு சிரித்தான். மீசையை முறுக்கிவிட்டான். உடைவாளில் கை வைத்தான். அயலே நின்ற ராஜசிம்மன் "எந்தாய்! அடியேன்

இருக்கிறேன். ஆணை கொடுங்கள். தங்களுக்குக் கோபம் ஊட்டியவன் யாவன்? அவனுக்கு என் உடைவாள் பாடம் புகட்டும்" என்று கர்ஜித்தான்.

மேதினிராய் மொழிவான்: "பிரிய மைந்த! அம் மாளவத்தான் மமதை கொண்டு விட்டான். இச் சுல்தானை நாம் இப்போதே கைவிடவேண்டுமாம். இல்லாவிடின் நம் சண்டிகிரியில் மண்டமர் நேருமாம். என்ன ஆணவம்! ஸாகிப்கானும்! சுல்தானைச் சிதைக்க முயன்றவனும்! நல்லது!"

சுல்தான் அது கேட்டான். கதி கலங்கினன். உயிர்ப் பிச்சை யளித்தவருக்கு ஆபத்து நேர்வதோ என்று சிந்தித்தான். அவன் தாயோ "என்னே என் வயிறு புரிந்த பாவம்! இதற்கா பிள்ளை பெற்றேன்! தர்மவான்கள் மீது துவஜம் கட்டி விட்டானே! மூத்தவனை மாய்க்க முயன்றான். பெற்ற தாயையும் அண்ணியையும் தெருவில் ஓட்டிவிட்டான். உயிர்ப்பிச்சை பெற்று சுல்தான் வாழ்வதைக் கண்டு களிக்க வந்தால், இங்கிருந்தும் என்னை வெருட்டப் பார்க்கிறான். என் மூத்த பிள்ளைக்கு உயிர்ப் பிச்சை தருவதுடன் எனக்கும் பூரண கர்ப்பிணியான—உங்கள் மருகியான-இப்பெண்ணுக்கும் உயிர்ப் பிச்சை ஈந்தருளல் வேண்டும்" என்று இரந்தாள்.

"பாட்டி! சிறிதும் பயம் வேண்டாம். அண்டினோரை ஆதரித்தல் எங்கள் குலக்கடமை. எங்கள் குல தெய்வம் அம்மை பவானியே சாட்சி. இதோ என் உடைவாள். இதன் மீது ஆணை. சிறிதும் கலங்க வேண்டாம்," என்று ஆண்மையுடன் ஆறுதல் கூறினன் ராஜசிம்மன். "குழந்தாய்! உன்னையொத்த பாலன்—பெருவீரன் இவள் வயிற்றில் பிறத்தல் வேண்டும்," என்று மகிழ்ந்து

பேசினள் அத்தொண்டு கிழவி. மேதினிராயும், "தாயே! தாபம் தணிக. உங்களுக்கு எள்ளளவும் தீங்கு நேராது. சாகிப்கானைச் சிறை செய்து, உன் முன்னிலையில் கொணர்ந்து நிறுத்துவோம்," என்று வீரவுரை நிகழ்த்தினன்.

உடனே ராஜசிம்மன், "இனிய தந்தாய்! சாகிப்கான் எம்மாத்திரம்? சண்டிகிரியின் சிறப்பை அச்சிறியன் அறியான். அவன் படை திரட்டுமுன்னம் நம் வீரர் அவன் நாட்டில் புகுந்து சிங்கநாதஞ் செய்தல் வேண்டும். அவன் கொழுப்பை அங்கேயே வடிக்க வேண்டும். என் குத்திட்டி மீது ஆணை. அவனை உயிருடன் கொணரவா? உயிரை வாங்கித் தலையை மட்டும் கொணரவா? இரண்டில் எதுவும் செய்யத் தயார். எல்லாம் தங்கள் கருணை. தங்கள் ஆணை," என்று சீறினன் போர்க் கோலத்துடன்.

அது பார்த்தான் சுல்தான். ஒரு பக்கம் அவனுக்குத் துயரம். ஒரு பக்கம் ஆச்சரியம். உயிரளித்த பிதாக்களுக்கு ஆபத்து நேர்வதோ என்ற துக்கம். அண்டி நிற்கும் தன்னையும் பிறரையும் காக்க இள வீரன் செய்யும் சிங்கநாதங் கண்டு ஆச்சரியம்! ஆயினும் சண்டை என்றால், முடிவு யாதாமோ என்ற கலக்கம். அதறிந்த ராஜசிம்மன், "கவலையேன்? கலக்கமேன்? என் உடைவாளும் குத்திட்டியும் பகையை வதைத்தே உறையில் புகும்" என்றான்.

சண்டிகிரி வீரர் கிளம்பி, மாளவ நாட்டின் மீது பாய்ந்தனர். இதற்குள் மாளவத்தான் படை வகுப்பும் பாங்காக எழுந்தது. சாகிப்கானே படைத் தலைமை பூண்டு நின்றான். ராஜசிம்மன் வாளுருவி வீசுகையில், பிணக்காடு குவிதல் கண்டு, சாகிப்கான் கலங்கினன்.

மதி பிசகி மண்டமரில் புகுந்தோமே என்று பொரு மினன். தொழுவத்தில் காலை விட்டுக்கொண்டால் ஆப்பு வந்து தாக்காமல் விடுமோ என்று அலறினன்.

மூன்று நாள் மொய்யமர் நடந்தது. சண்டிகிரி வீரரிலும் சிலர் செத்து வீழ்ந்தனர். அன்று மாலை புகு வதற்குள் சாகிப்கானைச் சிறை செய்வதாகச் சபதங் கூறிக் குதித்தான் பதினறு வயதுப் பாலன். வாலிபனது வெகுளிகண்டு, மாளவப் படைகள் மதி யிழந்தன. நிலையும் பெயர்ந்தன. சாகிப்கான் எங்கே, சாகிப்கான் எங்கே? என்று ராஜசிம்மன் உறுமி, முனைமுக மெங்கும் திரிந்தான். சாகிப்கானுக்கோ அச் செய்தி கேட்டு, நெஞ்சு துடிக்கலாயிற்று.

என் செய்வான் அப்பேதை. தன் தோழரை முன்னே நிறுத்திப் பின்னே பதுங்கி நின்றான். அவனைச் சூழ்ந்து நின்ற அனைவர் சிரமும் வெட்டுண்டு நிலத்தில் உருண்டன. அதன்மேல் விதி யின்றித் தன் உடைவாளில் கை வைத்தான் சாகிப்கான். வைக்கவே ராஜசிம்மனது வாள் வீச்சு, அக் கானது தலையைக் குறி கொண்டது. உடனே அக் கான் தொப் பென்று கீழே விழுந்து, அண்ணனுக்கு உயிர்ப்பிச்சை யளித்ததுபோல், தம்பிக்கும் அளித்தல் வேண்டும் என்று மண்டியிட்டான்.

நிலத்திலே தொப்பென்று சாகிப்கான் வீழ்ந்த தினல், ராஜசிம்மனது வாள் வீச்சுக்குத் சற்றே தப்பினன் உயிர் பிழைத்தான். மண்டியிடு மொருவனைப் பழி வாங்காமல் பராமரித்தல் ராஜபுத் திரரின் சீரிய குணம். பல சொல்லி என்ன? சாகிப் கானைச் சிறை செய்து சென்று தந்தையின் பாதம்

பணிந்தான் அத் தனயன். உடலெங்கும் உதிர மொழுகும் சாகிப்கானுக்கும் சண்டிகிரி மருத்துவர் தோன்றிச் சிகிச்சை பலவும் செய்தனர். சின்னுளில் சாகிப்கானும் குணமடைந்தான்.

குணமடையவே தாயைக் கொணர்ந்து அவன் முன்னே ஆசனத்தில் அமர்த்தினர் ரஜபுத்திர வீரர். உடனே அச்சாகிப்கான் தலையிறக்கங் கொண்டு "தாயே! தாயே! படுபாவி யான்! எப்பிழை செய்தாலும் தாய் போல் தண்ணளியுடன் மன்னிப்பார் கிடையாது. சண்டிகிரியைத் தரைமட்டஞ் செய்வதாக வீறு பேசினேன். இப்போதோ, அக்கிரியில் சிறைப்பட்டு உன் பாதத்தில் கிடக்கிறேன். ராஜசிம்மன் இட்ட பிச்சை உயிர் தாங்கி நிற்கிறேன். உங்கள் இஷ்டம், என் பாக்கியம்!" என்று கண்ணீர் வடித்தான்.

இதற்குள் சுல்தானும் அங்கு வந்தான். அன்னையைத் தொழுதான். தொழும் தமையனையும் தம்பி தொழுதான். இரு புதல்வரையும் பார்த்துக் கண்ணீர் பெருக்கிய வண்ணம், "மக்காள்! உங்களை ஈன்றெடுத்த தந்தை இப்போது இல்லை. பிழைப்பூட்டிய தந்தை இதோ இருக்கிருர். அவர் சொற்படி கேளுங்கள். சுகம் பெறலாம்," என்றனள் அக் கிழவரசி. உடனே சோதரர் இருவரும் கை கூப்பி மேதினிராயை வணங்கி நின்றனர். கிழவரசியை நோக்கினுன் வீர நரபதி.

அச்சமயம் ராஜசிம்மன் நவில்வான்: "முறைப்படி மூத்தவன் சுல்தான் அரசாள வேண்டும். இளையவன் சாகிப்கானே தனி மாளிகையும் குறுநாடும் பெற்று வாழ்ந்து வருவானுக. இதுவே என் விருப்பம், பாட்டி! உன் கருத்து யாது? உத்தரவு எப்படி?"

பாலனது தீர்ப்புக் கேட்ட கிழவி, அப் பெரு மகனைக் கட்டித் தழுவினள்; உன் கருணையே கருணை என்றாள்; உன் விருப்பத்தின்படியே இருவரும் நடத்தல் வேண்டும் என்றாள் இன்பக் கண்ணீர் விடுத்து.

பெற்ற மனம் அல்லவா? உயிர்ப் பிச்சையுடன் குறுநாடும் பெற்ற சாகிப்கானை முதலில் கட்டித் தழுவினள் கிழவி. பின்னர் சுல்தானை மார்புற அணைத்துக் கொண்டாள். என் வயிற்றில் பாலை வார்க்கும்படி இருவரும் நடந்து வாருங்கள் என்றாள். ராஜசிம்மனும், அவன் தோழரும் உடன் வர, அச் சோதரர் இருவரும் மாளவம் சேர்ந்தனர். சுல்தானுக்கு முடி கவித்தான் ராஜசிம்மன். சாகிப்கானும் குறுநாடொன்று பெற்றான்.

சின்னாள் சென்றதும், சுல்தான் மனைவி கருவுயிர்த்தாள். ஆண் மகவு ஒன்று பிறந்தது. அதற்கு ராஜா சாகிப் என்று பெயர் சூட்டி மகிழ்ந்தாள் அக் கிழவி. குழந்தையின் தாயும் ராஜசிம்மனைத் தனது இளைய சோதரனென மதித்து, அடிக்கடி பிறந்தகம் போவது போல் சண்டிகிரிச் சென்று, சீரும் செலுத்தியும் பெற்று வந்தனள்!

நானக் சாபம்

சூரிய கதி தவறாது. வேத வாக்குப் பொய்க்காது. மகான்களின் வாக்கும் அப்படியே! இந்திய மகான்களில் ஒருவர் குரு நானக். அவர் காலம் 1469 முதல் 1539 வரையில். பஞ்சநதப் பிரதேசத்தில் அவர் தோன்றினார். ஆசியா, ஐரோப்பா, ஆபிரிக்கா முழுதும் அவர் பிரயாணஞ் செய்தார். சிக்கிய சமயத்தையும் கண்டார். அவரே சிக்கியரின் முதல் குரு.

அவர் காலத்திலே டில்லிமா நகரிலிருந்து லோடி ராஜவம்சம் மறைந்தது. மொகலாய ராஜவம்சம் இங்கே முளைத்தது. அம் மொகலாய மன்னவரில் முதல்வன் பாபர் எனப்படுவான். பழைய அரசு மறைந்து புதிய அரசு முளைத்த சமயம். தேசத்திலே அமைதி இல்லை, ஒழுங்கு இல்லை, நீதியும் இல்லை, நியதியும் இல்லை. பார்த்தார் அப் பெரியார்; பெரிதும் பதைத்தார்.

"ஆடு மாடு அறுப்பார்போல் ஆகிவிட்டனரே அரசர். கொடுமையே அவர்களின் ஆயுதமாகத் துலங்குகின்றது. காக்கும் கடமை என்பது இறக்கை கொண்டு பறந்துவிட்டது. பொய் எனும் அந்தகாரமே எங்கும் சூழ்ந்துள்ளது. சத்தியம் எனும் சந்திரன் மறைந்து போய்விட்டான்," என்று பிரலாபித்தார்.

பஞ்சநத பூமியோ வேதங்கள் பிறந்த தலம்; உபநிஷதங்கள் ஓங்கிய இடம்; உண்மைகள் உதித்த பூமி; உயர்வெலாம் ஜனித்த பிரதேசம். அத்தகைய

பூமி பரிதபியாநின்றது. இந்து மதம், இஸ்லாமிய மதம், புத்த மதம் எனும் மதங்கள் தம்முள் மாறுபட்டுக் கிடந்தன. இந் நிலையில் உயர்ந்த உண்மைகளை உணராத மதப் பெரியார்களை அவர் கண்டித்தார்; மூடப் பழக்க வழக்கங்களைக் கடிந்தார்; மெய்யான போதமே புகட்டி வந்தார்.

பாபர் என்பான் அவர் பெருமையைக் கேள்வியுற்றான்; அவரைப் பார்க்க விரும்பினான்; ஆளை ஏவி அவரை அழைத்தான்; வேண்டியது தருவேன் என்றான். குருநானக் யாது சொன்னார்?

"பாபர் சக்கரவர்த்தியே! கேள். துறவி என்போன் வேந்தரிடஞ் சென்று பிச்சை கேட்பானோ? கேட்டால், அவன் முட்டாள் அல்லவோ? ஆண்டவன் ஒருவனே வேண்டியதைத் தருபவன்!"

'துறவிக்கு வேந்தன் துரும்பு' அல்லவா? பாபரின் சமுகம், அவர் போகவில்லை. அவனிடம் ஒன்றும் வேண்டவில்லை. அக் குருவின் முக விலாசத்தை அவன் கேட்டறிந்தான்; அவரது போத உயர்வையும் சிந்தித்துப் பார்த்தான்; தன்னிடமிருந்து ஏதேனும் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று மீண்டும் அவரை வேண்டிக்கொண்டான்.

அதற்கு, "பாபரே! நான் பெரும் பசி கொண்டுள்ளேன். ஆண்டவனைக் காண வேண்டும், ஆண்டவனை அடைய வேண்டும்—என்பதே என் பசி! கடவுளை எனக்குக் காட்ட வல்லையோ? வல்லையாயின், காட்டு. வேறெதனையும் வேண்டேன்!" என்றார் குரு நானக்.

பஞ்சாபிலே ஒரு நகரம், ஸையத்புரி எனப்படும். அதனைத் தரைமட்ட மாக்கினன் பாபர். உடனே குரு

நானக் அவனெதிரே சென்றார். "என்ன அரசன் நீ? இந்துஸ்தானத்தை அழிக்கிறாய்; அச்சுறுத்துகிறாய்! அழகு, அழகு!" என்று இடித்துக் கூறினார்; சுடச்சுடப் பேசினார்!

பின்னர் மக்கள் படுந் துயர் கண்டு அவர் மனம் விண்டார்; மாழ்கினார்; கரைந் துருகினார்; கடவுளும் கண் மூடிக் கிடக்கிறானே!—என்று கதறினார், முடிவில்.

"பரமனே! படுகொலையும் பேரவதியும் உன் கண்ணில் படவில்லையோ? நீ எங்கும் பிரகாசன் அல்லவோ? எல்லா உயிர்களிடத்தும் நீ இருக்கிறாய் அன்றோ? உனக்கு உன் மக்களது வருத்தம் புலப்படவில்லையோ?" என்று தெய்வத்தை நோக்கிக் கேட்டார். தெய்வமே கதியென்று மானிடர் வாய்மூடிக் கிடக்கக் கூடாது என்றும் அவர் உணர்ந்தார். உடனே மானிடரை நோக்கி,

"ஒரு வல்லவனை மற்றொரு வல்லவன் புடைத்தால், ஒரு கொடியவனை மற்றொரு கொடியவன் வதைத்தால், அது கண்டு யாரும் கோபம் கொள்வதற்கில்லை. ஆட்டு மந்தையின் மீது சிங்க மொன்று பாயும்போது அம் மந்தையின் தலைவன் தன் ஆண்மையைக் காட்ட வேண்டாமோ? வாய்மூடிக் கைகட்டிக் கிடப்பதோ?" என்று வீரம் பேசினார்.

ஒரு சமயம் பல சிறையாளரை அவர் கண்டார்; கால் விலங்கையும் கை விலங்கையும் பார்த்தார்; பின்பு தன்னை மறந்தார்; சமாதியில் புகுந்தார்; சிறிது நேரஞ் சென்றதும் நினைவுகொண்டார்; "வேந்தே! எல்லாரையும் விடுவித்துவிடு" என்று கூறினார்.

மற்றொரு சமயம் குரு நானக்கைப் பிடித்துச் சிறையில் போட்டனர். அது கண்டு அவர் அஞ்சவில்லை; அசையவில்லை. அங்கிருந்த ஏனைய சிறையாளரை அவர் கண்டார்; அவர்களுக்கு ஆறுதல் கூறினர்; தேறுதல் உரைத்தார்; தீரமும் புகட்டினர்.

சக்திக்கும் கீர்த்திக்கும், அறிவுக்கும், வீரத்துக்கும், தீரத்துக்கும் ஞானத்துக்கும் பேர்போன மக்கள் மனவலி குன்றி மதிநலம் இன்றி, உடல் வளம் குறைந்து, உள்ளம் உடைந்து நடைப் பிணங்களாய்க் கிடந்தனர். ஆடு மாடுகளை ஓட்டிக்கொண்டு போவதுபோல அவர்களின் பிரிய மனைவியரையும் குழந்தைகளையும் அதிகாரிகள் சாய்த்துக்கொண்டு போன காலையிலும் அவர்கள் சும்மா இருந்தனர்.

அரசின் நிலை கண்டு அப்பெரியார் பகர்ந்தது இது: “பாபமே அரசன்! பேராசையே அமைச்சன்! பொய்யே பொக்கிஷதார்! காமமே புரோகிதன்! அத்தகைய அரசனும், அமைச்சனும், பொக்கிஷதாரியும், புரோகிதனும் கூடிக் கலந்து ஆட்சி புரிகின்றனர், நடைப் பிணங்களைப்போல் மடமாந்தர் கைகட்டி வாய் பொத்திக் கிடக்கின்றனர். என் செயலாம்?”

அவருக்குப் பாபாபுதன் என்று ஒரு சீடன். மர்த்தனன் என்று மற்றொரு சிஷ்யன். இருவரும், குருவே! —என்றனர்; கோரக் காட்சி சகிக்க முடியாது—என்று மொழிந்தனர்; குருவும் வாளா இருப்பதோ?—என்று கேட்டனர். அப்பெருமான் பார்த்தார்; பரமனை நினைத்துப் பாடத் தொடங்கினர். இரு பாடல்களின் சாரம் இது:

"சீடர்களே! ஆண்டவனது வாசகம் உரைப்பேன், கேளுங்கள்! காபூலிலிருந்து பாபர் வந்தான். கொடுமையுடன் அடிபிடி கட்டாயமாக இறை தண்டுகிறான்.

"அவன் ஆட்சியிலே நீதியும் நியதியும் பறந்தோடி விட்டன. பொய்யே எங்கும் பரிமளிக்கின்றது. காஜியும் வேதியரும் கண் மறைந்து விட்டனர். பேயே பூசையிலும் மணவினையிலும் பூசாரித்தனம் பண்ணுகிறது!

"இஸ்லாமிய மாதரும் வேதம் ஓதி, 'ஆண்டவனே!' என்று அலறுகின்றனர். உயர்குல, இழிகுல இந்து மாதரும் அவ்விதமே புலம்புகின்றனர்.

"ஆண்டவனுக்கு மஞ்சனமும் குங்குமமும் போய், இரத்தக் காப்பே நடக்கின்றது. பிணங்களே நிறைந்த பெருநகரிலிருந்து பேசுகின்றேன். ஆண்டவனது குணகணங்களைக் கூறுகின்றேன். எச்சரிக்கையும் கொடுக்கின்றேன்.

"அனைவரையும் படைத்தவன் ஆண்டவன். இன்னின்னார்க்கு இன்னின்ன வேலையென்று விதித்தவனும் அவனே. மறைந்து நின்ற அனைத்தையும் (கொடுமைகள் அனைத்தையும்) அவன் பார்த்துக்கொண்டேயிருக்கிறான்.

"ஆண்டவன் தர்ம சொரூபி. அவன் செயல்களும் நியாயமாகவே இருக்கும். சரியான தண்டனை அவன் கொடுப்பான். அவனை எவரும் தப்ப முடியாது.

"மக்களுக்குத் துன்பம் இழைப்போரின் உடலங்களைத் துணிபோல் ஆண்டவன் கிழித்தெறிவான்! நான் சொல்வதை இந்தியா ஞாபகத்தில் வைத்துக்கொள்ளும்.

“துன்பம் இழைக்கும் அக்கொடியர் இங்கே 1578-ல் வந்தனர். 1597-ல் போய்விடுவர். பின்பு பெரு வீரனொருவன் தோன்றுவான். உண்மை இது. சத்தியமுமாம்!”

அடியார் வாக்கு ஆண்டவன் வாக்கினும் வன்மையுடையது! மொகலாய பாபர் 1526-ம் ஆண்டிலே பானிபட் யுத்தத்தில் ஜயித்தான். உடனே டில்லியில் பட்டமேறினன் பாதுஷாவாக! அதற்குமுன் நான்கு முறை அடுத்தடுத்து இந்தியாவின்மீது பாய்ந்தான். முதன் முறை பாய்ந்து வந்ததையே அங்கு வழங்கும் வருஷம் 1578 என்றார் குரு நானக். அது கி. பி. 1521 ஆகும்.

1597-ல் அவர்கள் மறைவர் என்றார் குரு நானக். 1597 என்பது கி. பி. 1546-ம் வருஷம். பாபர் (1526-1530) வரையில் அரசாண்டான். பாபர் கண்மூடும் சமயம் அவன் மைந்தன் ஹுமாயூன் பட்டம் பெறவேண்டும். அம் மைந்தனுக்கோ படுநோய் கண்டது. பிழைக்கமாட்டான் என்றே பாபர் கலங்கினன். முடிவில் அம்மைந்தன் பிழைத்தான்.

ஹுமாயூன் என்பான் (1530-1540) பத்து வருஷம் அரசாண்டான். அந்தப் பத்து வருஷ காலத்தில் அப்பப்பா! எவ்வளவு சண்டை! எவ்வளவு இரத்தக்களரி! முடிவிலே 1640-ம் ஆண்டில் ஷேர்ஷா எனும் வீர புருஷன் கிளம்பினன்.

ஹுமாயூனைத் துரத்தித் துரத்தியடித்தான்; எல்லோரும் அவனைக் கைவிட்டனர். மனைவியோ பூரண கர்ப்பவதி. கருவுயிர்க்க இடம் கிடைக்கவில்லை, நேரமும் கிட்டவில்லை. காடு, மலை, வனம், வனாந்தரமெல்லாம் அவன் கடந்தோடினன்.

பதினைந்து வருஷம் கழித்து ஹுமாயூன் மீண்டும் பட்டம் பெற்றான். பெற்றுமென்ன? சிறிது நாளைக்கெல்லாம் மாடியிலிருந்து கீழே வீழ்ந்து மாண்டு போனான். பின்பு அவன் மகன் அக்பர் பட்டத்துக்கு வந்தான். வந்ததும் ஹிமு எனும் வீரன் கிளம்பி மல்லுக்கு நின்றான். பின்பு அக்பரின் அத்தை புருஷன் பைராம் கானும் பகைத்து எழுந்தான்.

மொகலாய அரசு 1526-ல் முளைத்து 1546-ல் மறைந்தது. 1555-ல் அக்பர் தோன்றி மீண்டும் முளைக்க வைத்தான். இடை நடுவில் தோன்றிய ஷெர்ஷாவின் ஆட்சி நேர்மையே நேர்மை! அக்பரின் ஆட்சிக்கு ஷெர்ஷாவின் நேர்மையே வழிகாட்டி.

பெருமகன்

வெல்லம் தின்பான் ஒருவன், விரல் சூப்புவான் மற்றொருவன்! மொகலாய மன்னவனை அக்பரை "மகான் அக்பர்" என்பார்கள்; அவனது அரசிறை ஒழுங்கு அதிநேர்த்தி என்பார்கள்; அவனும் அவன் பின்னேரும் சமைத்த மாடமாளிகைகள் சிறபச் செல்வமாம் என்பார்கள். இவ்வளவுக்கும் வழி காட்டியவன் யார்? அடிகோலியவன் யார்? ஷெர்ஷா என்பவனே! ஆயினும் புகழை யெல்லாம் வாரிக்கொண்டான் அக்பரென்பான்.

காசிமா நகருக்குத் தென் கிழக்கே ஸஹஸ்ரம் எனும் ஊரொன்று உளது. அங்கே வனப்பின் வடிவான கல்லறை (மகூதி)யொன்று காணலாம். முன்னது அவன் பிறந்த இடம், பின்னதோ அவன் கண் மூடிய தலம். அவ்வழியே செல்வோர் இன்றும் அக் கல்லறை (மகூதி) கண்டு, கையெடுத்துக் கும்பிடுவர்; அரசிறையை ஒழுங்கு செய்து உயரிய கோமான் என்று புகழ்ந்து பேசுவர்; அதிவீர சூர புருஷன் என்று அதிசயித்துரைப்பர்.

முன்னாளில் ஸஹஸ்ரம் ஒரு ஜாகீர். அதன் தலைவனது மகன் ஷெர்ஷா. குட்டி ஜாகீர்தாரனாகக் குலவ, ஷெர்ஷா விரும்பவில்லை; குவலயம் மெச்சும் காவலனாக வாழவே ஆவல் கொண்டான். அந்த ஆவலும் பையனாக இருந்தபோதே உதித்தது! அதுகண்டு, 'மனம் போலிருக்கும் மாங்கல்யம்' என்றனர் சிலர். கிட்டாப் பழத்திற்குக் கொட்டாவி விடுவதோ?—என்றனர் சிலர்

போகப்போகத் தெரியும் என்றான் அப்பையன். பலரும் பிரமித்தனர் அது கேட்டு.

ஒரு நாள் மாலைப்பொழுது. ஸஹஸ்ர நகரின் தெருவிலே கேளிக்கை யொன்று நடக்கிறது. ஆயிரத்துக்கு மேற்பட்ட ஜனங்கள் அதனைக்கண்டு களிக்கின்றனர். திடீரென்று வரிப்புலி யொன்று அங்கே வந்துவிட்டது! மக்களோ மூலைக்கு ஒருவராக ஓட்டம் பிடிக்கின்றனர். புலியை எதிர்ப்பார் எவரும் இல்லை. பன்னிரண்டு வயதுப் பாலன்,—பரீத் என்பான்—பெருமிதமாக எழுந்தான்; புலியின்மீது பாய்ந்தான்! வேங்கை அவனைப் பட்சணம் பண்ணிவிடும் என்று எல்லாரும் எண்ணி நின்றனர்!

வேங்கை வீறுகொண்டு தாவிப் பாய்ந்தது பரீதை நோக்கி! சற்றே ஒதுங்கிக் கொடுத்தான் பரீத். குறி தவறியதும், தாவிய விசையில் குப்புற வீழ்ந்தது அக் கொடு விலங்கு. உடனே துள்ளிப் பாய்ந்து அதன்மீது அமர்ந்துகொண்டான் பரீத். முதுகின்மீது நரனொருவன் ஏறுவதா?—என அவ் வேங்கை வெகுளிகொண்டு, அந்தரத்தே கிளம்பிற்று. அச்சமயம் தனது இரு கால்களையும் அதன் அடி வயிற்றில் பின்னிக்கொண்டான் பரீத்.

இப்படியும் அப்படியும் அவ்வன விலங்கு சாய்ந்து சாய்ந்து பார்த்தது. பையனோ அசைவதாயில்லை. மற்று, இடது கையால் அதன் காதொன்றைப் பற்றிக் கொண்டு, வலது கையிலே ஈட்டி தாங்கி, அதன் உடலெங்கும் காயங்கள் செய்தான். அதன் உடம்பிலிருந்து இரத்தம் கொப்பளிக்கிறது! பையன் மீதும் பரவுகிறது! காலின் பிணைப்பையும், காதின் பிடிப்பையும், ஈட்டிக்

குத்தையும் அவன் தளர்த்தவில்லை. வேங்கைக்காச்சு, கமக்காச்சு என்றே இருந்தான்!

வேங்கையின் சிரம் முழுதும் சல்லடைக் கண்ணாகும் படிக் குத்தினன் அக்குல மகன்! பின்னரே பெருஞ்சத்த முடன் உயிரைவிட்டது அப்பெரு மிருகம். உடனே அதன் வாலைப் பிடித்து இழுத்துச் சென்று, மூலையில் பதுங்கியிருப்போர் அனைவருக்கும் காட்டினன் பரீத்! வேங்கையின் பிண நிலை கண்டு பேதுற்றனர் பலர். முடிவில் அனைவரும் தைரியங் கொண்டு ஒன்றுகூடி, "அப்பா பரீத்! நீ அசகாய சூரன். வேங்கையை வென்று வீழ்த்தினய். உன்னை "ஷெர்கான்" (வேங்கை வீரன்) என்றே விளம்ப வேண்டும்," என்றனர்.

ஷெர்கானுக்கு வயது பதினறு நிரம்பியது. தந்தை காலகதியானன். உடனே மகன் ஜாகீர்தாரன் ஆயினன். அந்த ஜாகிர் பீஹார் வேந்தன் தந்தது. அவ்வேந்த னிடம் ஐந்நூறு பரிவீரரின் தலைவன் என்று சின்னாள் சேவித்தான், ஷெர்கான்! பிறனிடம் சேவிக்கவோ அவனுக்கு மனமில்லை. இதனையும் அவன் தகவையும் உணர்ந்தான் அப்பீஹார் வேந்தன். உடனே ஷெர்கா னுக்குப் பீஹாரின் பிரதம மந்திரிப் பதவி கிட்டிற்று. இதிலும் அவன் திருப்தி கொள்ளவில்லை. பீஹாரின் பார்த்திபனக ஆய்விடவே ஆவலுடன் நின்றான்.

எண்ணியார் எண்ணியாங்கு எய்துவர்; எண்ணி யார் திண்ணியராகப் பெறின்,—என்றார் திருவள்ளுவர். ஷெர்கான் ஒன்றை நினைக்க வேண்டியதுதான். அந் நினைப்பு பூர்த்தியாகும் வரையில் அன்ன பானத்திலோ, நித்திரையிலோ அவன் கவனஞ் செல்லாது. சின்னாளுக் கெல்லாம் பீஹாரின் முடிமன்னவன் ஆனன் ஷெர்கான்.

அத்துடன் அவன் திருப்தி கொள்ளவில்லை. டில்லிமா நகரிலே முடி சூட வேண்டுமென்றும் அவன் கருதலானான். அவ்வளவு தான். அதற்குரிய முயற்சிகளெல்லாம் நடக்கலாயின. இதற்குள் பாபர் என்பான் வந்து விட்டான் டில்லி வேந்தனாக.

பாபர் மகா தந்திரசாலி. ஷெர்கானுடைய திறமையை நன்குணர்ந்தவன். ஆதலின் அவனை அணைத்துக்கொண்டான் தனது சிற்றரசனாக! ஷெர்கானும் பாபரிடம் சின்னாள் சேவகம் செய்யா நின்றான். ஒருநாள் விருந்தொன்று நடந்தது. பாபர், அவனது தளகர்த்தர், சிற்றரசர் எல்லாரும் சமபந்தியில் அமர்ந்து உண்டியருந்தினர். விருந்தின் வளமை கண்டு பலரும் சொக்கிக் கிடந்தனர். பாபரோ விருந்தின் நடுவே ஷெர்கானை உற்று நோக்கிய வண்ணமாயிருந்தான். ஒருவரும் அதனைக் கவனிக்கவில்லை. ஷெர்கான் மட்டும் கவனிக்கலானான்.

விருந்தோ முடிந்தது. சுற்றுமுற்றும் நோக்கினான் பாபர். ஷெர்கானைக் காணவில்லை. "அந்தோ! சிக்கிய பறவை பறந்துவிட்டதே! என்ன செய்யலாம்? அவனைப் பார்த்தால் ராஜ களை சொட்டுகிறது. சக்கரவர்த்தியாகும் சின்னங்களும் நிரம்பித் தோன்றுகின்றன. அவனை மாய்க்காவிடின், நம் வமிசம் நிலைத்தல் எங்ஙனம்?" என்று தன் முதன் மந்திரியிடங் கூறி வருந்தினான் பாபர். முதன் மந்திரியும், "மன்னவ! தங்கள் கருத்தை யூகித்தே வீரரை அனுப்பிப் பார்த்தேன். தொடர்ந்த வீரர் அனைவரையும் தொலைத்துவிட்டு, மாயமாய் மறைந்துவிட்டான் ஷெர்கான்," என்று கூறினான்.

வைரத்தை வைரங்கொண்டறுப்ப தென்பர். அங்ஙனமே பாபரும் ஷெர்கானும் ஒருவரையொருவர் வெறுக்கவும், அறுக்கவும் தொடங்கினர். இருவரும் ஏறக்குறைய சரிசமானமான வயதுடையோர். வலியிலும், வீரத்திலும் சரிநிகரான ஜோடி. டில்லி பாதுஷாவாகப் பாபர் பட்டமேறியு மென்ன? அடி வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டே யிருந்தான். எந்த நிமிஷத்தில் ஷெர்கான் தோன்றுவனோ? என்ன ஆபத்து நேருமோ?-என்பதே பாபரின் கவலை.

எந்த நிமிஷத்தில் பாபரை வீசித் தள்ளலாம்? எந்த நிமிஷத்தில் டில்லியிலே சுல்தானாக அமரலாம்?-என்பதே ஷெர்கானது சிந்தை! முன்னவனோ தக்க பாதுகாப்புத் தேடுகிறான்; பின்னவனோ சமயம் பார்த்து நிற்கிறான் சிம்மாசனத்தைக் கைப்பற்ற. சின்னாளைக் கெல்லாம் பாபர் மாண்டொழிந்தான். உடனே அவன் மகன் ஹுமாயூன் பட்ட மேறினான். மகனுக்கு அரசு நிலைக்க வேண்டுமென்று பாபர் சிந்தாகுலங்கொண்டது கொஞ்சமன்று. அப்பன் அகன்று. விட்டாலென்ன? மகனை ஒருகை பார்ப்போம் என்பதே ஷெர்கானின் துணிபு. 'யானையும் சர்ப்பமும் வைரத்தைக் கைவிடா.'

ஹுமாயூன் டில்லியரசிலே அமர்ந்ததுதான் தாமதம். ஷெர்கான் சீறியெழுந்தான். ஹுமாயூனது படைகளும் கிளம்பின. ஹுமாயூன் தோற்றோடினான் படுகளத்தைவிட்டு. அச்சமயம் உடனிருந்த பிரிய மனைவியும் ஏனைய அந்தப்புர பரிவாரங்களும் ஷெர்கானிடம் சிக்கிக் கொண்டனர். பாதுஷாவின் பாரியாள் சிறைப்பட்டாள். இதோ வருகிறாள் என்று கேள்விப் பட்டதும் யாது செய்தான் அச் சுத்த வீரன்! தன்

போர்ப் பரியை விட்டுக் கீழே இறங்கினன். எதிர் சென்று அவளைக் கண்டான். "சோதரியே! கண் கலக்கம் வேண்டாம். உனக்கு ஊறொன்றும் நேராது," என்று ஆறுதல் கூறினன். வரிசைப் பொருள்களுடன் அம் மாதரசியை ஹுமாயூனிடம் அனுப்பிவைத்தான் தக்க காவலுடன். ஷெர்கானது பெருந்தன்மையை வியந்தாள் அவ்வணிதை.

படைகொண்டு பாரத பூமியில் புக, பாபர் ஐந்து முறை முயன்றன் என்றால், ஷெர்கானே ஏழு முறை முயன்றன் டில்லியில் சிம்மாசனம் ஏற! முனைந்து முயன்றால் முடியாத காரியமும் ஒன்றுளதோ? மீண்டும் போருக்கெழுந்தான் ஷெர்கான். பன்முறை ஹுமாயூனுடன் சண்டை போட்டான்! முடிவில் பெற்றன்! ஹுமாயூனே தன் தேவி ஒருத்தியே துணையாக, இந்தியா வெங்கும் அலைந்து திரிந்தான். அமரக் கோட்டையிலே ஓர் இந்து வேந்தனது நிழலில் அக்பர் எனும் மகனைப் பெற்றெடுத்தான்; இந்தியாவில் தங்கினல், உயிர்போய் விடும் என்று தோன்றியது. ஆதலின் பரதேசிபோல் சுற்றித் திரிந்து, பாரசீக தேசம் போய்ச் சேர்ந்தான்.

ஷெர்கானே ஷெர்ஷா என்று பட்டஞ்சூடி, டில்லியிலே 1540-ம் வருஷம் சிம்மாசனம் ஏறினன். ஐந்தே வருஷ காலந்தான் அரசாண்டான். ஆயினும் மூன்றே முக்கால் நாழிகை பொன் மழை பொழிந்தது என்பார்கள். அந்த ஐந்து வருஷ காலத்திற்குள் இந்தியாவின் அரசியலில் எத்துணையோ திருத்தங்கள் செய்தான். ஆப்கானிஸ்தானத்திலிருந்து வந்து குடியேறிய பட்டாணியனயினும், இந்தியாவையே தாயகமாகக் கொண்டவன்; குடிமக்கள் சுகமே வாழ்ந்தால்தான், அரசு நிலைக்கு

மென்பதை உணர்ந்தவன்; மன்னவனுவோன் மக்களுக்கு நலம் பல புரியவே வந்தவன் என்பதை நன்கறிந்தவன். ஆதலின் தந்தைபோல் பிரியங் காட்டத் தலைப்பட்டான்.

ஸஹஸ்ரம் என்ற அவன் ஜாகிர் மாளிகையிலும் சரி, அவனது கல்லறைக் கோரியிலும் சரி, "உழுவார் உலகுக்கு உயிர்" எனும் பொருள் கொண்ட வாக்கியங்களை வாசல் முகப்பில் காணலாம். அன்றும் சரி, இன்றும் சரி, இந்தியா விவசாயத்தையே நம்பியுள்ள தேசம். மானிடருக்கு வேண்டிய அனைத்தும் மண்ணிலிருந்தே கிடைத்தல் வேண்டும். அம்மண்ணை உழுது பயிரிடுவோரே உலகத்துக்கு அச்சாணி. கம்பர் கூறிய வண்ணம், "வெங்கோபக் கலி கடந்த வேளாளர் விளைவயலுள், பைங்கோல் முடிதிருந்தப் பார்வேந்தர் முடிதிருந்தும்! பொங்கோதைக் கடல்தானைப் போர் வேந்தர் நடத்து பெருஞ், செங்கோலை நடத்துங்கோல் ஏரடிக்குஞ் சிறுகோலே!" என்று கண்கூடாகக் கண்டறிந்த கண்ணியன்.

ஆதலின், நிலங்களையெல்லாம் அவன் தரம் பிரித்தான்; அதனைப் பாகுபடுத்தினன். உழவரின் முயற்சியையும் உழைப்பையும் உன்னிப் பார்த்தான். அன்னருக்குக் கிடைக்க வேண்டிய ஊதியத்தையுங் கணக்கிட்டான்; மீண்டும் சாகுபடிக்குத் தேவையான வசதிகளையும் எண்ணி நோக்கினன். இதரச் செலவுகளுக்கும் அவர்களுக்கு எவ்வளவு தேவை என்று அறுதியிட்டான். அரசிறையாக எவ்வளவு வசூலிக்கலாம் என்று புள்ளியிட்டான்; இங்ஙனம் நிலவரி முறையை அவன் திட்டஞ் செய்தான். அவ்வாறே வசூல் செய்தும் வந்தான். அக்பரென்பான் அற்புதமான நிலவரி முறையை

ஏற்படுத்தினான் என்றால், அதற்கு வழிகாட்டியவன் ஷெர்ஷாவே. ஷெர்ஷாவுக்கு வழிகாட்டியவர்களோ நமது மூதாதையர். இவற்றையெல்லாம் மறந்து, மகான் என்று பலரும் அக்பரைப் பாராட்டுவர்.

மொகலாயரின் காலத்திலே நேர்த்தியான மாடங்களும், விசித்திரமான மண்டபங்களும், வேலைப்பாடான மசூதிகளும் கிளம்பின. ஆதலின் மொகலாயரது சிற்பத் தொழில் வனப்பினுக்கு இணையேது என்பர் பலரும்; இதற்கும் அடிகோலிச் சென்றவன் ஷெர்ஷாவே! சாலைகள் அமைத்தும் சோலைகள் வைத்தும், சாவடிகள் நிருமித்தும், குதிரைத் தபால் ஏற்பாடு செய்தும் அவன் செய்த திருத்தங்களைப் பள்ளி மாணவரும் நன்கறிவர். அவனுக்கும் மண்ணாசையுண்டு; பெண்ணாசையும் மிக்கிருந்தது. என்றாலும் சமயச் சழக்கு என்பது கிடையாது. இந்துக்கள் வேறு, முகம்மதியரே நம்மவர் என்று அவன் எண்ணியதும் இல்லை. நாட்டு மக்களை அன்புடன் அணைத்து ஆதரித்தாலன்றி, அரசு ஓங்காது, வமிசம் நிலைக்காது என்பதை அவன் உணர்ந்து மொகலாய மன்னவருக்கு வழி காட்டியவன்.

பெண்ணாசை என்பது பெரும் பித்து. அதனை உதறித் தள்ளிய அரசர் ஏது? டில்லியிலே சுல்தானாக அரியணை ஏறியதும், பக்ற் குண்டம் எனும் கோட்டையிலே அவன் ஒரு சமயம் தங்கி யிருந்தான். அஃது மிகவும் விசாலமான கோட்டை. ஆயினும் அவனுடைய அந்தப்புர மாதர் அனைவரையும் அவர்தம் பரிவாரத்தையும் தாங்க, அக் கோட்டையில் இடம் போதவில்லை. அப்பால் அவன் ரோடாஸ் எனும் கோட்டை சேர்ந்தான். இக் கோட்டையோ இருபத்தெட்டு சதுர மைல்

கொண்டது. மிக நேர்த்தியானது. இக் கோட்டைதான் அந்தப்புர மாதர் அனைவருக்கும் இடந் தந்ததாம்.

வடிவழகும், விழுமிய தோற்றமும் கண்டு, வனிதையர்பால் அவன் ஆவல் வைத்தனன் என்பதில்லை. குட்டி ஜாகிர்தாரின் மகனாயிருந்து காவலனாக ஆகவே, அவன் அரும்பாடுபட்டான். அரியணையில், அமரும் வரையில் அவன் ஒரு நாளிருந்த இடம் ஒரு நாள் இருக்கவில்லை. அதிகாலையிலே எழுந்தால், பகல் போஜனம் எங்கே, இரவில் தங்குவது எங்கே ?—என்று எண்ணுவதில்லை. காரிய சாதனையினிமித்தம் நெடுகப் போய்க்கொண்டே யிருப்பான். எங்கே தங்க நேரிடுகிறதோ அங்கே தங்குவான். எங்கே பசி பொறுக்க முடியவில்லையோ அங்கே வயிற்றுக்குச் சிறிது ஈவான். இஃதே அவன் வாழ்க்கையின் விநோதம். குட்டி ஜாகிர்தாரனாயிருந்து சிற்றரசனாகிப் பேரரசனாக முயன்ற காலையில் ஏராளமான பணம் வேண்டியிருந்தது.

ஷெர்ஷாவோ ஆளழகன், அதிசூரன், மகாவீரன்-அவன் புகழோ வட-இந்தியா வெங்கும் பரவி யிருந்தது. ஆதலின் அத்தகையானை மணக்க மங்கையர் சிலர் ஆசை வைத்தல் இயற்கை. அன்னவரிடம் திரவியமிருந்தால் போதும். அழகு, அன்பு, அறிவு, குணம் இவை உண்டா—என அவன் எண்ணிப் பாரான். அன்னாரை உடனே மணந்து கொள்வான்.

மல்லிகா எனும் மாதொருத்தி. அவள் ஒரு மாகாண கவர்னரின் மனைவி. இளையாள் மைந்தன் அரசை நச்சி அப்பனைக் கொன்றான். மல்லிகாவுக்கோ அம் மைந்தனைப் பழிவாங்கவேண்டுமென்று ஆவல் ஷெர்ஷாவுக்குத் தூது விடுத்தாள். அவளிடமோ

நிரம்பப் பணம் உண்டு. அம் மாகாணமும் வளமை மிக்கது. அவள் கருத்தைப் பூர்த்தி செய்து, அவளை மனைவியாகக் கொண்டு களித்தான் ஷேர்ஷா.

பிஹார் வேந்தனது காமக் கிழத்தி ஒரு கட்டழகி. அவளிடம் செல்வம் திரண்டு கிடந்தது. அவளுக்கு ஒரு மகன். அம் மகனுக்கு உற்ற துணைவனாக விளங்கினான் ஷேர்கான். அம் மகன் மரித்ததுதான் தாமதம். அவளைத் தேவியாக அடைந்தான். அவளது செல்வத்தையும் ஆண்டனுபவித்தான்.

அயோத்தியிலே நவாபாக இருந்தவனுக்கு ஒரு குமாரி. அவள் அழகற்றவள். ஆயினும் தலைமுறை தலைமுறையாக அயோத்தி நவாபின் அரண்மனையில் பொன்னும் மணியும் குவிந்து கிடந்தன. தந்தை இறந்ததும், அவள் பொன் மகளாகவே துலங்கினாள். அதனை யறிந்து அவளை மனையாளாகக் கொண்டான். அவள் பொக்கிஷத்தையும் பெற்றான்.

சம்பல் பிரதேச அதிபன் நஸாகான். அவன காலமாகிவிட்டான். அவன் மனையாள் தனியே நின்றாள். வாய்ந்த நலனுடைய இன்சொல்லினனான ஷேர்கான் மீது அவள் இச்சை கொண்டாள். இதனை அவன் அறியான். எனினும் அவளிடம் மிகுந்த பொன்னுண்டெனக் கேள்வியுற்றான். உடனே பரியைத் தட்டிவிட்டான். சம்பல் பிரதேசஞ் சேர்ந்தான். அம் மாதினைக் கண்டான். இனிய சொல்லால் அவளை மயக்கினான். அவளும் கருதிய கணவன் கிட்டினானெனக் களித்தாள். முந்நூறு மணங்கு தங்கம் அவளிடமிருந்து கிடைத்தது.

இங்ஙனம் அவன் தேடி யடைந்த கன்னிகளுக்கும் பொன்னுக்கும் ஒரு கணக்கில்லை. ஒரு கணக்கில்லை என்பது உபசார வழக்கன்று. உண்மைச் சரிதமாம்.

களிஞ்சர் என்று ஒரு பிரதேசம். அது ஒரு ராஜ புத்திரன் ஆட்சிக்கு உட்பட்டது. அங்கே அழகின் அவதாரமான கணிகை யொருத்தி யிருந்தாள். அவள் ஓர் ஏழையின் மீது காதல்கொண்டு அந்த ஏழையையே கணவனாக மதித்து வாழ்ந்து வந்தனள். பணம்படைத்த பலரும் அவளைக் காண்பதும் அரிதாகிவிட்டது. ஆதலின் மூட்டை மூட்டையாகப் பணம் அனுப்பிப் பார்த்தனர். அவள் மனம் மாறவில்லை. அவளிடமும் தனம் குன்றுபோல் குவிந்திருந்தது.

அது கேட்டு ஷெர்கான் படைகொண்டு பாய்ந்தான் அப்பிரதேசத்தின் மீது. கணிகையர் குலத்தினளாயினும் அவள் கற்பரசி. அவள் பொருட்டு அன்னியன் படையுடன் வந்ததும் ரஜபுத்திர சமூகம் திரண்டெழுந்தது. கோட்டையோ பணியவில்லை அவளைத் தகர்த்தான் ஷெர்கான். உள்ளே புகுந்து பார்த்தான். ஆடவர் அனைவரும் வீரசுவர்க்கம் புகுந்து விட்டனர். பெண்டிரோ அக்கினிக் கடவுளுக்கு அர்ப்பணமாகி விட்டனர். காதலி தென்படவில்லை. கருந்தனமும் கிட்ட வில்லை. சற்றே தயங்கி நின்றான் ஷெர்கான். அவ்வேளை சுரங்கமொன்று வெடித்தது. மயிரிழை தப்பினான்.

அவனது லீலைகளோ அனந்தம். இன்னும் அவனது சரிதம் வரன்முறையாக எழுதப்பட வில்லை. "குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொளல்" என்று தமிழ் வேதம் விளம்பும். அங்ஙனம்

பார்க்கையில் அவனிடம் குணமே மிகுதி. ஆதலின், குணவான் என்றே கொள்வோம்.

பின்னால் தோன்றிய சிவாஜியும் அவனும் வீர திரத்திலும் வேந்தரானதிலும், ஒற்றுமை உடையோர், ஐந்தாண்டே ஆண்டபோதிலும் அரிய நன்மைகள் பல ஆற்றிச் சென்றான் ஷெர்ஷா! போரிலே பெருந்தன்மை காட்டினான். வீரமும் விருப்பும் வாழ்க!

ரத்தபூஜை

சித்தூர் வேந்தன்—ராணு இலட்சுமண சிம்மன்—பகலெல்லாம் போர் புரிந்தான். இரவிலே மஞ்சத்தில் அமர்ந்து மறுதினம் போரை நடத்தும் வகையை ஆராயலானன் தனக்குள்ளே. போர்புரிந்த களைப்பு; புண்களின் இசிவு; சற்றே உடல் அயர்ந்தது, மஞ்சத்தில் சாய்ந்தான், இரு கண்களும் சிறிது மூடின: தூக்கம் பிடிக்கவில்லை.

சிறிது நேரத்திற்கெல்லாம் இலட்சுமண சிம்மன் திடுக்கிட்டெழுந்தான். "என்ன இது! ஒருவரும் இங்கில்லை; தனிமையில் இருக்கிறேம். பசி, பசி என்று பேசியது யார்? ஒருவரையும் காணவில்லையே! கனவோ இது? அன்று! நனவுதான்" என்று கண்ணைத் துடைத்துக்கொண்டான். சயன அறையின் நாற்புறமும் நோக்கினன். எவரும் தென்படவில்லை! ஏதோ மாயம் இது என்றெண்ணினன்.

பின்னர் மீண்டும் கண்ணிமைகள் மூடிக்கொண்டன. அவனையறியாமல் அவன் உடலம் பஞ்சணையில் சாய்ந்தது. நித்திரையும் எட்டிப் பார்த்தது. சிறிது தூங்கிச் சிரமம் தணியலாமெனக் கருதினன். கருதிய மறு விநாடியில் பசியதிகம் பசியதிகம் என்னும் குரல் கேட்டது. அவ்வளவில் சட்டென எழுந்தான்; கண்களைத் திறந்து இங்குமங்கும் நோக்கினன். உருவம் எதுவும் கண்ணில் புலப்பட வில்லை.

அப்பால் அயர்வு மிகுந்து கட்டிலில் சாய்ந்தான் கண்ணுறக்கங் கொள்ளவும் தலைப்பட்டான். தலைப்பட்டதும் "வேந்தே! பசி தாளாது, பசி தாளாது" என்னும் அரவம் காதில் விழுந்தது. உடனே கண்ணை விழித்தான், கூர்ந்து நோக்கினன். குல தெய்வமான அம்மை பவானியின் உருவம் மின்னல் போல் தோன்றி மறைந்தது. உருவின் ஒளியைக்கண்டு பரவசங்கொண்டு சிறிது நேரம் அசைவற்றுக் கிடந்தான்.

அப்பால், "அன்னய்! பவானீ! உனக்கா பசி? இன்னுமா பசி? பன்னீராண்டு காறும், என் குல மக்களில் பலரைப் பலி கொடுத்தேனே. பட்டாணியர் தலைவனை அல்லாவுதீன் படைஞரிலும் பதினயிரக் கணக்கான வீரரைப் பலியாக்கினேனே! இன்னுமா பசி உனக்கு! என் மக்களில், உன் குழந்தைகளில், எண்ணாயிரம் ஆடவரே மிகுதி. என் புத்திரர் பன்னிருவரும் உளர். நானும் இருக்கின்றேன். எஞ்சிய அனைவரையும் பலிகொள்ளப் பிரியமோ? என்னே உன் சித்தம்!" என்றான் அவ்வேந்தன்.

உடனே, "அன்ப! நீ கூறியனவெல்லாம் உண்மையே. அத்துணை பலி கொண்டும் என் சித்தம் குளிரவில்லை. எனக்கோ இச்சமயம் முடித்தலைகள் வேண்டும். அதுவும் ஒன்று இரண்டு போதா. பன்னிரண்டு தேவை. பன்னிரண்டு முடித்தலைகள் தந்தால், உன் வழிமுறை இச் சித்தூரில் சின்னாள் நிலைக்கும். இன்றேல் உன் சந்ததியார் இச் சித்தூரை இழந்தே தீரவேண்டும்" என்று ஓர் அசரீரி உரைத்தது. என்ன செய்வான் இலட்சுமண சிம்மன்? எண்ணாத எண்ண மெல்லாம் எண்ணினன்.

உதாரணமாக, "குல தெய்வமே! பன்னிரண்டு வருஷம் டில்லி சுல்தான் அல்லாவுதீனுடன் கடும் போர் புரிந்தேன்; இருபதாயிரம் வீரரை இன்றளவும் இழந்தேன். சித்தூர்க் கோட்டையின் உயிர் நிலையான பாகம் பகைவரான பட்டாணியன் கையில் சிக்கிவிட்டது. அதற்கும் நான் தயங்கவில்லை. எனது ஆருயிரைப் பலி கொடுக்கக் காத்திருக்கின்றேன். என் வம்சம் நிலைக்க வேண்டும், எள்ளும் நீரும் இறைக்க ஒருவனாவது மிஞ்ச வேண்டும். இந்நிலையில் பன்னிரண்டு முடித்தலைகள் விரும்புகின்றாய். நல்லது, உன் சித்தம்; இச் சித்தூரின் பாக்கியம்" என்று மொழிந்தான்.

இன்னும் பலவும் எண்ணினான் அவ்விறைவன். பொழுது புலர்வதையும் எதிர்நோக்கி நின்றான். பொழுதும் புலர்ந்தது. உடனே தன் மைந்தர் பன்னிருவரையும் வரவழைத்தான்; சேனைத் தலைவர், தளகர்த்தர், வீராதிவீரர் இவர்களையும் தருவித்தான்; இரவில் கண்ட காட்சியையும் கேட்ட வார்த்தையையும் விண்டுரைத்தான், இரு கண்களிலும் நீர் ததும்ப! அவர்களில் இரண்டொருவர், "என்ன பிரமை இது! அம்மையாவது, இரத்த பூஜை விரும்பவாவது" என்று தம்முள்ளே எண்ணினர்.

முடிவில் அனைவரும் அன்றிரவு அரண்மனையிலே அரசனுடன் படுத்திருந்து பரீட்சை பார்ப்பதென முடிவு கட்டினர். அவ்வாறே அனைவரும் ராணாவுடன் சயனம் கொண்டனர். நள்ளிரவு வரையில் ஏதும் நிகழவில்லை. நடுநிசி புகுந்ததுதான் தாமதம்; கார்கால மின்னொளி போல் அவ்வறையின் மூலையிலே ஜோதியொன்று கிளம்பியது; மறுகணமே மறைந்தது. ஜோதியின் வேகங்

கண்டு அனைவரும் சுருட்டியடித்துக்கொண்டு எழுந்தனர்: நாற்றிசையும் நோக்கினர்.

அவ்வேளை, "அரசே! உரைப்பது கேள். இப் பன்னிராண்டுகாறும் உன் வீரர் பதினாயிரக்கணக்கில் மிலேச்சர்களை வாளுக்கு இரையாக்கி எனக்கு இரத்தப் பாவாடை விரித்தனர். தங்களிலும் பலரைப் பலி கொடுத்து எனக்கு இரத்த நிவேதனம் செய்தனர். ஆயினும் என்ன? என் மனம் குளிரவில்லை, என் வயிறும் நிரம்பவில்லை. அப்பாவாடையும் பூஜையும் எம்மாத்திரம் எனக்கு? எனக்கோ இப்போது முடித்தலைகள் வேண்டும். ஒன்று குறையாமல், பன்னிரண்டு நீ தந்தாக வேண்டும்" என்று ஒரு குரல், தெய்வக்குரல் எழும்பியது.

சேனைத் தலைவரும் தளகர்த்தரும் அது கேட்டனர் அறிவு கலங்கினர். இன்னுமா அம்மை உயிர்ப்பலி வேண்டுகிறாள் என்று தேம்பினர். பன்னிரண்டு முடித் தலைகளுக்கு எங்கே போவது என்று தயங்கினர். அம்மை பவானியின் அருள் இருந்தவாறு என்னே என்று பொங்கினர். ராணா இலட்சுமண சிம்மனது முகத்தை நோக்கினர்; அவன் மைந்தரது வதனங்களையும் ஏறிட்டுப் பார்த்தனர். ராஜகுடும்பத்தாரின் முகங்களெல்லாம் அன்றலர்ந்த செந்தாமரைபோல் துலங்கின.

அரசிளங் குமரரில் கடைசி மைந்தன் பொருக்கென எழுந்தான்; தந்தையின் பாதம் வணங்கினான்; தமையன்மாருக்கும் வணங்கஞ் செய்தான்; கூடியிருந்த படைத் தலைவருக்கும் வந்தனை பண்ணினான். பின்பு, "அம்மையின் மனம் குளிரட்டும், வயிறும் நிரம்பட்டும். புராதனமான இச் சித்தூரின் சிறப்பு சிறிதும் குன்றக்கூடாது;

நமது சூரிய வமிசத்தின் வீறுப்பும் தளர்தல் தகாது. பவானியம்மை விரும்பிய வண்ணமே முடித்தலைகள் பன்னிரண்டும் கொடுப்போம்'' என்றான் எடுப்பாக.

எங்ஙனம் கொடுப்பது? என்று வினவினான், சேனைத் தலைவன். அம்மைந்தன் பன்னிரண்டாண்டே நிரம்பப் பெற்றவன் அஜய சிம்மன் என்பான் பேசுவான் "எங்ஙனமா? நாங்களோ புதல்வர் பன்னிருவர் உள்ளோம். சுதந்திர சம்பத்து பெரிதா, புத்திர சம்பத்து பெரிதா? எது பெரிதென இவ்வேந்தன் எண்ணுகிறான்? பரீட்சை பார்ப்போம், பாருலகினுக்கும் அறிவிப்போம என்றே நம் அன்னை எண்ணி நிற்கிறாள், நல்லது அவள் கருதியவண்ணமே காரியம் நடக்கும்.

"எங்ஙனம் எனில், எங்களில் ஒருவன் இறைவனாக முடிதரிப்பான்; குடை, கொடி, சாமரம் முதலிய ராஜ சின்னங்களுடன் மூன்றுநாள் முடி மன்னவனாக மிளிர்வான். அம்மூன்று நாளும் படுகளம் புகுந்து, படைத் தலைமை பூண்டு போரை முடுக்குவான். நாலாம் நாள் அவன் பட்டு வீழ்ந்ததும், மற்றொரு மைந்தன் அவ் விதமே அரசனாகி அருஞ்சமர் ஆற்றுவான். நாங்கள் பன்னிருவரும் களப்பலி ஆனபின்பு, பவானிதேவி களி கூர்வாள், எங்கள் தந்தை வெற்றிமாலை சூடி வேந்தனாக விளங்குவார். ''

அம்மாற்றங் கேட்டதும் இலட்சுமணசிம்மன் தன்னை மறந்தான்; புத்திர பாக்கியத்தின் பெரும்பலன் கண்டதாகக் களிப்புக்கொண்டான். சுதந்திர சம்பத்தே சித்தூர் வேந்தருக்குச் சிறந்த சம்பத்து, மற்றெதுவுமன்று—என்று மகிழ்ந்துரைத்தான். பன்னீராண்டுப் பாலனது பெரு வசனமும் மகாராணாவின் மலர்ந்த

மனமும் கண்ட படைத்தலைவர் அனைவரும் வீரவெறி கொண்டனர்; போர் வெறி நிரம்பினர்; உடைவாளின் மீது ஆணை, நாங்களும் பலியாவோம் பவானிக்கு-என்று ஒரு மனதாக உரைத்தனர்.

உடனே, இலட்சுமண சிம்மன், "மக்காள்! தளகர்த்தர்காள்! முதல் தினம் நானே களப்பலியாதல் கடமை. எனக்கோ மூப்பு வந்து சூழும் காலம். இன்றளவும் முடி மன்னவனாக விளங்கினேன். அம்மை பவானிக்கு நானே முதற் பலியாவேன். இதுவே தர்மம்" என்றான். என்றதும், மைந்தர் பன்னிருவரும், "எந்தாய்! நாங்கள் இத்துணை பேர் பிறந்தென்ன பயன்? என்ன பாக்கியம் பண்ணினான் இலட்சுமண சிம்மன் இம்மைந்தரைப் பெற்றெடுக்க என்று இம்மாநிலம் மனதாரப் புகழவேண்டும். அப்புகழ்ச்சி எங்கள் பன்னிருவருக்கும் கிட்ட வேண்டும்" என்று ஏகமனதாக இயம்பினர்.

இலட்சுமண சிம்மனோ, "மைந்தர்காள்! இன்றளவும் முன்னணியில் நின்று மெய்யமர் நடத்தினேன். உலக வாழ்க்கையை நச்சி உயிர் தாங்கி நிற்க ஒருப்படேன். முதல் பலிக்கு நானே பாத்திரமாக வேண்டும். மைந்தர் பன்னிருவரில் நம் குலம் விளங்க ஒருவன் உயிர்தாங்கி நிற்றல் வேண்டும். முடிவில் வெற்றி கிடைப்பின் அதனை ஆண்டனுபவிக்க ஒருவன் வேண்டுமன்றோ? ஒருக்கால் சித்தூர் கைதவறின் அதனைமீட்கும் பொறுப்பினுக்கு ஒரு புதல்வன் பாத்திரமாக விளங்குதல் வேண்டும். இஃதே என் கோரிக்கை" என்றனன்.

புதல்வர் அனைவரும் அப்படியே ஆகட்டும் என்று ஒப்பம் கொடுத்தனர். மைந்தரிலே யார் களப்பலியாகாமல் உயிர்தாங்கி நிற்பது?—என்று ஆலோசனை

பிறந்தது. களப்பலி ஆகவே பன்னிருவரும் விரும்பி நின்றனர். உயிர்தாங்கி நிற்க ஒருவனும் ஒருப்படவில்லை. சோதரரை இழந்து, மண்ணுள்வதா மகிமை? சோதரருடன் சேர்ந்து விண்ணுள்வதே மேல், என்று ஒவ்வொருவரும் வாதாடினர். அவ்வாதப் போரைப் பார்த்து நின்ற படைத்தலைவர் என்ன செய்வர்? யாது சொல்லுவர்! புத்திரபாக்கியம் பாக்கியந்தான் என்றனர். சுதந்திர சம்பத்தே சம்பத்து என்றும் இசைத்தனர்.

முடிவில் மைந்தர் பதினொரு பெயரும் இரண்டாமவன் அஜயசிம்மன் நீங்கலாக, முதலில் பலியாதல் வேண்டும் என்று முடிவேற்பட்டது. ஆயினும், முதன் முதல் யார் முடிசூடிக் களப்பலியாவது என்று வாதம் கிளம்பி விட்டது. தானே முதலில் முடிசூடி, முதல் களப்பலி யாவேன் என்று பதினொரு பெயரும் தம் தந்தை இலட்சுமண சிம்மனிடம் மன்றாடினர். வயதுக்கிரமமாக மைந்தர் முடிசூடுதலே சாலச் சிறந்ததென்றான் சித்தூர் வேந்தன்.

அத்தீர்ப்பை மைந்தர் எவரும் தட்டிப் பேசவில்லை. முதலாவதாக மூத்த புதல்வனே ஒற்றை வெண் கொற்றக் குடையும் இரத்த நிற வீரக் கொடியும், வெண்கவரிச் சாமரையும் தரித்தான். அவனையே முடி மன்னவனென மதித்து அனைவரும் வணங்கினர். பின்பு அவன் போர்க்களம் புகுந்தான்; ஆண் சிங்கம்போல் கர்ஜித்தான். அம்மை பவானியே! என்று வழுத்தினன்; உன் பசியடங்க இதோ இரத்த பூஜை செய்கிறேன் என்று ஆர்ப்பரித்தான்; அவ்வளவில் பட்டாணியரிலே பலரைப் பலி கொண்டான்; தானும் பலியானான்.

அவ்வாறே அரசிளங்குமாரர் பதினொரு பெயரும் களப்பலியாகி, பத்திரகாளியைக் களிப்பித்தனர். ராஜ குலத்திலே எஞ்சி நின்றோர் இலட்சுமண சிம்மனும் அஜயசிம்மனுமே. உடன் பிறந்த அனைவரும் உயர்பதம் பெற்றதைக் கண்ட அஜயசிம்மன் தன் தந்தையின் பாதம் பணிந்து, "என் ஐயனே! சூரிய குல மன்னோ நமது! இராமன் கானகஞ் சென்றான் என்றால், இலக்குவன் உடன் சென்றான், பரதனோ தன் தாய் தேடித் தந்த அரசினைத் துச்சமாக நினைத்துத் தவக்கோலமே பூண்டு நந்திக் கிராமத்தில் வசித்து வந்தான், சத்துருக்கனும் அயோத்தியில் தங்காமல், பரதனுடன் தவமியற்றி நின்றான். நான்—அக்குலத்தில் உதித்த நான்—என் சோதரர் வீர சுவர்க்கம் புகுந்திருக்க ஆசை நச்சி உயிர் சுமந்து வாழ்வதோ? உலகம் சிரிக்காதோ!" என்று அலறினான்.

மூப்பு வந்து கூடிக் கொள்ளும் நிலையில் உள்ள இலட்சுமண சிம்மன் மனம் தாளவில்லை. எனினும் பிதாவின் ஆணை! மீறி நடத்தல் ஒண்ணாது. அலாவுதீன் சேனையோ கும்பல் கும்பலாகக் கிளம்பி வருகிறது. நம் வீரர் தொகையோ நாளுக்கு நாள் குறைந்துகொண்டே போகிறது. சின்னாளில் சித்தூர் நம் கைதவறுமென நினைக்கிறேன். ஆதலின் இப்போதே நீ தந்திரமாக பகை வரிசையைத் தாண்டிச் சென்று பதிவிருந்து சமயம் பார்த்துச் சித்தூரை மீட்க வேண்டுமென்றுரைத்தான். உடனே இரணகளமும் புகுந்தான். அஜயசிம்மனும் அங்ஙனமே புறப்படலானான் தாமதியாமல்.

சித்தூர்க் கோட்டை விழுந்துவிடுமென அங்கிருந்த மாதர் மணிகள் அனைவருக்கும் தெரியும். மன்னவன்

மடிந்தபின் உயிர் வாழ அவர்களுக்குச் சம்மதமில்லை. ஒரு சமயம் வாழ்வும் கற்பெனும் அணிகலம் பங்கமுறும். பகைவரோ பலவகையான வெறி கொண்டுள்ளான். 'மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா' அல்லவா? கவரிமான் தன் வால் மயிரில் ஒன்றை இழப்பினும், உடனே உயிர் விடும். அம்மானினும் மானத்தைப் பெரிதாக மதித்துப் பிராணனைத் திரணமாக மதிக்கும் ராஜபுத்திர மாதர் தம் கற்புக்குப் பங்கம் வரச் சம்மதிப்பாரோ?

முன்னாளிலே சீதாதேவி மனம் மகிழ்ந்து அக்கினி குண்டத்தில் குளித்ததாக இதிகாசங்கள் இசைக்கும். அவ்விதமே இருபதாயிரம் மாதர்—எழிலின் அவதாரமான மாதர்—அம்மையின் ஆயிரம் நாமங்களையும் ஓதிக் கொண்டு கல்லாடையும், கறுமலரும் தரித்துக்கொண்டு, அந்தப்புரத்தின் நிலா முற்றத்திலே கொழுந்து விட்டெரியும் தீயில் ஒருவர் பின் ஒருவராகத் தோப்பெனக் குதித்துத் தேவருலகம் சேர்ந்தனர். அரசி முதல் ஆண்டிச்சி வரையில் பெண்ணாயினர் அனைவரும் அங்ஙனம் தீக் குளித்ததைக் கேட்டவுடனே பகைவரின் மீது பாய்ந்தான் பெருவேந்தன் இலட்சுமண சிம்மன்.

கோட்டையின் கதவுகள் திறக்கப் பெற்றுப் படை நடுவே இலக்குவன் பாய்ந்தது கண்டு, பட்டாணியப் படைகள் விலவிலத்தன. பாரதப் போரிலே கௌரவ சேனையின் நடுவே அபிமன்னன் புகுந்து கலக்கியதே போல், இலக்குவனும் அலாவுதீன் சேனையைக் கலக்கினான். இதர ராஜபுத்திர வீரரும் தம் பார்த்திபனைப் பின் தொடர்ந்து தயிர்ப்பானையில் மத்திட்டுக் கலக்குவதே போல் பட்டாணிய வீரரைப் பதற

வடித்தனர். அதுகண்ட அலாவுதீன் போரின் விளைவு யாதாமோ?—என்று கலங்கி நின்றான் கையைப் பிசைந்து கொண்டு.

எனினும் பட்டாணிய வீரர் வெள்ளம் வெள்ளமாக வந்து குவிந்தவண்ண மிருந்தனர். ரஜபுத்திர வீரரோ வீர சுவர்க்கம் புகாநின்றனர். சிற்றாறொன்று கருங் கடலை நிலைகுலையச் செய்ய இயலுமோ? இயலாதல்லவா? ராணாவும் ரஜபுத்திரரும் வெட்டுண்டு வீழ்ந்தனர், விதி வலியால். பன்னீராண்டு கொடும் போர் நடந்த பின்னரே சித்தூர்க்கோட்டை சிதறி விழலாயிற்று. அதுவும் ஒரு லட்சம் வீரரை அலாவுதீன் காவுகொடுத்த பின்னர்தான்.

அலாவுதீன் அடங்கா மகிழ்ச்சியுடன் அக் கோட்டைக்குள் புகுந்தான். புகுந்துமென்ன? உயிரற்ற உடல் போலவே அந்நகரம் தென்பட்டது. எனினும் விரைந்து செல்லலானான் அந்தப்புரம் நோக்கி. தொலைவிலே புகைப்படலத்தைக் கண்டதும் திடுக்கிட்டான் அக்காவலன். காரிகையர் எவரையும் காண முடியாதெனக் கண்டு கொண்டான். மலைகல்லி எலியா பிடித்தோமென்று பேதுற்றான். நகரின் வனப்பையும் அலங்காரத்தையும் நோக்க அவன் வயிறு மண்டி எரிந்தது.

குரங்கின் கையில் பூமாலை சிக்கியதுபோல், சித்தூர் நகரம் அக்கொடியவன் கையில் சிக்கிச் சீரழிந்தது. இன வெறி தலைமட்டங்கொண்டு விடவே, அழகிய ஆலயங்கள் எல்லாம் தரைமட்டமாயின. அரண்மனைகள் அடியோடு பாழாயின. வேலைப்பாடமைந்த மண்டபங்கள் மண்ணோடு மண்ணாயின. கருதிய காரிகையாம் பத்மினி கிட்டா

யிடினும் கோட்டையைக் குலைத்தேனெனக் குதூகலித்தான். கோட்டைக் காப்பு போன்ற மாவேந்தன் எம்பாவை மன்னவனுக்கு யிப்படி சென்றான் அவ்வழியே.

நாட்கள் பல சென்றன. தப்பிச்சென்ற அஜய சிம்மன் வரவே இருக்கவில்லை. கிடைக்கும் ரஜபுத்திர வீரரைத் திரட்டி, மாவேந்தனை விரட்டி, சித்தூரில் அமர்ந்தான் சிங்காதனத்தில். மேலும் படைகொண்டு வந்து பார்க்கலாம் என்று அலாவுதீனுக்கும் ஆசை போகவில்லை. பலமுறை சென்றும் பட்டது போதுமென அச் சுல்தான் என்னவோ வாளாக் கிடந்தவன் அத்தோடு கனாடு.

தேவியின் தீக்குளி

சுதந்திரப் பிரியர், சுத்த வீரர், தேச பக்தர் இவர்களுக்குப் புண்ணிய யாத்திரை ஸ்தலம் சித்தூர்க் கோட்டை! ஆயிரக்கணக்கான—அன்று, லட்சக்கணக்கான—வீர ரஜபுத்திரர் அங்கே சுதந்திர தேவிக்குப் பலியாயினர். பலியாகு முன், பகைவரையும் பழி வாங்கிப் பெரும் பலிகொண்டனர். இன்றும் அம்மண்ணை உற்று நோக்கினால், ரத்தக் கறை காணலாம்; நிணச் சேறு கலந்து கிடப்பதைப் பார்க்கலாம். சித்தூர் மண்ணை “வீர விபூதி” என்றே விளம்பவேண்டும்.

ஒரு முறை, இரு முறை, மும் முறை அக் கோட்டை மண்ணோடு மண்ணாகியது. முடித்தலைகள் பல அங்கே பறியுண்டன. மாதர் மணிகள் பல்லாயிரக் கணக்கில் அங்கே அக்கினி குண்டத்தில் குதித்து ஆவி விடுத்தனர். அல்லாவுதின் கில்ஜி என்ன, அக்பர் சக்கரவர்த்தி என்ன, அக் கோட்டையின் முன்னே குனிந்து குலைந்து குப்புற விழுந்தனர். ரஜபுதன நாடுகளில் உதயபுரி என்பதற்கு அச்சித்தூரே முன்னம் ராஜதானி. ஓராயிரம் ஆண்டு காறும் அக் கோட்டை எடுப்பாகவே இருந்தது.

தசரத புத்திரன் தன் தேவியுடனும் தம்பியுடனும் வனவாசஞ் செய்த காலத்திலே சித்திரகூடத்தில் தங்கியிருந்தானென இதிகாசங்கள் இசைக்கும். அச் சித்திர கூடமே சித்தூர் என்பர் பெரியோர். இன்று அச்

சித்தூர்க் கோட்டை இடிந்தும் மடிந்தும் தோன்றும், எனினும் வானை யளக்கும் வெற்றி மண்டபங்களும், கருத்தைக் கவரும் ராஜ மண்டபங்களும், மனத்தை ஈர்க்கும் மகத்தான உப்பரிகைகளும் புராதன சிற்பச் செல்வத்தின் கீர்த்தியைப் பாழ் நிலையிலும் புலப்படுத்தா நிற்கும்.

பதினாறாம் நூற்றாண்டின் மத்தியிலே ராணா விக்கிரமஜித்தன் என்பான் அதன் வேந்தனாக விளங்கினான். சித்தூரின் சாபக்கேடு போலும், அரசியலை அவன் கவனிக்கவில்லை. களியாட்டத்திலேயே அவன் மூழ்கிக் கிடந்தான். அன்றியும் பெருமக்களையும், பிரதம வீரர்களையும் பகைத்துக்கொண்டான். அதனால் நாட்டு மக்கள் மனம் புழுங்கி நின்றனர். அச் சித்தூரின் மேற்கே யுள்ள தேசம் கூர்ஜரம். அதனை அப்போது முகம்மதியர் ஆண்டு வந்தனர். அக் கூர்ஜரத்துக்கும் சித்தூருக்கும் அன்று ஜன்மப் பகை.

கூர்ஜர வேந்தரில் சிலர் சித்தூரிலே சிறைபட்டுக் கிடந்தனர். பின்பு காருண்யம் வாய்ந்த சித்தூர் வேந்தரால் சிறப்புப் பல பெற்று, விடுதலையும் எய்தினர். பகதூர் ஷா என்பான் கூர்ஜர வேந்தனாக வந்ததும், தனது மூதாதைகளின் முற்பட்ட நிலையை நோக்கிப் பார்த்தான். சித்தூரைப் பழி வாங்க வேண்டுமென்று சித்தம் கொண்டான். அதற்கான காலமும் இடமும் கருதி நின்றான். ராணா விக்கிரமஜித்தன் விபரீதம் விளைத்து நின்ற சமயம், அப் பகதூர் ஷா படையுடன் கிளம்பினான்.

சித்தூரின் பெருமக்களும் பிரதம வீரரும் பிணங்கி நின்றமையால் போர்க் கோலங் கொள்ளவில்லை.

களியாட்டத்தில் மூழ்கிக் கிடந்த விக்கிரமஜித்தனும் யுத்த சன்னத்தம் ஆகவில்லை. பகதூர் ஷாவுக்கு வேறு என்ன வேண்டும்? அவனைத் தடுத்து நிறுத்துவார் எவரும் இல்லாது போயினர். ஆதலின் அக்கூர்ஜர வேந்தன் கோலாகலமாக முன்னேறிப் பற்பல பிரதேசங்களையும் வசஞ்செய்துகொண்டு, சித்தூர்க் கோட்டையின் முன்னே பாடி வீடமைத்து அதனை முற்றுகையிட முயலா நின்றான்.

சித்தூர்க் கோட்டைக்கு ஆபத்து என்று தோன்றியதுதான் தாமதம், சித்தூரிலுள்ள ஆண் பெண், குழந்தை எல்லோருமாக ஆர்த்தெழுந்தனர்; தோளிரண்டும் தட்டினர்; வீர ஆவேசங் கொண்டனர்; அன்னியனை உள்ளே புக விடுவதா?—என்று வெஞ்சினம் பேசினர்; உயிருள்ளவரையில் சித்தூரைக் காத்தே தீருவதெனக் கங்கணம் பூண்டனர்! சித்தூரின் சிற்றரசரில் ஒருவனான அர்ச்சுன சிம்மன் என்பான் அருஞ்சமர் ஆற்றி வீர சுவர்க்கம் புகுந்தான்! பாகசிம்மன் என்னும் பாளையக்காரன் பதறியெழுந்து, பகைவரை வெட்டிச் சாய்த்துப் பரமபதம் எய்தினன்!

பிணங்கி நின்ற பெருமக்களும் பிரதம வீரரும் சித்தூர்க் கோட்டையின் முன்னே சீறி நின்று, பகதூர்ஷாவைப் பரிபவங்கண்டு பாருலகைத் துறந்தனர். ஜாவேரிபாய் எனும் அரசிளங் குமரியோ ஆடவர் உடை தரித்து, மார்பகத்தே வீரகவசம் பூண்டு, பெருவீரருக்குத் தலைவியாக நின்று, பகைவரிலே பலரைப் பலி கொண்டு, படுகளத்தில் சாய்ந்தனள். அங்ஙனம் வீராதிவீரர்

பலரும் வெங்களத்தில் பொன்றி, வீரசுவர்க்கம் போய் விட்டனர். ராஜகுடும்பத்தாரில் ராணி கர்ணவதி ஒருத்தியே எஞ்சிநின்றவள்.

சித்தூர் விழுமுன்னம் வீரச் சாவடைய அத்தேவி கங்கணம் பூண்டனள். அக்காலத்தே முகம்மதியர் ஒரு நாட்டின்மீது வெற்றி கொள்ளின், இளமங்கையர் அனைவரையும் சிறைசெய்து காதல் கிழத்தியாராகக்கொண்டு கொக்கரித்தல் வழக்கம். ஆதலின் அம்மங்கையரை முதலில் காக்கக் கருதினள் ராணி கர்ணவதி. சித்தூர்க் கோட்டையின் நடுவே அகண்டமான அக்கினிக் குண்டமொன்று வளர்த்தாள். பதின் மூன்றுயிரம் பெண்மணிகளுக்குத் தலைவியாக நின்றாள். அக்கினிக் குண்டத்தில் குதித்துக் குளிக்க அனைவரையும் அழைத்தாள். எல்லாரும் நல்லதென்று எழுந்தனர்.

இதற்கிடையே நிகழ்ந்த சம்பவமொன்று சாற்ற வேண்டும். சித்தூர்க் கோட்டையைக் காக்கமுடியாதெனக் கண்டதும், கர்ணவதிக்குக் கவலை பிறந்தது. சித்தூரைக் காக்க வகையொன்றும் இல்லையோ என்று அத்தேவி ஆராய்ந்தனள். முன்பு சித்தூர் வேந்தனை சங்கர சிம்மனுடன் பெரும்போர் புரிந்தவன் பாபர் சக்கரவர்த்தி. வஞ்சனையினலும், துக்கத்தினலும் அச்சங்கரன் மாண்ட பின்பே, டில்லியில் சிம்மாசனம் ஏறினன் அப்பாபர் பெருமகன். அவன் மைந்தன் ஹுமாயூன் என்பான் சித்தூர் முற்றுகை சமயம் டில்லி வேந்தனுகத் திகழ்ந்தவன். ஆபத்துக் காலத்தில் வந்து உதவ வேண்டுமென அந்த ஹுமாயூனுக்கு "ரட்சாபந்தனம்" அனுப்பினள் ராணி கர்ணவதி.

ரட்சாபந்தனம் என்பதன் வரலாறு யாது? தனது கற்புக்கோ மானத்துக்கோ, தேசத்துக்கோ பங்கம் நேரும் சமயம், வேறு வகையில்லை என்று தோன்றினல், அச் சமயம் வீரசிகாமணியாக விளங்கு மொரு ஆடவனுக்குத் தூதொன்று அனுப்புவர், ரஜபுத்திர மங்கையர். "வெற்றிவீர! பேராபத்துநேர்ந்துளது. விரைந்து வந்து காத்தல் நினது கடன். உனது உதவியை நாடுகின்றேன்" என்பதே தூதின் வாசகம். அத்தூதனிடம் பட்டுக் கயிற்றினலோ பசும் பொன்னினலே, நவரத்தினமும் வைத்திழைத்த தங்கத்தினலோ தயாரான கடகம் ஒன்றை அனுப்புவாள். சுத்த வீரனுவோன் அக்கடகத்தை அன்புடன் ஏற்று ஆருயிரையும் ஒரு பொருட்டாக எண்ணுமல் வந்து ஆபத்திலே தலைகொடுக்க முற்படுவான்.

அடைக்கலக் கடகம், ரட்சாபந்தனம் ஓர் அரசிளங் குமரியால் பரம ஏழைக்கும் அனுப்பப்படும். பரம ஏழ்மையான ஒருத்தி ஓர் ராஜகுமாரனுக்கும் அனுப்புவாள். தேர்ந்த வெற்றி வீரனுக இருக்கவேண்டும் என்பதே முக்கியம். அவனது குலப் பிரிவையோ, மதத்தையோ, பதவியையோ, அம் மாதர் கவனியார். ரட்சாபந்தனம் வந்துவிடின், அதனை ஏற்றுக்கொண்டே தீரவேண்டும். அவள் விரும்பியவண்ணம் காரியத்தையும் சாதிக்கவேண்டும். இன்றேல் காரியத்தைச் சாதிப்பதில் உயிரை இழக்கவேண்டும். பெண்ணின் கோரிக்கையை ஈடேற்றின், கைம்மாறு என்ன கிடைக்கும் என்று சிந்தித்தல் ஆகாது. கடமையை ஆற்றினேம், புகழே பூண்டோம்—என்றே எண்ணுதல் மரபு.

ரட்சாபந்தனத்தை ஏற்றுக்கொண்டதும், அவன் அவளது சுவிகார சோதரனுவான். அவளும் சுவிகார

சோதரியாவாள். அப்பெண் கன்னியா யிருப்பின், உனக்கு மாலையிடுவேன் என்று ஒரு சமயம் உரைத்தலும் உண்டு. காரியம் சித்தியானதும் அங்ஙனமே அவள் மாலையிடுவாள். ரட்சாபந்தனம் பெறுவதை ஒரு பெரும் பெருமையாகவே வீரனவோன் மதிப்பான். அவ்வீரனும் தனது நிலைமைக்கு ஏற்பத் தானும், பட்டு பொன் ரத்தினம் ஆகிய ஒன்றினலான ரட்சாபந்தன மனுப்பித் தன் சம்மதியை அறிவிப்பான்.

சங்கர சிம்மனது தேவியரில் ஒருத்தியான ராணி கர்ணவதி அவ்விதமே ஹுமாயூனுக்கு ரட்சாபந்தனம் அனுப்பினள். அந்த ஹுமாயூன் முகம்மதியனயினும் என்ன? ரஜபுத்திரரின் பெருந்தன்மையையும், வீரத்தையும் நன்கறிந்தவன்; ராணாசங்கர சிம்மனுக்கும் தன் தந்தை பாபருக்கும் சண்டை நடந்த காலையில், கூட விருந்து போரை நடத்தியவன்; சுத்த வீரனுமாம். ஆதலின், அவன் அந்த ரட்சாபந்தனத்தை ஏற்றுக் கொண்டு ராணிக்குத் தைரியம் சொல்லியனுப்பினன். ஆயினும் அவன் குறித்த காலத்தில் வரவில்லை.

பதிமூவாயிரம் மாதருக்கு முன்னே அக்கினி குண்டத்தினருகில் நின்ற ராணி கர்ணவதி சித்தூர்க் கோட்டையின் நிலையை உணர்ந்தாள்; பகைவன் பகதூர் ஷாவின் வெற்றியைப் பார்த்தாள்; ஹுமாயூன் வரவில்லை என்பதையும் தெரிந்துகொண்டாள்; தாமரைத் தடாகத்திலே நீராட இறங்கும் பான்மையைப்போல அக்கினி குண்டத்தில் குதித்தாள். ஏனைய மாதர் அனைவரும் சிறிதும் முகஞ்சுளியாமல் அக்கினிக் கடவுளின் கரத்தில் அமர்ந்தனர். "அம்மை பவானியே! ஏகலிங்க

மூர்த்தியே!" எனும் கோஷம் வானுலகையும் செவிடாக்கியது.

மாதர் அங்ஙனம் தீக் குளித்ததும், எஞ்சியிருந்த ஆடவர் மஞ்சள் உடை தரித்து, மார்பகத்தே மாலை சூடி, இருகைகளினும் வாளேந்தி, கோட்டை வாயிலைத் திறந்து விட்டு, பகை வரிசையின் மீது பாய்ந்து, வீச் சொன்றுக்குப் பலரை வெட்டிச் சாய்த்து ஒருவர் தவறாமல் எல்லோரும் வீர சுவர்க்கம் புகுந்தனர். அங்ஙனம் உயிரை வழங்கியோர் முப்பத்து ஈவாயிரவர்.

அத்தனை உயிர்கள் பலியான பின்பே சித்தூர்க் கோட்டையில் பகதூர்ஷா புகமுடிந்தது. அவன் பக்கத்தில் பலியான மக்களோ ஐம்பதாயிரவர். நகரினுள்ளே புகுந்து பார்த்தவுடன் அவன் மனம் திடுக்குற்றது. மானுட அவயவங்கள் எங்கும் சிந்திச் சிதறியிருத்தல் கண்டு, கல் நெஞ்சமும் கரையும் அன்றோ? சிவந்த ஆடை போர்த்தியதே போல் சித்தூரெங்கும் இரத்தம் மூடுண்டு கிடந்தது.

பதின்மூன்றும் நூற்றாண்டிலே அல்லாவுதீன் உள்ளே சென்று புகுந்த காலத்திலும் அக்காட்சிதான். எனவே இரண்டாம் முறையாக நம் சித்தூர் அத்தகைய சீரழிவு கொண்டது. பழிவாங்கி விட்டோம் எனும் ஆறுதலும் வெற்றி வெறியும் கொண்டு, அந்நகரில் புகுந்த பகதூர்ஷா நெடுநாள் ஆங்கிருக்க இயலவில்லை. பதினன்கு நாட்கள் ஆனதும் அந்நகரை விட்டு ஓட்டம் பிடிக்கவே நேர்ந்தது. காரணம் யாதெனில், ராணி கர்ணவதி ரட்சாபந்தனம் அனுப்பிய காலையில் ஹுமாயூன் என்பான் வங்காளத்தே போர் புரிந்து கொண்டிருந்தான். திடீரென்று அப்போரை நிறுத்தி

விட்டுவர அவனால் ஆகவில்லை. டில்லியரசைக் கைப் பற்றும் நோக்குடன் கிளம்பிய பகைவரைப் போர் நடுவே விட்டு வருதல் எங்ஙனம்?

கூடிய விரைவில் போரை முடித்துக் கொண்டு, சித்தூர் நோக்கினான் ஹுமாயூன். இதற்குள் சித்தூர்க் கோட்டை சீர்கெட்டுப் போய் விட்டது. நகரினூடே பகதூர்ஷா இருப்பதைக் கண்டான், ஹுமாயூன்; வாக்குறுதியைக் காக்க வந்திருப்பதாகப் பகதூர்ஷாவுக்குத் தூது போக்கினான்; வீணே உயிர்ச் சேதம் காணவேண்டாம் என்றும் சொல்லி யனுப்பினான். பகதூர்ஷாவோ அதனை மதிக்கவில்லை. போர் முகத்தே பார்த்துக் கொள்ளலாம் என்றே பதில் விடுத்தான். பல சொல்லி என்ன? இருதிறத்துப் படைகளும் அணி வகுத்து நின்றன. ஒருவாரம் சண்டை நடந்தது. முடிவில் பகதூர்ஷாவின் படைகள் முறிந்தன. ஹுமாயூன் வெற்றிமாலை சூடினான். சித்தூர் நகரம் மீண்டது. பின்னரே ராணி கர்ணவதியின் கதியை உணர்ந்தான் அப்பெருவேந்தன்.

அஃதறிந்தும் ஹுமாயூன் பட்ட துயரம் பகருந்தர மன்று. "காலங்கடந்து, சொன்ன சொல்லைக் காத்து யாது பயன்? பதினாயிரம் மாதர் மானமே பெரிதெனமதித்து ஆவி விடுத்தனரே! அத்தனை பெயரும் இவன் ரட்சாபந்தன மேற்றும் வாளா யிருந்தனனே என்று சபித்திருப்பாரேசு? கற்பரசியரின் சாபவுரை வாள் முனை யினும் கொடிய தன்றோ? ஆண்டவனே! என் செய்வேன்! என் மீது வஞ்சனையில்லை. ராணி கர்ணவதியே! சித்தூர் மீண்ட களிப்புடன் உன்னைக் காண நான் பாக்கியம் படைக்கவில்லை. தெய்வ வடிவிலேனும் நீ கண்டு களிப்பா

யென்றே கருதுகின்றேன். அருமந்த அரசியே! கோபம் வேண்டாம். தயவு கொள்வாயாக" என்று பெரிதும் புலம்பினன்.

மீட்ட சித்தூரை யாரிடம் ஒப்படைப்பது? உரைக்க ஒண்ணு அழிவும், அவதியும் நேர்ந்த காலத்தே ஊரை விட்டு ஓடிப்போன ராணு விக்கிரமஜித்தன் பதுங்கி யிருக்கும் இடத்தை ஹுமாயூன் உணர்ந்துகொண்டான்; உடனே அவ்விடஞ் சென்று, அவனை யழைத்து வந்தான்; சித்தூரிலே அவனை அரியணையில் அமர்த்தி நற்புத்தி கூறி, விடை பெற்றேகினன் டில்லிக்கு.

சித்தூர் மீட்கப்பட்டது கேட்டு ரஜபுதன மக்கள் அனைவரும் மனமகிழ்ந்தனர். மன்னவன் ஹுமாயூனை மனமார வாழ்த்தினர். "வேற்று மதத்தானயினும் என்ன? ரட்சாபந்தன தத்துவத்தை மதித்து, விரைந்து வந்து கடமையை ஆற்றிச் சென்றுன்," என்று போற்றினர். விக்கிரமனும் தனக்கு உயிர்ப்பிச்சையும், ராஜ்யாபிஷேகப் பிச்சையு மளித்த ஹுமாயூனை மனத்தாரே வாழ்த்தித் தொழுதான். சிறிது காலத்திற்குள் சித்தூரும் முன் போல் தளிர்த்தது.

கூர்மனுக்கு அபயம்

தன் தேவி இட்டதே சட்டம், சொன்னதே தீர்ப்பு, நடத்தினதே ராஜரீகம் என்று ஒப்பிநின்றவன் ஜஹாங்கிர். டில்லியிலிருந்து அரசு செலுத்திய மொகலாய முடி மன்னவரில் அவன் நாலாமவன். அவனுக்கு மைந்தர் நால்வர். அந்நால்வரும் நான்கு விதம். "பெறுமவற்றுள் யாமறிவதில்லை, அறிவறிந்த மக்கட் பேறல்ல பிற" என்றார் திருவள்ளுவ நாயனார். சத்புத்திரன் என்பது பாக்கிய வசமே!

முதல்வரில் மூத்தவன் குஸ்ரு எனப்படுவான். இவன் நல்ல அறிவாளி; வசீகரமான தோற்றம் உடையவன். அதுவே ஒரு சாபத்திடாய் முடிந்தது அவனுக்கு. இரண்டாமவன் பர்வேஸ் என்பவன். இவன் ஒரு கோழை, நெஞ்சுரம் என்பதே தெரியாதவன், போகத்தில் மூழ்கியவன், சதா மதுபான மோகங் கொண்டவன், அதனால் அற்ப ஆயுளில் முடிந்தவன். மூன்றுமவன் கூர்மன்; பின்னாளில் ஷாஜஹான் என்று பெயர் பெற்றவன். நாலாமவன் ஷாரியார். இவனும் போக போக்கியப் பித்தன்.

சின்ன வயதில் நால்வரும் சேர்ந்தே உண்டு, உடுத்து, உலாவுதல் வழக்கம். குழந்தைப் பருவத்தில் சூதும் வாதும் ஏது? முற்றின பின்புதானே குணகுணங்கள் குலவும். காளைப் பருவம் வாய்த்ததுதான் தாமதம். பட்டமேற வேண்டுமென ஒவ்வொருவனும் பட்ட

பாடும், செய்த சூழ்ச்சியும், புரிந்த கொலையும், இழைத்த தீமையும் பேச ஒண்ணாது. ஆசைப்பேய் பிடித்தாட்ட ஒவ்வொருவனும் தன் சோதரனைக் கண்டால் சீறுவான்; மேல் விழுந்து சதையைப் பிடுங்கித் தின்று விடலாமா என்றும் கறுவுவான். மனிதர்களா இவர்கள், என்று சிலர் எண்ணவும் நேர்ந்தது.

பிள்ளைகளின் பான்மையைக் கண்டான் ஜஹாங்கீர். தன் உயிருக்கே உலை நேருமென்று உணர்ந்தான்; அந்த ஆபத்தைத் தவிர்க்க வேண்டியே, தொலைவிலுள்ள மாகாணங்களின் அதிகாரிகளாக—ராஜப்பிரதிநிதிகளாக—அவர்களை நியமித்தான்; திருடு பிடித்த தோளுக்கு வேலை கொடுப்பது போல், ஆங்காங்குள்ள எதிரிகளை அடக்குமாறும் அன்னாரை திட்டஞ்செய்தான். கொள்ளியை எடுத்துத் தலையைச் சொறிந்து கொண்டது போலாயிற்று அச்செயல்.

குஸ்ரு என்பானது அழகிய தோற்றங் கண்டு மாகாண மக்கள் பலரும் அவன் மீது விருப்பு மிகக் கொண்டனர். தேவியின் பேச்சையே கேட்டு நடப்பவன், நல்லரசன் ஆவனோ?—என்று ஜஹாங்கீரின் மீது அவர்களுக்கு வெறுப்பும் உண்டாயிற்று. சுயநலமிகளும் சூழ்ச்சிக் காரரும் சேர்ந்து தூபம் போடவே, குஸ்ருவுக்கு அரசில் ஆசை பாய்ந்தது. எங்ஙனமேனும் டில்லியில் முடிசூட வேண்டுமென்ற பேராவல் பொங்கி எழுந்தது. அவன் சேனையும் கிளம்பியது எக்காளத்துடன். ஜஹாங்கீர் யாது செய்தான்?

குஸ்ருவைப் பிடித்துச் சிறையில் போட்டான் ஜஹாங்கீர். ஆயினும் சின்னாளைக்கெல்லாம் எப்படியோ வெளிப்பட்டான் குஸ்ரு; மீண்டும் தந்தைக்கு விரோத

மாகக் கிளம்பினன். அப்போதும் குஸ்ருவுக்குக் காவல் கூடமே வாசமாளிகையாயிற்று. அத்துடன் அவனது இரண்டு கண்களும் பறியுண்டன. அரசின் மீது கொண்ட ஆசையின் பலன் இதுதானே என்று அவன் தேம்பிக் கிடக்கலானன், பதினைந்து வருஷம்.

ஜஹாங்கீரின் தேவியான நூர்ஜஹானுக்கு அம்மைந்தரிலே மூன்றுமவனை கூர்மன் என்பான் மீது பாசம் ஓடியது. காரணம், முதலாவதாக அவனது (இருபதாண்டு) வாலிபம்; இரண்டாவதாக வனப்பு; மூன்றுவதாக முக விலாசம்; நாலாவதாக நல்லொழுக்கம்.

மூத்தவனே கண்ணிழந்து கிடக்கிருன்; இரண்டாவனே தீரனயினும் துன்மார்க்கத்தால் தேசிழந்து திரிகிருன்; நாலாவனே வெறும் போக புருஷனக உலவுகிருன். ஆதலின், கூர்மனுக்குத் தன் மருமானை மணம் புரிவித்து, நாளடைவில் மன்னவனுக்கலாமென, அம்மாதரசி மதித்தாள். அவ்வாறே மணவினையும் நடந்தேறியது. கூர்மனுக்கு மனைவியாக வாய்த்தவள் பெயர் மும்தாஜ் மஹால். இவள் பெயரை நிலை நாட்டவே பின்னளில் தாஜ் மஹால் எனும் திவ்யக் கல்லறை மாளிகை கிளம்பிற்று.

சதிபதிகள் என்றுல், கூர்மனும் மும்தாஜுமே உதாரணம் ஆவர். கணவன் கருத்தை அறிந்து மதிமந்திரிபோல் அவள் நடந்து வந்தாள். அவனும் கொண்டாளின் குணத்தைக் கண்டு களிப்பு மிகக் கொண்டு, பூவில் பொருந்திய மணமே போல் பொலிந்து நின்றுன். கூர்மனுக்குப் பின்னளில்—அதாவது டில்லியிலே பட்டமேறிய பின்—பெயர் ஷாஜஹான். இருவரும் இணை பிரியா அன்றில் போல் இருந்தனர். கணவன் எங்கே

சென்றாலும் சரி, அஃது போர் முனையானாலுஞ் சரி, மும்தாஜ அவனுடன் செல்வாள். கண்ணைவிட்டு இமை பிரியுமோ?

இளவரசனாக இருந்த காலையில், அக்கூர்மன் தட்சிணத்தின் மீது தண்டுடன் சென்றான். தக்காண முகம்மதிய அசுரகளை முதுகுகாணும் சமயம். மொகலாய தளகர்த்தருக்குக் காசும் தூசும் வாரி இறைத்தான் தட்சிண வேந்தன். உடனே தளகர்த்தர் சோம்பிக் கிடக்கலாயினர். அது கண்டு மொகலாய வீரரும் வாளா யிருந்து விட்டனர். அங்ஙனே கண்ட உடனே, கூர்மனது தோழரும் பரிவாரத்தினரும் பணத்தாசை பிடித்து இளவரசனைக் கைவிட்டு ஓடிப்போயினர்; மொகலாய வல்லரசின் இளவரசன் போர் முனையிலே தன்னந்தனியனாய் ஆருமற்ற பாவிபோல் நிற்கலானான்.

அவ்வேளை உடனிருந்தோர் இருவரே. இருவரில் மனையாள் மும்தாஜ் ஒருத்தி. அவளைக் கண்டதும் கட்டியணைத்துக்கொண்டு கண்ணீர் பெருக்கினான் கூர்மன்; கதறியழுதான். கலங்கியும் நின்றான். நல்ல வேளை தட்சிண முகம்மதியர் வந்து அவனைக் கைது செய்யவில்லை. என் தேவியே எனக்குத் தாரகம் என்று கூர்மன் கூறி ஏதேதோ சொல்லலானான். அச்சமயம் அன்பனை நோக்கினாள் மும்தாஜ். அயலே நிற்கும் வீர புருஷனையும் பார்த்தாள். பின்னர் இங்ஙனம் பேசினாள்:

" அன்ப! நானோ நினது அடியாள். இருவரின் வாழ்வும் ஒன்றே. ஒருவர் பிரிந்தால், மற்றவருக்கு வாழ்வு ஏது? மேலும், நானோ உம்மையே கதியெனக் கொண்டவள். ஆதலின், இச்சமயம் நான் உம் அருகே இருத்தல் ஓர் அதிசயமன்று. நமக்கு அயலே நிற்கும் வீர சிங்

கத்தைப் பாருங்கள். அவரோ நம்மினும் வேறுபட்ட ஜாதி! வேறான மதம்! நமது இனத்தாரான தளகர்த்தரும் வீரரும்—நம் உப்பைத் தின்று காலந் தள்ளிவரும் மனிதருமான அனைவரும் காசாசை கொண்டு, நட்டாற்றில் நம்மைக் கைவிட்டு ஓடிவிட்டனர். எனவே, இதோ நிற்கும் வீரசிங்கமே உமக்குத் தாரகம்! வேறென்ன விளம்புவேன்?''

அக்கணமே அப்பக்கம் திரும்பினான் கூர்மன். அருகே நின்ற பீம சிம்மனைக் கட்டித் தழுவினான். “எனக்கு நீயே மாதா, பிதா, தோழன் எல்லாம்! மும்தாஜ் என்னை விட்டகலா திருத்தல் சுயநலங்கருதி! நீ என்னுடன் இருத்தலோ தர்மங்கருதி, இப் பாரத பூமியின் மண் வாசியை விளக்க, உங்கள் குலத்தின் உயர்வைப் புலப்படுத்த, ரஜபுத்திரரின் பெருந்தன்மையைப் பாருலகினுக்குச் சுட்டிக் காட்ட! வேறு என்ன கூறுவேன்! ஆண்டவன் அருளால் பின்னாளிலே நான் அரியணை ஏறின், உன்னை மறவேன் உன் குலத்தையும் மறவேன், இப்பூமியின் பெரு நலத்தையும் தர்மத்தையும் மறவேன்!'' என்று பேசினான்.

‘ஷாஜஹானது சரிதமும் இந்தியாவின் பெருமையும்’ என்னும் நூலொன்று எழுதிய அன்னிய ஆசிரியரொருவர் வரைந்திருப்பது இது: “ நெஞ்சுரப்புள்ள அந்த இருவரும் அயலே இருந்திராவிடின், ஷாஜஹானது கதி அதோகதியாயிருக்கும். ஷாஜஹான் பெரு வீரன்தான்; பேராண்மையும் பொருந்தியவன்தான்; என்றாலும் அந்த இருவர் ஊன்றுகோல் போல் உடனிருப்பதைக் கண்டான்; அதனால் உயிர் விடாது, மனம் ஒடியாது நின்றான். வஞ்சனையும் துரோகமும் வந்து நால்

புறமும் சூழ்ந்துகொண்ட காலையில், எத்தகைய சுத்த வீரனும் மனம் உடைந்திருப்பான். அவன் தேவியின் அன்பு ஒரு புறம் இருக்கட்டும். பீம சிம்மனது தன்மையே தன்மை!''

உருசி கண்ட பூனை உறியை உறியைத் தாவும் என்பது ஒரு பழமொழி. பெயருக்குத்தான் ஜஹாங்கிர் அரசன். உண்மையில் அரசை நடத்தியது—அரசனையும் ஆட்டிவைத்தது—நூர்ஜஹானே! தன் கணவன் நெடுநாள் வாழான் என்பதை அவள் யூகித்தறிந்தாள். தான் நெடுநாள்—அவனுக்குப்பின்—வாழக்கூடு மென்பதையும் உணர்ந்து கொண்டாள். ஆதலின், தன் கணவனுக்குப் பின் பட்டத்துக்கு வருவோனைத் தன் கைக்குள் வைத்துக்கொள்ள அவள் முனைந்து முயலலானாள். மைந்தர் நால்வரில் கூர்மன் மீது அவள் பாசம் பாய்ந்ததல்லவா? அக்கூர்மனுக்கே தன் மருமகளையும் மனைவியாகக் கொடுத்தாளல்லவா? அத்தகைய கூர்மனையே பட்டத்து இளவரசனாக்க அவள் எண்ணினாள்.

பட்டத்துக்கு வரும் இளவரசனாவோன் கீர்த்தியும், ஆண்மையும் வெற்றியும் எய்தல் வேண்டும். ரஜபுத்திர நாடுகளில் மேவார் நாடு ஒன்று தான் அன்றளவும் மொகலாயவரசுக்கு முடிசாய்க்கவில்லை. அந்நாட்டினை வசப்படுத்த அக்பர் எவ்வளவோ முயன்றான். முடியவில்லை. ஜஹாங்கிரும் முனைந்தான். முடியவில்லை. ஆதலின் கூர்மனை யனுப்பி வெற்றிபெறின், அவனைப் பட்டத்துக்கு உரியவனாக்குதல் எளிதென நூர்ஜஹான் நினைத்தனள். அவ்வாறே கூர்மன் திரண்ட சேனையுடன் மேவார் நாட்டின் மீது பாய்ந்தான். அப்போது மேவாரின்

மகாராணு (மகாராஜா) அருஞ்சமர் ஆற்றிப்பார்த்தான். வெற்றி கிட்டவில்லை; தோல்வியும் எய்தவில்லை.

மேவார் ரஜபுத்திரரின் சுதந்திர ஆவேசங்கண்டு, கூர்மன் சொக்கிப்போனான். அத்தகைய வீர சிங்கங்களை வீணை பகைத்துக்கொள்ளாமல், அவர்களுடன் நேசமாயிருத்தலே மேலென்றும் கண்டுகொண்டான். உடனே தூதுவனொருவனை யனுப்பினான் மேவார் மன்னவனிடம். அவ்வேந்தனும் நல்லது என்றான். இருவருக்கும் இடையே ஓர் உடன்பாடு உதித்தது. அந்நாளிலே தோல்விகொண்ட நரபதிகள் அதன் அறிகுறியாக, மொகலாய அரசவை சென்று, மண்டியிட்டுச் சலாம் செய்து காணிக்கை செலுத்தவேண்டும். அந்த உடன்பாட்டின்படி, மேவாருக்குமட்டும் அவ்விஷயத்தில் விலக்கு ஏற்பட்டது. மேவார் இளவரசன் மட்டும் மொகலாய அரசவைக்கு வந்து வீற்றிருந்தால் போதுமெனக் கூர்மன் ஒப்பினான். அத்துடன் மேவார் யுத்தம் முடிவுற்றது.

மேவாரில் கூர்மன் வெற்றி மாலை சூடிவிட்டதாக டில்லிக்குச் செய்தி பறந்தது. உடனே கூர்மனை வரவேற்க அங்கே ஆடம்பரமான அலங்காரங்கள் பலவும் நடந்தன. கூர்மன் பிரமாதமாக வரவேற்கப்பெற்றான். அது முதல் கூர்மனது பிரதாபம் எங்கும் பெருகியது. பெருகவே கூர்மன் மீது ஜஹாங்கீருக்கு அன்பும் ஆர்வமும் ஓங்கின. மேவாரை ஜெயித்தவனே தட்சிணத்தையும் ஜெயித்துத் தரவேண்டும் என்றான் அச்சக்கரவர்த்தி. உடனே கூர்மனைச் சேனாதிபதியாக்கினான்; தட்சிணத்தின் மீதும் ஏவினான் ஒரு பெருஞ்சேனையுடன்.

புறமும் சூழ்ந்துகொண்ட காலையில், எத்தகைய சுத்த வீரனும் மனம் உடைந்திருப்பான். அவன் தேவியின் அன்பு ஒரு புறம் இருக்கட்டும். பீமசிம்மனது தன்மையே தன்மை!''

உருசி கண்ட பூனை உறியை உறியைத் தாவும் என்பது ஒரு பழமொழி. பெயருக்குத்தான் ஜஹாங்கிர் அரசன். உண்மையில் அரசை நடத்தியது—அரசனையும் ஆட்டிவைத்தது—நூர்ஜஹானே! தன் கணவன் நெடுநாள் வாழான் என்பதை அவள் யூகித்தறிந்தாள். தான் நெடுநாள்—அவனுக்குப்பின்—வாழக்கூடு மென்பதையும் உணர்ந்து கொண்டாள். ஆதலின், தன் கணவனுக்குப் பின் பட்டத்துக்கு வருவோனைத் தன் கைக்குள் வைத்துக்கொள்ள அவள் முனைந்து முயலலானாள். மைந்தர் நால்வரில் கூர்மன் மீது அவள் பாசம் பாய்ந்ததல்லவா? அக்கூர்மனுக்கே தன் மருமகளையும் மனைவியாகக் கொடுத்தாளல்லவா? அத்தகைய கூர்மனையே பட்டத்து இளவரசனுக்க அவள் எண்ணினாள்.

பட்டத்துக்கு வரும் இளவரசனாவோன் கீர்த்தியும், ஆண்மையும் வெற்றியும் எய்தல் வேண்டும். ரஜபுத்திர நாடுகளில் மேவார் நாடு ஒன்று தான் அன்றளவும் மொகலாயவரசுக்கு முடிசாய்க்கவில்லை. அந்நாட்டினை வசப்படுத்த அக்பர் எவ்வளவோ முயன்றான். முடியவில்லை. ஜஹாங்கிரும் முனைந்தான். முடியவில்லை. ஆதலின் கூர்மனை யனுப்பி வெற்றிபெறின், அவனைப் பட்டத்துக்கு உரியவனாக்குதல் எளிதென நூர்ஜஹான் நினைத்தனள். அவ்வாறே கூர்மன் திரண்ட சேனையுடன் மேவார் நாட்டின் மீது பாய்ந்தான். அப்போது மேவாரின்

மகாராணு (மகாராஜா) அருஞ்சமர் ஆற்றிப்பார்த்தான். வெற்றி கிட்டவில்லை; தோல்வியும் எய்தவில்லை.

மேவார் ரஜபுத்திரரின் சுதந்திர ஆவேசங்கண்டு, கூர்மன் சொக்கிப்போனுன். அத்தகைய வீர சிங்கங்களை விணே பகைத்துக்கொள்ளாமல், அவர்களுடன் நேசமாயிருத்தலே மேலென்றும் கண்டுகொண்டான். உடனே தூதுவ னெருவனை யனுப்பினுன் மேவார் மன்னவனிடம். அவ்வேந்தனும் நல்லது என்ருன். இருவருக்கும் இடையே ஓர் உடன்பாடு உதித்தது. அந்நாளிலே தோல்விகொண்ட நரபதிகள் அதன் அறிகுறியாக, மொகலாய அரசவை சென்று, மண்டியிட்டுச் சலாம் செய்து காணிக்கை செலுத்தவேண்டும். அந்த உடன்பாட்டின்படி, மேவாருக்குமட்டும் அவ்விஷயத்தில் விலக்கு ஏற்பட்டது. மேவார் இளவரசன் மட்டும் மொகலாய அரசவைக்கு வந்து வீற்றிருந்தால் போதுமெனக் கூர்மன் ஒப்பினுன். அத்துடன் மேவார் யுத்தம் முடிவுற்றது.

மேவாரில் கூர்மன் வெற்றி மாலை சூடிவிட்டதாக டில்லிக்குச் செய்தி பறந்தது. உடனே கூர்மனை வரவேற்க அங்கே ஆடம்பரமான அலங்காரங்கள் பலவும் நடந்தன. கூர்மன் பிரமாதமாக வரவேற்கப்பெற்ருன். அது முதல் கூர்மனது பிரதாபம் எங்கும் பெருகியது. பெருகவே கூர்மன் மீது ஜஹாங்கீருக்கு அன்பும் ஆர்வமும் ஓங்கின. மேவாரை ஜெயித்தவனே தட்சிணத்தையும் ஜெயித்துத் தரவேண்டும் என்ருன் அச்சக்கரவர்த்தி. உடனே கூர்மனைச் சேனுதிபதியாக்கினுன்; தட்சிணத்தின் மீதும் ஏவினுன் ஒரு பெருஞ்சேனையுடன்.

அவ்விதமே சென்றான் கூர்மன் தட்சிணத்தின் மீது! காலம் கூடிக்கொள்ளவே, அங்கும் பெருமித வெற்றியடைந்தான். அவ்வெற்றியைக் கண்டு அனைவரும் களிக்க, நூர்ஜஹானோ மனத்தூடே திகில் கொண்டனள். எங்கும் வெற்றியே எய்திவரும் கூர்மன் எங்ஙனம் ஒரு ஸ்திரீக்கு உட்பட்டிருப்பான் என்பதே அவளது திகிலுக்குக் காரணம். மனம்போலிருக்கும் மாங்கலியம் என்பர். அவள் எண்ணியபடியே கூர்மன் சுயேச்சை உணர்ச்சியுடன் நடக்கலானான்; தனது மதி நலத்தினால், நூர்ஜஹானது மனக்கோளையும் உணர்ந்து கொண்டான்! உடனே இருவர் மனமும் மாறிவிட்டன. நூர்ஜஹானோ உடனே ஷாரியர் என்பானுக்குத் தன் மகளைக் கொடுத்து, மருமகனாக்கிக் கொண்டு, அவன் மீது பேரன்பு காட்டலானாள்.

பொது மக்களுக்கோ ஷாரியரின் மீது பிடித்த மில்லை. ஒன்றுக்கும் உதவாதானைப் பட்டத்துக்கு உரியவனாக்க அரசி முயலுகின்றனளே என்று பலரும் முணு முணுத்தனர்; நூர்ஜஹானது உள்ளக்கிடக்கையென்ன, மக்களின் மனப்பான்மை யென்ன, இவற்றைக் கண்டதும் கூர்மனுக்கு ஆத்திரம் விஞ்சியது, எடுப்பும் மேலிட்டது. இதற்கிடையில் தன் கணவன் மனத்தையும் நூர்ஜஹான் பேதித்து வந்தாள். அதனால் சக்கரவர்த்தியும் கூர்மன் மீது அருவருப்புக் கொள்ளலானான்.

அங்ஙிலையில் விதியின்றிக் கிளம்பினான் கூர்மன். சக்கரவர்த்தியின் சேனைக்கும் ஷாஜஹான் சேனைக்கும் அடிக்கடி பூசல்கள் நிகழ்ந்து வந்தன. வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வந்தும் ஒரு சமயம் கூர்மனது வீரர் படுதோல்வி யடைந்தனர். அடையவே கூர்மனைக்

கைது செய்ய மொகலாயச் சேனைகள் திரண்டு வந்தன. பகைவரின் கையில் கூர்மன் சிக்கிக்கொள்ளும் சமயம், மான சிம்மன் பழைய பீமசிம்மன், ரஜபுத்திரனயிருந்து மதங்கெட்ட முகபத்கான் ஆகிய மூவரும் அச்சமயம் அருஞ்சமர் ஆற்றிக் கூர்மனை விடுவித்தனர். தலைதப்பியது தம்பிரான் புண்ணியமெனக் கூர்மன் ஓட்டம் பிடித்தான்.

எங்கே ஓடி ஒளிவது? மொகலாயச் சேனை வந்து தாக்கினலும் தாக்குப் பிடிக்கும் இடமாக இருக்க வேண்டுமே. மேவாரின் தலைநகரான உதயபுரியே ஏற்ற இடமென உன்னினன். "பல்லாண்டுகளாக அந்நாட்டினை நம்மவர் பாழ்படுத்தினரே, அதனை அவர்கள் மனத்துட்கொண்டு பழிக்குப் பழியாக நம்மைக் கொன்று போடுவாரோ" என்று முதலில் சற்றே சிந்தித்தான். ஆயினும் அந்நாட்டு மக்களது பெருந்தன்மையே கதியெனக்கொண்டு உதயபுரியை நோக்கினன், மனைவி மக்களுடன். அப்போது மொகலாய வீரரும் அவனைத் தொடர்ந்தனர். உதயபுரியின் எல்லையை அவன் நெருங்கியவுடனே, அவ்வீரர் அஞ்சித் திரும்பி விட்டனர்.

உயிருக்கஞ்சி அக்கூர்மன் ஓடி வருவதைக் கண்டதும் உதயபுரி வீரர் அவனை உள்ளன்புடன் வரவேற்றனர். உரிய மரியாதையுடன் அவனை மகாராணவின் சமூகம் சேர்த்தனர். மகாராண கர்ணனைக் கண்டதும், கண்ணீர் விட்டுக் கதறினன் கூர்மன். உயிர்ப்பிச்சை வேண்டுமென்றும் இரந்து நின்ருன். வந்தடைந்த புருவைக் காக்கத் தன் சதையை அரிந்தரிந்து கொடுத்ததுமல்லாமல், துலாக் கோலிலும்

ஏறின சூரிய குல வேந்தரின் வழி வந்தவரன்றோ மேவார் ரஜபுத்திரர்! "உதயபுரி நினது! உனது உயிர் எனது உயிர்! மேவார் உனக்குத் தலைகொடுக்கும்! தயக்கம் வேண்டாம்!" என்றான் மகாராணா. கண்ணிரண்டும் பெற்ற குருடனைபோல் களித்தான் கூர்மன்; கலக்கமும் விடுத்தான்.

நெடுநாள் உதயபுரியில் அவன் அஞ்ஞாத வாசஞ் செய்ய நேர்ந்தது. உதயபுரி வேந்தன் அக்கூர்மனை எங்ஙனம் காத்து வந்தான்? நகரின் நடுவே அவனை ஒரு மாளிகையில் அமர்த்தினால், வஞ்சனையில் மிகுந்த மொகலாயர்—அதிலும் தந்திரத்தின் வடிவான நூர் ஜஹான்— காசுவலை வீசிக் கூர்மனுக்கு அந்தரங்கமாக ஆபத்திழைக்கக்கூடும். ஆனது பற்றித் தனது அந்தப்புரத்தில் தனியே அவனுக்கு ஒருமாளிகை நிருமித்தான். மகாராணாவின் அந்தப்புரத்திலே, ராஜதூதும் பத்தாரும், சமயமும் உத்தரவும் பார்த்தே புகமுடியும். அத்தகைய இடத்தில் கூர்மனுக்குத் துரோகம் நிகழாது என்பதே மகாராணாவின் முடிபு.

அந்தப்புரத்தில் தனக்குத் தனி மாளிகை என்று கண்டதும் கூர்மன் கொண்ட களிப்பினுக்கும் வியப்பினுக்கும் ஓர் எல்லையில்லை. ஆங்கே காற்றின் வடிவில் கூட ஆபத்து நிகழாது என்பதே அவன் கருத்து. கூர்மனுக்கு அங்கே மாளிகை மட்டுமா? நாள்தோறும் ஐந்து வேளை அல்லாவை அவன் தொழவேண்டி அந்தப்புரத்தின் மத்தியிலே மசூதியொன்றும் எழுந்தது. டில்லி மாளிகையிலும் கிடைக்க முடியாத வசதிகள் பலவும் அங்கே கூர்மனுக்குக் கிட்டின. அனைத்தையும் கண்ட கூர்மன் பரவசமானான்.

நாளடைவில் கூர்மனுக்கும் மேவார் மன்னவனுக்கும் நட்பு முதிர்ந்தது. அதன் அறிகுறியாக இருவரும் தம் தலைப்பாகைகளை மாற்றிக் கொண்டனர். நண்பர் இருவர் அங்ஙனம் தலைப்பாகையை மாற்றிக்கொள்ளின் உயிர் உள்ளளவும் ஒருவரை யொருவர் மறவார்; ஒருவருக்கு நேரும் சுகதுக்கத்தை மற்றவர் தமதாகவே பாவிப்பார்; அவசியமானால் உயிரையும் கொடுத்து நட்பின் மேன்மையை நிலைநிறுத்துவார். அங்ஙனம் கூர்மனும் மகாராணாவும் மாற்றிக்கொண்ட தலைப்பாகையில் கூர்மனது தலைப்பாகை இன்றும் உதயபுரியின் மாளிகையிலே ஒரு பொக்கிஷம் போல் இருந்து வருகிறது. இணையிலா நேசமும் ஒரு பொக்கிஷந்தானே!

தலைப்பாகை மட்டுமா? கூர்மனுக்காக அந்தப்புரத்தின் நடுவே எழுந்த மசூதியும் இப்போது இருந்து வருகிறது! தொழுகைத் தலம் என்ற தன்மையில், அம்மசூதியை ரஜபுத்திரர் பக்தி விசுவாசத்துடன் போற்றி வருகின்றனர்! மசூதியில் இன்றும் அணையா விளக்கொன்று எரிந்துகொண்டிருக்கின்றது! அதற்குரிய காவலரும் பிறரும் இருந்துவருகின்றனர்! இஃது, அன்பின் பெருக்கா? நட்பின் முதிர்ச்சியா? மதத்தின் சமரஸமா? ஹிந்து வேதாந்தத்தின் சிகரமா?

உதயபுரி அரண்மனையில் யாதொரு குறையுமின்றித் தங்கியிருந்த கூர்மன் ஓரொரு சமயம் சிந்தாகுலம் கொள்வதுண்டு. "தந்தையை நூர்ஜஹான் அல்லவோ ஆட்டி வைக்கிறாள். அவளை மடக்க வேண்டும். அவளுக்குப் பாடம் புகட்டவேண்டும்" என்பதே அவன் கொண்ட சிந்தாகுலத்தின் காரணம்.! அதனை மகாராணாவின் இளைய மைந்தன் பீமசிம்மன் கண்டுகொண்டான்.

அவ்வளவில் பீமசிம்மனும் முகபத்கானும் பயணமாயினர்; படை திரட்டினர்; ஜஹாங்கிரையும், நூர்ஜஹானையும் சிறை செய்வதாகச் சபதம் செய்தனர்.

அச்சமயம் காஷ்மீர தேசமே மொகலாய மன்னவரின் கோடை வாசஸ்தலம். காஷ்மீருக்குப் புறப்பட்டான் ஜஹாங்கிர். அவனுக்குத் துணையாக ஒரு சேனையும் உடன் சென்றது. காலம் இடம் பார்த்து அச் சேனையை மறித்தனர் மாவீரர் இருவரும். மொகலாயச் சேனை முறிபட்டது. விதியின்றி ஜஹாங்கீரும் சிறைப் பட்டான் அவ்வீர புருஷரிடம்! ஜஹாங்கிரைத் தொடர்ந்து, பின்னே வந்து கொண்டிருந்த நூர்ஜஹான் அதனை உணர்ந்தாள்; அடி வயிற்றில் இடி விழுந்தது போல் அலமந்தாள். உயிருடன் கணவனைக் காண முடியுமோ என்று கலங்கினாள். ஒன்று கணவனை மீட்க வேண்டும், இல்லையேல் கணவருடன் தானும் சிறைப்பட வேண்டும் என்று துணிந்தாள்.

அவளுடனும் ஒரு சேனை வந்தது. அதுகொண்டு அவ்விரு வீர புருஷரையும் அவள் எதிர்த்தாள். ஆயினும் சாயவில்லை. அதன்மேல் தந்திரமே சாலச் சிறந்ததெனக் கொண்டாள். ஒருசில மெய்க்காவலருடன் அவ் வீர புருஷரை அணுகினாள். சக்கரவர்த்தினி தனியே வருவதைக் கண்டதும் ரஜபுத்திர வீரர் வழி விலகினர். தம் தலைவரிடம் அம் மாதரசியை இட்டுச் சென்றனர். சென்றதும், “ கணவனைப் பிரிந்து என்னால் கண நேரமும் வாழ இயலாது. அவரையோ மீட்க முடியவில்லை. ஆதலின் அவருடன் சிறையிருக்கவே துணிந்து வந்துள்ளேன். இந்த வரம் தருதல் வேண்டும்'' என்று குறையிரந்தனள்.

படை முகத்திலும் பெருந்தன்மை காட்டுவதே ரஜ புத்திரரின் இயற்கை விசேஷம். தவிர பகைவன் பணிவு காட்டிவிடின், உடனே வைரம் விடுத்து இரக்கங் காட்டுதலும் பிறவிக் குணமாம். ஆதலின், "அரசியே! உன்னையும் உன் கணவரையும் சிறை செய்தே திரும்புவதெனச் சபதம் செய்து வந்தோம். உன் கணவனைச் சிறையிடவே எண்ணி நின்றோம். நீயே வலுவில் வந்து வேண்டிக் கொண்டதனால், எங்கள் வைரம் மறைந்து விட்டது. அன்றியும் கூர்மனது வீரத்துணைவர் எதனையும் சாதிக்க வல்லவர் என்பதை நீ இப்போது உணர்ந்துவிட்டாய். இந்த வெற்றி ஒன்றே எங்களுக்குப் போதும்! கூர்மனும் அது கேட்டுக் களிப்பான்," என்று கூறி உதயபுரிக்குத் திரும்பினர்.

பின்னர் நாள் சில சென்றதும் ஜஹாங்கிர் காலமானன். உடனே வேறொருவனைச் சிம்மாசனத்தில் தூக்கி வைக்க நூர்ஜஹான் விரும்பினள். கூர்மன் தனது மதிவலியும் துணைவலியுங் கொண்டு, ஷாஜஹான் எனும் நாமஞ்சூடி, டில்லியிலே அரியணையில் அமருவது வேறு கதை!

இள வீரன்

வைரிகளை வாட்டி வதைப்பர்; பழிக்குப்பழி வாங்குவர்; மானம் படவரின், பிராணனை விடுவர்; படை முகத்திலும் பெருந்தன்மை காட்டுவர்; பணிந்து விட்டால் பரம வைரியிடமும் விசுவாசமே பூண்பர்; தர்ம யுத்தமே புரிவர் ரஜபுத்திரர்! அவர்கள், வீரத்தின் விளை நிலம். அன்னாரது குணாதிசயங்களோ பல. அவை விளங்கும் சரித்திர சம்பவமொன்று இது:—

மத்திய இந்தியாவிலே ரஜபுதனம் எனும் பெரு நாடொன்றுண்டு. அதிலுள்ள குறு நாடுகளோ பலப் பல. அவற்றுள் ஒன்று பூமதம். அப்பூமத வேந்தரில் ஒருவன் அலாயுதன். முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னே அவன் திகழ்ந்தவன். ஒரு நாள் அவன் கொலுவிருந்தான். கவிபாடிக் காலந்தள்ளும் பாணன் நாகாதித்தன் என்பான் அவ் வேந்தன் சபை சேர்ந்தான். அருங்கவி யொன்று பாடினன். அது கேட்ட அலாயுதன் பூரிப்புக் கொண்டான்.

"கவிஞ! யாது வேண்டும்?" என்றான் அக்காவலன். அதற்கு, "எம் அரசே! காசும் பணமும் வேண்டாம். தங்கள் தலைப்பாகையே வேண்டும்" என்றான் அப் பாணன். ரஜபுத்திரரிலே தோழமைக்கு அடையாளமாக, தலைப்பாகையை மாற்றிக்கொள்வதுண்டு. அலாயுதனது நட்பை நாடியே முண்டாசை வேண்டினன் நாகாதித்தன். பூமத பூபனும் மனமுவந்து தன் தலைப் பாகையை

ஈந்தனன். உடனே பாணன் அப்பாகையைத் தன் சிரமீது கொண்டான்; மீண்டு மொரு கவி பாடினன்; அம் மன்னவனை மனமார வாழ்த்திச் சென்றான்.

சின்னாள் தீர்ந்தது. மாருவரம் சென்றான் அப் பாணன். அதன் மன்னவன் மாலதேவனைக் கண்டான். கண்டதும் தலைப்பாகையை எடுத்து, இடக்கரத்தில் வைத்துக்கொண்டான். பின்னர் அவனை வணங்கிக் கவி பாடினன். கவிநயங்கண்டு அக்கோமகனுக்குக் களிப்பு மிகுந்தது. கனகத்தை யள்ளிக் கொடுக்கப் போகும் சமயம், தலைப்பாகையைக் கழற்றி வைத்துக் கொண்டு கும்பிட்டதேன்? என்று வினவினன் மாருவார மகிபன்.

பாணன் பேசுவான்: "பார்த்திப! இஃது அலாயு தனது தலைப்பாகை. அவன் அன்பு கூர்ந்து அளித் தது. அவன் மேவார் வேந்தனைத் தவிர, வேறெவர்க்கும் முடிவணங்கான். இந்நிலையில் தலைப்பாகையைத் தரித்த வண்ணம் நான் உன்னை வணங்கின் அலாயுதனை வணங் கியது போலாகும். என் தோழனுக்கு இழிவு தேடக் கனவிலும் நான் கருதேன். காரணம் ஈதே, வேறில்லை. கருத்தில் தவறு கொள்ள வேண்டாம்."

மாலதேவன் அது கேட்டான், மனம் புழுங்கினன், மிக்க கோபமும் கொண்டான். "நாக! அந்த அலாயுதன் எம்மாத்திரம்? மலைக் குகையில் பதுங்கி வாழும் ஒரு வனுக்கு அவ்வளவு மகிமையோ?" என்று கூறினன்; அப்பாகையைப பற்றி இழுத்தான்; இடது காலால் எற்றித் தள்ளினன்; இஃதே உனக்குப் பரிசு என்றான். பாணன் அது பார்த்தான், பதைத்தான்; ஐயகோ இப்பாகையால் உன் கொழுப்பு மடியப் போகிறது என்று கூறிப் போயினன்.

நாகதத்தனுக்குப் பகை வந்தது முதல், அலாயுதனுக்கு அதே நினைப்பு. யாது விளையுமோ என்ற திகைப்பு. வருவது வருக என்ற முனைப்பு. அந்நிலையில் பூமதம் புகுந்தான் பாணன். புலம்பினன். தோழனுக்குத் தீங்கு தேடினேனே என்று உளைந்தான். விதியே உன் செயல் நன்று நன்று என்று நவின்றான்.

"பேதாய்! அன்றே சொன்னேன் கந்தைத் துணியில் கருத்து வைக்காதே என்று. பொன்னே பூஷணமோ பூமியோ கேள் என்றேன். என் சொல்லை மதித்தாயில்லை. கந்தைத் துணிக்கு வந்தது இழிவு. அலாயுதனுக்கு நேர்ந்த அவமானமே அது. இனி என் செய்வது? போரில் குதிக்க வேண்டியதுதான்" என்றான் அலாயுதன்.

உடனே பூமத பூமன் தன் துணைவர் பலரையும் தருவித்தான். நடந்தது யாவும் நவின்றான். அவ்வளவுதான். தோழரில் சிலர் தோள் தட்டினர். சிலர் மீசையை முறுக்கினர். சிலர் உடை வாளில் கை வைத்தனர். சிலர் சிங்கநாதம் செய்தனர். சிலர் போர்க் கோலம் பூணப் புகுந்தனர். "மாருவார மாலதேவனைப் பழி வாங்க வேண்டும். எங்கள் தலைவனுக்கு ஊறிழைத்து ஒருவன் உயிர் வாழ்வதா?" என்று எல்லாரும் வீறு பேசினர்.

மாருவாரனே மகாவல்லவன். பெருஞ் சேனை வாய்ந்தவன். அலாயுதனைப்போல் பல சிற்றரசரைப் படைத்தவன். ஐம்பதாயிரம் பரிவீரருக்கு அதிபன். அத்தகையவனுடன் போர் புரியலாம் வீறு காட்டலாம். ஆனால் வீர சுவர்க்கமே புக நேரும். இவ்வளவையும் அலாயுதன் அறிவான். அவன் தோழரும் அறிவர். ஆயினும்,

யானையன்றே பிடரியைப் பிடித்துத் தள்ளுகிறது. அலாயுதனது துணைவர் ஐந்நூற்றுவரும் உடனே போர்க் கோலம் பூண்டனர்.

அவர்களுக்கும் அவர்களின் மனைவிமார்களுக்கும் புமது அரண்மனையிலே பெருவிருந்து நடந்தது. விருந்தின் முடிவில் வினையை யுணர்ந்தனர், அந்த ஐந்நூற்றுவரின் தேவியர்! உடனே எல்லாரும் நல்லாடை யுடுத்தி நறுமலர் சூடி, கணவனை வாழ்த்தினர். “எங்களைப் பற்றி இம்மியும் கவலை வேண்டாம்” என்றனர். “அக்கினிக் கடவுளின் துணைகொண்டு அமரருலகு புகுவோம்; அங்கே உங்களை வரவேற்கக் காத்து நிற்போம்” என்றனர். சுருங்கச் சொல்லின் அத்தனை மாதரும் அக்கினிக் குண்டத்தில் இறங்கி விட்டனர்.

கருத்துக் கிசைந்த மனைவியர், காதல் வடிவான தேவியர், கற்பின் அணிகலமான காரிகையர் தீக்குளித்த பின்னர், அந்த ஐந்நூறு வீரருக்கும் வாழ்வில் வெறுப்புத் தட்டியது, போரில் விருப்பு ஊன்றியது, வீரத்தில் சிந்தை சென்றது, விருப்பில் மனம் குளிர்ந்தது. அனைவரும் ஒருமுகமாக எழுந்தனர்; தத்தம் பரிமீது அமர்ந்தனர். அலாயுதனும் தன் குதிரை மீது ஏறிக்கொண்டான். பரிகள் பாங்காகப் புறப்பட்டன. வீரரும் விருப்புடன் ஏகினர்.

அந்நாளிலே மாருவாரத்தின் தலைநகரம் மாங்கைதயம் பதி. அதனைக் காத தூரத்தில் நெருங்கினன் அலாயுதன். மாங்கைதயப்பதியின் கோட்டையினுள்ளே புகுந்து, மாலதேவனது மாளிகை முற்றத்திலேயே போர் புரிய வேண்டுமென்பது அவனது ஆவல். யுத்த சன்னத்தராகச் சென்றால், அப்பதியின் கோட்டையினுள் புக

இயலாது. ஆதலின் அனைவரும் தம் பரியை விட்டிறங்கினர்; போர்க்கோலம் களைந்தனர்; வாளையும் குத்தீட்டியையும் மறைத்துக் கொண்டனர்; குதிரையைக் கையில் பற்றிக் கொண்டு கோட்டை வாயில் குறுகினர்.

வாயில் காவலனே வழி மறித்தான். நீவிர் யாவர் என்று வினவினான். மன்னவன் வேண்டுகோளுக் கிணங்கி மகதத்திலிருந்து மகத்தான குதிரைகள் கொணர்ந்துள்ளோம் என்றனர் அத்தனை பெயரும். அப்போது அந்தி படும் நேரம். அலாயுதன் உட்பட ஐந்நூறு வீரரும் மாந்தை நகருக்குள் புகுந்தனர். குதிரை விற்க வந்தவர் போல் நடித்தனர். சோள ரொட்டியைப் புசித்துப் பசியாறினர். அருணோதயத்தை அனைவரும் எதிர் பார்த்திருந்தனர். இரவில் தூக்க மேது? மறுதினம் நடக்கவிருக்கும் போரிலேயே கவனம். மேலுலகில் தேவியரைக் காண வேண்டுமென்னும் அவா. பழி வாங்கிப் பகை முடிக்கும் பரம நினைப்பு. விநாடிகளை விரல் விட்டு எண்ணிக் கொண்டிருந்தனர் அவ்வீரர் குழாத்தினர்.

இரவு எனும் நங்கை அன்று மெல்லெனவே நடந்தாள். முடிவில் ஒருவாறு ஜாமக் கோழி கூவியது. கிழக்கு வெளுத்தது. அருணோதயம் ஆயிற்று. கதிரவனும் தன் பரிமீதமர்ந்து கிரணங்களை வீசிக்கொண்டு பகையின் விளைவைப் பார்க்க வருவான்போல் புறப்பட்டான். உடனே பூமதவீரர் தம் குல தெய்வத்தை வணங்கினர்; தலைவனையும் கண்டு தொழுதனர்; கணப்பொழுதில் போர்க் கோலம் பூண்டனர்; மாலதேவனது மாளிகையின் வாயிலிலே குழுமிப் போர் முரசு கொட்டினர்.

அவ்வேளை மாலதேவன் கண்ணுறக்கம் நீங்கும் சமயம். போர் முரசொலி அவன் செவியில் பட்டது. திடுக்கென அவன் விழித் தெழுந்தான்; மாளிகையின் வாயிலிலேயே போர் முரசா என்று மயங்கினான்; பகைவராயின் கோட்டையினுள்ளே எங்ஙனம் புகுந்தனரென்று ஏங்கினான்; மயங்கியும் ஏங்கியும் பயனென்ன என்று கருதினான். இதற்குள் ஒற்றன் வந்து, பூமதவேந்தன் அலாயுதன் என்பான், பழி முடிக்க வந்துள்ளான் என்று மெய்விதிர்க்க மொழிந்து நின்றான்.

மாலதேவன், "அந்தோ! அன்று மதிமோசம் போனோம்; பாணன் பாகையைப் பாதத்தால் நெட்டி எறிந்தோம். நம்மவருக்கு மனைவியும் பரியும் உடைவாளும் பாகையும் உயிருக்கு உயிரானவை. அவற்றில் ஒன்றை அவமதித்தோம். வாய்க்கொழுப்பு வாள் வீச்சில் முடியும் என்று அன்றே நாகாதித்தன் நவின்று சென்றான். இனி வருந்தி என்ன பயன்? வந்ததை வரவேற்றேயாக வேண்டும். எல்லாம் வினையின் விளைவு. மதியின் பிசகு. மமதையின் கழிவு. ஏகலிங்க மூர்த்தியே துணை," என்று கூறி எழுந்தான் எடுப்பாக.

அவ்வேளை மாந்தையம் பதிக்குள்ளே யிருந்த மாருவார வீரர் பதினாயிரவர். அலாயுதனிடமோ ஐந்நூற்றுவரே. இந்நிலையை உணர்ந்தான் மாலதேவன். பதினாயிரவரைக்கொண்டு அந்த ஐந்நூற்றுவரைத் தவிடுபொடி செய்துவிட முடியும். ஆயினும் அத்தகைய அதர்மயுத்தம் புரிய மாருவாரன் மனம் வைக்கவில்லை. தர்மயுத்தம் புரிந்து வாகை சூடுவதே மேலெனக் கொண்டான் அம்மன்னவன். ஒரு சில வீரருடன் அலாயுதன்

முன்னே சென்ருன். சென்றதும் தூதொன்று விடுத்தான்.

வந்த தூதனை அலாயுதன் எதிர்கொண்டு, வந்த விவரம் யாதென வினவினுன். தூதுவன் பகர்ந்தான்: "பூமத பூப! விதிவழியே மதி சென்றது. வேறில்லை. பூசலோ நேர்ந்து விட்டது. போனது பற்றிப்பேசிப் பயன் யாது? பதினுயிரவரைக்கொண்டு உன்னை எதிர்க்க எங்கள் இறைவன் விரும்பவில்லை. உன்னிடம் ஐந்நூற்றுவர் உளர். எங்கள் பக்கமிருந்து ஐந்நூறு வீரர் குதிப்பர். இருபக்கத்திலிருந்தும், ஒவ்வொருவராக இறங்கித் தனித்தனி போர் புரிதலே சாலச் சிறந்ததென எங்கள் இறைவன் எண்ணியுள்ளான். உன் கருத்து யாதோ?"

அது கேட்ட அலாயுதன், "தூதுவ! பகைவனது கருத்தினை மதித்து, அமர்புரிய ஆட்சேபமில்லை. ஆனல் வருத்தம் ஒன்றுளது. நாங்கள் ஐந்நூற்றுவரும் வீர சுவர்க்கம் புக முடிவு செய்தே, மனைவி மக்களைத் தீக்கு இறையாக்கி வந்துள்ளோம். இரு பக்கத்திலும் ஓரொருவர் இறங்கித் தனிப்போர் புரிவதானல், ஐந்நூற்றுவரைத் தானே நாங்கள் பலி கொள்ள முடியும். இதுவே என் வருத்தம், வேறில்லை. உங்கள் இறைவன் எண்ணியபடியே காரியம் நடக்கட்டும்" என்று நவின்ருன்.

மாலதேவனது மாளிகையின் முற்றத்திலே அத் தனிப்போர் நடப்பதென ஏற்பாடாயிற்று. அதனைக் காண மாளிகையின் மேல் புறத்தே மாருவாா மன்னவனது அந்தப்புர மாதர் ஆவலுடன் குழுமினர். முற்றத்தைச் சுற்றியுள்ள இடங்களிலே மாந்தையம்பதியின்

பெருமக்களும், ராஜகுடும்பத்தாரும் தத்தமக்குரிய ஆசனங்களில் அமர்ந்தனர். முற்றத்தின் ஒரு சார்பிலே அலாயுதனும் அவனது வீரரும் வீறுடன் நின்றனர். அவர்களுக்கு எதிர்த்த சார்பிலே, மாருவார வீரரில் ஐந்நூற்றுவர் ஆயுதபாணிகளாக ஆர்வமுடன் நின்றனர்.

அவ்வேளையில் வாலிபனொருவன், உத்தேசம் பதினான்கு வயதிருக்கும், கனவேகமாகப் பரிமீது வந்து அம்முற்றத்தின் நடுவே குதித்தான். பார்த்தால் அவன் முகத்திலே பால் வடிகிறது. வீரம் சொட்டுகிறது. வெகுளி பொங்குகிறது. அவன் ஏறிவந்த அசுவமோ உடலெங்கும் வியர்வை ஒழுக, வாயிலே நுரை தள்ளப் பெருமூச்செறிகிறது. பேரிடிபோல் கனைக்கிறது. வீரரின் முனைப்பைக்கண்டு பாராட்டுவதுபோல் பார்க்கிறது. வாலிப வீரனது வடிவையும் தோற்றத்தையும், பரியின் பதைப்பையும் கனைப்பையும் கண்டு பலரும் பிரமித்தனர்.

அவ்வளவில் அம்மைந்தன் தன் தந்தையை நோக்கி வணங்கி, "எந்தாய்! நல்லவேளை. போர் இன்னும் தொடங்கவில்லை. வந்து விட்டேன் சமயத்தில். முதன் முதல் போரில் குதித்துப் பகைவனை வெட்டித் தளளும பாக்கியம் எனக்கே கிட்ட வேண்டும். இதுவே நான் விரும்பும் வரம். தட்டாது தந்தருள வேண்டும். உடலெடுத்த பயனை அடியேன் பெறுதல் வேண்டுமன்றோ? தங்கள் புதல்வன் என்பதற்கு வேறு சொத்து வேண்டியதில்லை. முதல் பலியும் காவும் எனக்கே" என்றான்.

அலாயுதன் அஃதறிந்தான்; அளவு கடந்த உவகை கொண்டான். "மைந்த! உன்னை நான் சுவீகாரம் கொண்டதன் கருத்தை அறியாயோ? முதலாவதாக

என் குலம் விளங்க வேண்டும். இரண்டாவதாக எனக்குப் பின் பகை முடிக்க வேண்டும். ஆனதுபற்றியே உன்னைப் பூமதத்தில் பூட்டி வைத்து இங்கு வந்தேன், என் எண்ணமெல்லாம் இனி என்னுவது? நம் குலம் பூண்டற்றுப் போவதோ?" என்று மகனைக் கட்டியணைத்து மனங்கரைந்தான்.

வீர விஜயன் அது கேட்டு உரைப்பான்: "தந்தாய்! தங்களுக்கோ ஆபத்து. நம் குலத்துக்கோ மாசு. இரண்டும் நேர்ந்துள்ள சமயம் நான் பூமதத்திலா பூட்டுண்டு கிடப்பது? பேடிபோல் வீட்டில் அடைத்துக் கிடக்கவோ அன்று என்னை சுவீகாரம் கொண்டீர்கள்? தந்தைக்கு ஏற்ற தனயன், தந்தையின் மானங்காக்கும் தனயன் என்று சினத்தெழுந்து சீறிப்புகுந்து சண்டையில் குதிப்பதன்றோ சிறப்பு. அருஞ்சமரிலே, நாம் அனைவரும் மடியினும் என்ன? நமது தோள் வலியும், வாள் வலியும் வீர விளைவும், தீரச் செயலும் என்றும் நிலை நிற்கு மன்றோ? நம் குலம் என்றும் நின்று நிலவ அவை போதாவோ? நான் உயிர் தாங்கி நின்றோ குலத்தை விளக்க வேண்டும்? உயர் வீரம் விளைத்து, மேலுலகம் புகுந்தன்றோ குலத்தை விளங்கவைக்க வேண்டும்! குலம் முழுதும் மடிய ஓர் ஆண்மகன் உயிர் தாங்கி நிற்பது ஒண்ணாது, ஒண்ணாது. நம் குல தெய்வத்தைத் தரிசித்தேன், தொழுதேன், விடைகொண்டேன், இங்கு வந்தேன், வீரம் விளைப்பேன், விழுமிய மைந்தனாகத் துலங்குவேன், வீண் சிந்தனை வேண்டாம், உடைவாளை உருவும் வண்ணம் உத்தாரம் தாருங்கள்!"

அவ்வுரைகேட்டு அலாயுதன் கொண்ட மனநிலை ஒருபுற மிருக்கட்டும். மாருவார வேந்தன் அவ்வாலிப

னது வார்த்தை கேட்டு, வியப்பும் மகிழ்ச்சியுங் கொண்டான். மற்றையோரும் மனம் பூரித்து மைந்தனை வாழ்த்தினர். அலாயுதன் பக்கத்திலிருந்து முன்னதாக வீர விஜயன் இறங்கினான் சமரபூமியிலே. மாருவாரன் பக்கமிருந்தோ வீமனை போன்ற வலியுடையான் ஒருவன் குதித்தான் சமருக்கு.

யானையைப் பூனை எதிர்ப்பதுபோல் அல்லது பெருமலையைக் குன்று எதிர்ப்பதுபோல், மாருவாரனை அப் பையன் எதிர்க்கலானான். இருவரில் யார் முன்னே வாளை உருவுவது ?—என இருவரும் சிறிதுநேரம் உபசாரமாக வினவிக்கொண்டனர். முடிவில் அவ்விளவல் தனது பட்டாக் கத்தியை உருவினான். உடனே மாருவார வீரனும் தனது நீண்ட உடைவாளை உருவினான், உறுமிக்கொண்டு! இருவரின் வாளும் சின்னேரம் அந்தரத்திலே பளபளவென மின்னின.

ஒருவர் மீது ஒருவர் வாளை வீசாமலே சிறிது நேரம் இருவரும் சும்மா நின்றனர். பின்னர் வீர விஜயன் தனது வாளை ஓங்கி வீசினான். மாருவாரனும் வீசலானான். விஜயனது வாள் அவன் பகைவனது தோளிலே காயமுண்டுபண்ணியது. மாருவாரன் வாளோ விஜயன் தலையைக் குறிக்கொண்டு வந்தும் என்ன? விஜயன் சற்றே வளைந்து கொடுத்தான். அதனால் அவ் வாளின் இலக்குத் தவறியது. விஜயனும் உயிர் தப்பினான்.

பார்த்தான் வீரன். படு மோசம் விளையும் என்று கருதினான். மாருவாரன் மீது ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தான். மாருவாரனது சிரம் நிலத்தில் உருண்டு விட்டது. உடனே மாருவார வேந்தன் பக்கத்திருந்து, மற்றொரு வீரன் மண்டி எழுந்தான்; ரணகளத்தில் குதித்

முன்னே சென்றான். சென்றதும் தூதொன்று விடுத்தான்.

வந்த தூதனை அலாயுதன் எதிர்கொண்டு, வந்த விவரம் யாதென வினவினான். தூதுவன் பகர்ந்தான்: "பூமத பூப! விதிவழியே மதி சென்றது. வேறில்லை. பூசலோ நேர்ந்து விட்டது. போனது பற்றிப்பேசிப் பயன் யாது? பதினாயிரவரைக்கொண்டு உன்னை எதிர்க்க எங்கள் இறைவன் விரும்பவில்லை. உன்னிடம் ஐந்நூற்றுவர் உளர். எங்கள் பக்கமிருந்து ஐந்நூறு வீரர் குதிப்பர். இருபக்கத்திலிருந்தும், ஒவ்வொருவராக இறங்கித் தனித்தனி போர் புரிதலே சாலச் சிறந்ததென எங்கள் இறைவன் எண்ணியுள்ளான். உன் கருத்து யாதோ?"

அது கேட்ட அலாயுதன், "தூதுவ! பகைவனது கருத்தினை மதித்து, அமர்புரிய ஆட்சேபமில்லை. ஆனால் வருத்தம் ஒன்றுளது. நாங்கள் ஐந்நூற்றுவரும் வீர சுவர்க்கம் புக முடிவு செய்தே, மனைவி மக்களைத் தீக்கு இரையாக்கி வந்துள்ளோம். இரு பக்கத்திலும் ஓரொருவர் இறங்கித் தனிப்போர் புரிவதானால், ஐந்நூற்றுவரைத் தானே நாங்கள் பலி கொள்ள முடியும். இதுவே என் வருத்தம், வேறில்லை. உங்கள் இறைவன் எண்ணியபடியே காரியம் நடக்கட்டும்" என்று நவின்றான்.

மாலதேவனது மாளிகையின் முற்றத்திலே அத் தனிப்போர் நடப்பதென ஏற்பாடாயிற்று. அதனைக் காண மாளிகையின் மேல் புறத்தே மாருவார மன்னவனது அந்தப்புர மாதர் ஆவலுடன் குழுமினர். முற்றத்தைச் சுற்றியுள்ள இடங்களிலே மாந்தையம்பதியின்

பெருமக்களும், ராஜகுடும்பத்தாரும் தத்தமக்குரிய ஆசனங்களில் அமர்ந்தனர். முற்றத்தின் ஒரு சார்பிலே அலாயுதனும் அவனது வீரரும் வீறுடன் நின்றனர். அவர்களுக்கு எதிர்த்த சார்பிலே, மாருவார வீரரில் ஐந்நூற்றுவர் ஆயுதபாணிகளாக ஆர்வமுடன் நின்றனர்.

அவ்வேளையில் வாலிபனொருவன், உத்தேசம் பதினன்கு வயதிருக்கும், கனவேகமாகப் பரிமீது வந்து அம்முற்றத்தின் நடுவே குதித்தான். பார்த்தால் அவன் முகத்திலே பால் வடிகிறது. வீரம் சொட்டுகிறது. வெகுளி பொங்குகிறது. அவன் ஏறிவந்த அசுவமோ உடலெங்கும் வியர்வை ஒழுக, வாயிலே நுரை தள்ளப் பெருமூச்செறிகிறது. பேரிடிபோல் கனைக்கிறது. வீரரின் முனைப்பைக்கண்டு பாராட்டுவதுபோல் பார்க்கிறது. வாலிப வீரனது வடிவையும் தோற்றத்தையும், பரியின் பதைப்பையும் கனைப்பையும் கண்டு பலரும் பிரமித்தனர்.

அவ்வளவில் அம்மைந்தன் தன் தந்தையை நோக்கி வணங்கி, "எந்தாய்! நல்லவேளை. போர் இன்னும் தொடங்கவில்லை. வந்துவிட்டேன் சமயத்தில். முதன் முதல் போரில் குதித்துப் பகைவனை வெட்டித் தளளும பாக்கியம் எனக்கே கிட்ட வேண்டும். இதுவே நான் விரும்பும் வரம். தட்டாது தந்தருள வேண்டும். உடலெடுத்த பயனை அடியேன் பெறுதல் வேண்டுமன்றோ? தங்கள் புதல்வன் என்பதற்கு வேறு சொத்து வேண்டியதில்லை. முதல் பலியும் காவும் எனக்கே" என்றான்.

அலாயுதன் அஃதறிந்தான்; அளவு கடந்த உவகை கொண்டான். "மைந்த! உன்னை நான் சுவீகாரம் கொண்டதன் கருத்தை அறியாயோ? முதலாவதாக

என் குலம் விளங்க வேண்டும். இரண்டாவதாக எனக்குப் பின் பகை முடிக்க வேண்டும். ஆனதுபற்றியே உன்னைப் பூமதத்தில் பூட்டி வைத்து இங்கு வந்தேன், என் எண்ணமெல்லாம் இனி என்னாவது? நம் குலம் பூண்டற்றுப் போவதோ?" என்று மகனைக் கட்டியணைத்து மனங்கரைந்தான்.

வீர விஜயன் அது கேட்டு உரைப்பான்: "தந்தாய்! தங்களுக்கோ ஆபத்து. நம் குலத்துக்கோ மாசு. இரண்டும் நேர்ந்துள்ள சமயம் நான் பூமதத்திலா பூட்டுண்டு கிடப்பது? பேடிபோல் வீட்டில் அடைத்துக் கிடக்கவோ அன்று என்னை சுவீகாரம் கொண்டீர்கள்? தந்தைக்கு ஏற்ற தனயன், தந்தையின் மானங்காக்கும் தனயன் என்று சினத்தெழுந்து சீறிப்புகுந்து சண்டையில் குதிப்பதன்றோ சிறப்பு. அருஞ்சமரிலே, நாம் அனைவரும் மடியிலும் என்ன? நமது தோள் வலியும், வாள் வலியும் வீர விளைவும், தீரச் செயலும் என்றும் நிலை நிற்கு மன்றோ? நம் குலம் என்றும் நின்று நிலவ அவை போதாவோ? நான் உயிர் தாங்கி நின்று குலத்தை விளக்க வேண்டும்? உயர் வீரம் விளைத்து, மேலுலகம் புகுந்தன்றோ குலத்தை விளங்கவைக்க வேண்டும்! குலம் முழுதும் மடிய ஓர் ஆண்மகன் உயிர் தாங்கி நிற்பது ஒண்ணாது, ஒண்ணாது. நம் குல தெய்வத்தைத் தரிசித்தேன், தொழுதேன், விடைகொண்டேன், இங்கு வந்தேன், வீரம் விளைப்பேன், விழுமிய மைந்தனாகத் துலங்குவேன், வீண் சிந்தனை வேண்டாம், உடைவாளை உருவும் வண்ணம் உத்தாரம் தாருங்கள்!"

அவ்வுரைகேட்டு அலாயுதன் கொண்ட மனநிலை ஒருபுற மிருக்கட்டும். மாருவார வேந்தன் அவ்வாலிப

னது வார்த்தை கேட்டு, வியப்பும் மகிழ்ச்சியுங் கொண்டான். மற்றையோரும் மனம் பூரித்து மைந்தனை வாழ்த்தினர். அலாயுதன் பக்கத்திலிருந்து முன்னதாக வீர விஜயன் இறங்கினன் சமரபூமியிலே. மாருவாரன் பக்கமிருந்தோ வீமனை போன்ற வலியுடையான் ஒருவன் குதித்தான் சமருக்கு.

யானையைப் பூனை எதிர்ப்பதுபோல் அல்லது பெருமலையைக் குன்று எதிர்ப்பதுபோல், மாருவாரனை அப் பையன் எதிர்க்கலானன். இருவரில் யார் முன்னே வாளை உருவுவது ?—என இருவரும் சிறிதுநேரம் உபசாரமாக வினவிக்கொண்டனர். முடிவில் அவ்விளவல் தனது பட்டாக் கத்தியை உருவினன். உடனே மாருவார வீரனும் தனது நீண்ட உடைவாளை உருவினன், உறுமிக்கொண்டு! இருவரின் வாளும் சின்னேரம் அந்தரத்திலே பளபளவென மின்னின.

ஒருவர் மீது ஒருவர் வாளை வீசாமலே சிறிது நேரம் இருவரும் சும்மா நின்றனர். பின்னர் வீர விஜயன் தனது வாளை ஓங்கி வீசினன். மாருவாரனும் வீசலானன். விஜயனது வாள் அவன் பகைவனது தோளிலே காயமுண்டுபண்ணியது. மாருவாரன் வாளோ விஜயன் தலையைக் குறிக்கொண்டு வந்தும் என்ன? விஜயன் சற்றே வளைந்து கொடுத்தான். அதனல் அவ் வாளின் இலக்குத் தவறியது. விஜயனும் உயிர் தப்பினன்.

பார்த்தான் வீரன். படுமோசம் விளையும் என்று கருதினன். மாருவாரன் மீது ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தான். மாருவாரனது சிரம் நிலத்தில் உருண்டு விட்டது. உடனே மாருவார வேந்தன் பக்கத்திருந்து, மற்றொரு வீரன் மண்டி எழுந்தான்; ரணகளத்தில் குதித்

தான், மைந்தன் மீது பாய்ந்தான். விஜயனும் விறுடன் தாக்கினன். இமைப்பொழுதில் இரண்டாவது ஆளும் உயிரிழந்தான் விஜயன் வாளால்.

அப்பால் மற்றொரு வீரன் மூர்க்கமுடன் பாய்ந்தான் மைந்தன் மீது. வாள் வரிசையெல்லாம் காட்டினன். அவன் வாள் முறிந்து வீழ்ந்தது. வேறொரு வாளை எடுத்து வீசுமுன்னம் அவன் உடல் வேறு, சிரம் வேறு ஆயது. அது கண்டு வீரர் ஆர்ப்பரித்தனர். மைந்தனை வாழ்த்தினர். அங்ஙனம் ஒருவர் பின் ஒருவராக இருபத்தைந்து பேர் மாருவாரன் பக்க மிருந்து விஜயனைத் தாக்கினர். விஜயன் கையால் வெட்டுண்டும் வீழ்ந்தனர்.

இருபத்தைந்து பேரை வெட்டி வீழ்த்தவே, மைந்தன் கொண்ட பெயர்—வீர விஜயன் என்பது—காரணப் பெயராகும்—சிறப்புப் பெயருமாகும் என்று போற்றுதார் கிடையாது. மாளிகையின் மேல் தளத்திலிருந்து இவ்வளவையும் பார்த்து நின்ற மாதரில் ஒருத்தி—மங்கைப் பருவத்தாள்—மகிமையான வடிவத்தாள்—வீரவிஜயன் மீது காதல் கொண்டாள்; அவனுக்கே மாலையிடுவதென மனத்தூடே தீர்மானித்தாள்.

அந்நிலையில் வேறொரு வீரன், மாருவாரத்தான், அப் பையன் மீது பாய்ந்தான். அவனது உடலெங்கும் வெட்டுக் காயம் உண்டுபண்ணினன். இளவன் இறந்துபடின் அவள் என் செய்வதெனச் சிலர் நினைக்கலாம். அவ் வீரனது உடலைத் தாங்கி உடன்கட்டையேறுவதெனவே அவள் உன்னினள். அவளருகே நின்ற அவள் பாட்டி, மாலதேவன் தாயார், தன் பேத்தியின்

மனக்கோளை முக ஜாடையால் உணர்ந்தாள்; விஜயனது வீரத்தையும் பார்த்து மகிழ்ந்தாள்.

உடனே அக் கிழவரசி தன் மைந்தனை அடைந்தாள்; போரை நிறுத்து, வெட்டுப் பழி போதும் என்றாள்; மதியினத்தால் விளைந்த பூசலை மேலும் வளர்க்க வேண்டாம் என்றாள்; வீர விஜயனை வெல்ல வல்லார் யாருளர்?—என்று வினவினாள்; வெல்ல வல்லார் இருப்பினும், இனிமேல் அவனை வெல்லுதல் வீரமன்று என்று பேசினாள்; அவ் வீர சிங்கத்துக்கு மகளைக் கொடுத்து மகிழ்தலே சாலச் சிறந்த தெனச் செப்பினாள். மாலதேவன் பார்த்தான்; தாயின் சொல்லைத் தலைமீது கொண்டான்; தன் மகளை வீர விஜயனுக்கு மணம் புரிவித்து மகிழ்ந்தான்!

ராஜ சுந்தரி

அழகிய ஆடை கட்டி அவனியிலே உலவுவதால், அத்துடன் ஐந்தாறு குழந்தைகளுக்கு அப்பாகத் துலங்குவதால், பலரும் தங்களை ஆண்பிள்ளை, சிங்கம் என்று எண்ணிக்கொள்வர். பிறனை இலேசாகப் பேச விரும்புகையில், "சேலை கட்டிய சிங்கமே! கைதனில் கருவளையலும் தரித்துக்கொள்" என்று இசைப்பதுண்டு. அத்தகைய ஆடவ சிகாமணிகளுக்கு, ஒரு சரித்திரக் கதை — கஜபதியின் குமரி கதை — சுவை பயக்கும்!

பத்தாம் நூற்றாண்டிலே தக்காணத்தில் பிரசித்தி பெற்ற பார்த்திபர் கஜபதிகள் எனப்படுவர். அவர்களது நாடு கலிங்கதேசம். அவர்களின் படையில் சிறந்தது யானைப் படை! பதினாயிரக் கணக்கில் அந் நரபதிகளிடம் யானைகள் இருந்தன. யானை யேற்றத்தில் அவ் வேந்தருக்கு இணை கிடையாது. ஆதலின், கஜபதிகள் என்று அவர்கள் காரணச் சிறப்புப் பெயர் பெற்றனர். கஜபதிகள் என்றால், அந்நாளில் வேற்று நிருபர் பலருக்கும் ஒரு கலக்கந்தான்.

சில நூற்றாண்டுகள் சென்றதும், கஜபதிகள் சாயத் தொடங்கினர். வாழ்வு சில காலம், தாழ்வு சில காலம் அல்லவா? விஜயநகர ஸாம்ராஜ்யம் வீறுகொண்டு கிளம்பிற்று. விஜயநகர வேந்தரில் சிறந்த கிருஷ்ண

தேவராயன் திக்விஜயம் பண்ணப் புறப்பட்டான். கடுகு சிறுத்தாலும் காரம் போகாது என்பர். வலியில் குன்றி நின்றபோதிலும், கஜபதிகள் பேராண்மையுடன் போர் புரிந்தனர்; ஆயினும் தாழ்வு கால மாதலின், முனை முகத்தில் முறிந்து விட்டனர். கிருஷ்ணதேவராயன் வாகை சூடினன்.

வெற்றி மாலே சூடியு மென்ன? கிருஷ்ணதேவனுக்கு நிம்மதி யில்லை. ஏன்? பரம்பரை வேந்தரும் வீரருமான கஜபதிகள் புறங்கொடுத்தாலும், வைரம் என்பதை அன்னர் கைவிடார். காலமும் இடமும் கருதி நின்று, பழி வாங்கவே முனைவர். ஆதலின், அன்னருடன் சமரஸங்கொள்ள வேண்டும். இதற்கு ஏற்ற உபாயம் விவாகத் தொடர்பே.

கஜபதிக்கு வனப்பு மிக்க புதல்வி ஒருத்தி இருந்தாள். அவள் மீது விஜயநகரத் தரசனுக்குப் பெருங் காதல் பிறந்தது. பிறக்கவே வேதம் வல்ல புரோகிதர் மூலம், மணம் பேசினன் கிருஷ்ணதேவன். கஜபதியோ, தன் வயிற்றில் வந்த அழகு மகளை மாற்றானுக்கு விட்டுக் கொடுக்க விரும்பவில்லை. என்ன செய்வான் கிருஷ்ண தேவன்?

மீண்டும் படை திரட்டினன். கலிங்கத்தையே நாசமாக்கிவிட. அத்தருணம் விஜயநகரின் மதி மந்திரி திம்மரசு என்பவன்; அப்பாஜி என்று செல்வப் பெயர் பூண்டவன். கஜபதியின்பால் 'வயிர மெனும் கடுநெருப்பை மிகமூட்டி வளர்த்தல் ஆகா'தென அப்பாஜி சிந்தித்தான்.

மதிநலங்கொண்டு மன்னவன் கிருஷ்ண தேவனை அப்பாஜி சாந்தஞ் செய்தான்; கலிங்க நாட்டை அக்

கஜபதியிடமே ஒப்படைத்தான்; பழஞ் சண்டையை மறந்து, புதிய நேசத்தை ஊட்டினன். இதற்கு ஓரளவு இணங்கினன் கஜபதியும். நாட்கள் சில சென்றன. சமயம் பார்த்து, அக்கலிங்க ராஜ குமாரியை விஜய நகரின் ராணியாக்கினன் திம்மரசு! விதியின்றி அவளும்—ராஜ சுந்தரி என்பாளும்—இணங்கினள். ஆயினும் அவளது உள்ளம் இணங்கவில்லை.

தந்தையைப் புறங்கண்ட ஒருவனுக்கா மாலையிடுவது? கத்திமுனை காட்டிக் காதல் கொள்வோனையா கணவனுகக் கொள்வது? மேலும் கிருஷ்ண தேவராயனே சுத்த க்ஷத்திரியனல்லன். இத்தகைய ஒருவனையா கொழுநனுகக் கொண்டு வாழ்வது? தேசத்தின் மானத்தைக் கெடுத்து, தந்தையைப் போரில் புறங்கண்டு, மகளைத் தாராவிடின் மண்டி எழுவேன் என்று கொக்கரித்த ஒருவனைச் சமயம் பார்த்துப் பழிவாங்க வேண்டும்—என்றே ராஜசுந்தரி கருதி நின்ருள்.

மந்திரி திம்மரசு அச்சுந்தரியின் சூழ்ச்சியை உணர்ந்தான்; அடிவயிற்றிலே நெருப்பைக் கட்டிக்கொண்டவன் போல் கலக்கம் கொண்டான்; அன்பன் கிருஷ்ண தேவனைச் சதா காத்து நின்றுன். மணம் நடந்துமென்ன? மங்கையுடன் மகிழ்ந்திருக்க விஜய நகரத்தரசனுக்குச் சமயம் வாய்க்கவில்லை! ஏன்? நாள் சரியாக இல்லை, நல்ல முகூர்த்தம் கிட்டவில்லை...என்று கூறிக் காலத்தைக் கடத்தி வந்தான் திம்மரசு.'

மந்திரி திம்மரசின் தேவி ஒரு நாள் வரிசைப் பொருள்களுடன் ராஜ சுந்தரியின் சமுகம் சேர்ந்தாள்; மஞ்சள் குங்குமம் அளித்து, நெற்றியில் திலகமிட்டு, அவ்வரசியை வாழ்த்தினள்; கிருஷ்ண தேவ மகா

ராயரின் ராணிக்கு ஏது குறை?—என்று பேசினுள்; முன்னைத் தவப்பயனுல் விஜய நகர வேந்துக்கு மாலை யிடும் பாக்கியம் கிட்டியதென்று கூறினுள். அவ்வளவு தான்! ராஜ சுந்தரியின் வதனம் வெளுத்தது, உள்ளமோ சுளித்தது, உடலமோ குலுங்கியது, கண் களோ சிவந்தன, நாசியோ விடைத்தது!

அக்கோபக் குறிகளைக் கண்டாள் அமைச்சன் தேவி; மனமுடைந்து மாளிகை திரும்பினுள்; மன்னவன் மரித்தல் திண்ணமென மதித்தாள்; மகிழ்நனிடம் அதனை உரைத்தாள்; எச்சரிக்கையும் செய்தாள். திம் மரசுக்கோ கவலை பெருகிவிட்டது. கிருஷ்ண தேவனது காதலின்பம் ஒருபுறம் கிடக்கட்டும், அக்கொற்றவன் பிழைத்தால் போதும் என்றே திம்மரசுக்குத் தோன்றி யது. தாய்ப்பறவை தன் சிறகினுல் குஞ்சை யணைத்துக் காப்பதேபோல், கொற்றவனைக் காத்துவந்தான் அம் மதியமைச்சன்.

ராஜசுந்தரியை என்று காண்போம்? என்று அவளது இன்மொழிகளைக் காதுகுளிரக் கேட்போம்? என்று அவள் பக்கம் வீற்றிருந்து பரமானந்தம் அடைவோம்?...என்பதாகத் துடித்து நின்முன் கிருஷ்ண தேவன்! அச்சுந்தரியைக் கூடாவிடின் கொற்றவன் உயிர் தரியான் என்பதை மந்திரி நன்கு கண்டுகொண் டான். கொள்ளவே மன்னவனையும் காத்தல் வேண்டும், மடமகளையும் சாந்தஞ் செய்தல் வேண்டும் என்று முனையா நின்முன் திம்மரசு.

வேளைக்கோர் அலங்காரம், நாளுக்கொரு பூஷணம, நல் அவயவங்களுக்கெல்லாம் நல்லணிகள். இவ்வாறு

ராஜசுந்தரிக்கு வைபவங்களும் வரிசைகளும் பலவிதமாக நடைபெற்றுவந்தன.

ஆடம்பர அலங்காரங்களைக் கண்டு ராஜசுந்தரி சொக்கிப் போகவில்லை; ராஜோபசாரத்தைக் கண்டும் மயங்கிவிடவில்லை; பழி வாங்கவேண்டும், பின்னரே நிம்மதி கொள்ளலாம் என்பதே அவள் சிந்தனையாக இருந்தது! பாய்ச்சல் மாடுகளை அவற்றின் போக்கில் விட்டேதிருப்பவேண்டும். இன்றேல் அவை மேலும் வெருண்டு விருப்புடன் பாயும், அனர்த்தமும் விளைக்கும். அங்ஙனமே கலிங்க ராஜகுமாரியையும் அவள் போக்கில் விட்டே திருப்பத் தீர்மானித்தான் திம்மரசு.

கிருஷ்ணதேவனும் ராஜசுந்தரியும் கூடிக்களிக்க முகூர்த்த நாளொன்று நிர்ணயமாயிற்று. அந்நன்னுளை எதிர் நோக்கி, விநாடிகளை விரல் விட்டு எண்ணிக் கொண்டிருந்தான் விஜய நகர வேந்தன்! நல்லது, வஞ்சினத்தைத் தீர்த்துக்கொள்ளும் நாள் கிட்டியது என்று அவளும் முகூர்த்த தினத்தை ஆவலுடன் எதிர் நோக்கி நின்றுள்.

அத்தினமும் புலர்ந்து. விஜயநகரம் முழுதும் ஒரே அலங்காரங் கொண்டது. மகிபனும் மகிஷியும் மகிழுநாள் இது, என்று நகரமாந்தரில் இன்புருதார் கிடையாது. அன்றிரவு பள்ளியறை பாங்காக ஜோடனை ஆயிற்று. முகூர்த்த நேரம் கிட்டியதும், ராஜசுந்தரி தன் சேடியருடன் பள்ளியறைக்குப் பயணமானுள். வேந்தர் வேந்தனுக்கு ஏற்ற வனிதை இவள்; தெய்வப்பெண் என்றே சொல்ல வேண்டும்...என்று மாதர்குழாம் அம்மங்கையை வாழ்த்தியது.

அரையிலே உடைவாளும் இடுப்பிலே ஈட்டியும் தாங்கி, கம்பீரமாக அவள் நடந்து செல்வதை மாதர் அனைவரும் இமைகொட்டாது பார்த்து நின்றனர். பள்ளியறை செல்லும் பாவைக்கு வாளும் ஈட்டியும் ஏனோ என்றாள் ஒருத்தி. வீரான வேந்தர் குலத்தாருக்கு அவை புதுமை யன்று என்றாள் மற்றொருத்தி. ராணியின் முகத்திலே அழகு வடியினும், அகத்தாடே சிந்தனை தேங்கி நிற்பதேன் என்றாள் இன்னொருத்தி. நம் ராணிக்கு என்ன சிந்தாகுலம் இருத்தல் கூடும் என்றாள் வேறொருத்தி.

பள்ளியறையை நெருங்கினாள் நம் ராஜசுந்தரி. சேடியர் அனைவரும் அப்பால் ஒதுங்கிவிட்டனர். உயிர்த் தோழி போன்ற ஒருத்தி மட்டும் பள்ளியறையின் வாசல் வரை வந்து, "தேவி! உன் கொழுநன், எங்கள் இறைவன், உன் வரவை நோக்கி, வழிமேல் விழி வைத்திருப்பான். யாது காரணமோ தெரியவில்லை, முன்னதாகவே பள்ளியறை புகுந்து, கண்ணயர்ந்து விட்டான். எல்லாம் அறிந்த உனக்கு யாது சொல்லப் போகிறேன்?" என்று கூறித் தந்திரமாக விடைபெற்றுச் சென்றாள் விரைவில்.

பள்ளியறைக்குள் ராஜசுந்தரி புகுந்ததுதான் தாமதம், உள்ளிருந்து கதவைத் தாளிட்டாள்! அரையிலிருக்கும் உடைவாளை உருவிக் கொண்டாள்; ஒரு பெருமூச்சு விட்டாள்; இன்றே என் சபதம் பலிக்கும் என்று நிச்சயம் கொண்டாள்! இங்கு மங்கும் நோக்கினாள்; பெண்யானை போல் நடந்தாள்; மஞ்சத்தை அணுகினாள்; பல்லை நறநற வென்று கடித்தாள்; அயர்ந்து தூங்குவோனை வாள் கொண்டு வெட்டிச் சாய்த்தல் தர்மம் ஆகுமா?—என்று

சிந்தித்தாள் ; தட்டி எழுப்பி, அவனையும் உடைவாள் தாங்கச் சொல்லி வாட்போர் புரிதல் மேலன்ரோ ?—என்றெண்ணினாள்; காரியத்தைச் சாதிக்கும் நேரத்திலே பல பல சிந்தனை ஏன் ? —என்று நினைத்தாள்.

மஞ்சத்தின் கீழே பதுங்கியிருக்கும் ஓர் ஆடவனது மனக்கோளை என்னென்று சொல்வது? உடைவாளை உருவிக்கொண்டு அவள் வருதலை நோக்கியதும், அவன் பாதி உயிர் ஆனான். மன்னன் வெட்டுண்டு வீழ்வனே என்று விம்மினான் ; விஷப்பரீட்சை பார்ப்பதினும், இவ்வனிதையை மாய்த்து விடுதலே மேலென முடிவு கட்டினான் ; உடனே வெளிப்படலாம் என்றாலோ, உள்ளம் ஒருப்படவில்லை, உடலமும் சொன்னபடி கேட்கவில்லை. விருபாட்சக் கடவுள் இட்டபடியே எல்லாம் நடக்கும் என்று ஆறுதல் கொண்டான்.

உடைவாளை உருவிய மாதோ அதனை மீண்டும் உரையில் செருகினாள். அஃதுணர்ந்த (மஞ்சத்தின் கீழிருந்த) ஆடவனே மன்னவன் மாளான் என்று நிம்மதி கொண்டான். அப்பெண்பால் தனது கட்டியை உருவினாள் ; மனமே ! சஞ்சலமேன் ? —என்று சாற்றினாள்.

அவ்வளவில் அவளது கட்டியோ, மஞ்சத்தின் மீதிருந்த புருஷனது மார்பகத்தே பாய்ந்தது ; முதுகுப் பக்கம் ஊடுருவியும் சென்றது. சென்றவளவில் ரத்தம் பீறிட்டது. பீறிட்ட வேகத்தில் தெய்வச் செயலாக, சிறிது ரத்தம் அவள் வாயில் தெறித்தது.

நல்லது, கொன்றதுடன் போதாது, இரத்தத்தையும் குடித்து வஞ்சினம் ஆறுவோம் என்று ராஜசுந்தரி கருதினாள் ; ஒரு சொட்டு ரத்தம் அவள் நாவினில் பட்டதும் அதனைச் சுவைத்தாள் ; அதில் ஒரு சுவையும்

கண்டாள். வஞ்சம் தீர்ந்தது; பழி வாங்கி விட்டோம் என்று ஆனந்தம் எய்தினாள்; பின்னரே அந்த உருவத்தை உற்று நோக்கினாள். அதன் அழகும் தோற்றமும் அவள் நெஞ்சத்தைக் கொள்ளை கொண்டன. ஆ! என்ன வனப்பு! என்ன கம்பீரம்! என்று மனத்தூடே மதித்தாள்.

இரத்தத்தின் சுவை ஒரு புறம்; அஃது எங்கும் வழிந்து, சுகந்தம் வீசுவது ஒரு புறம்; மஞ்சத்தின் மீது கிடந்த உருவத்தின் கவர்ச்சி ஒரு புறம்; மூன்றும் கலந்து கொள்ள அவள் மனம் சுழுகங் கொண்டது. அவளுக்கு இரக்கமும் பிறந்தது. என்ன நினைந்து என்ன செய்தோம் என்று அவள் ஏங்கினாள்; விஜயநகரின் நற்காலம்! பெரிய மனதுங்கொண்டாள்; இக்கொலைக்கு ஆளானேமே என்று பதறினாள்; கணவனன்றோ இவன், என்று சிந்தித்தாள.

மஞ்சத்தின் கீழே மறைந்திருந்த புருஷன் திடீரென அம்மாதரசியின் முன்னே தோன்றினான். மந்திரி திம்மராசே அப்புருஷன் எனக் கண்டதும் ராஜகுமாரி சிறிது துணுக்குற்றாள் நாணங்கொண்டு. முகக் குறிப்பினால் மனக் கருத்தை உணர்ந்த மந்திரி, "அரசியே! உன் பாதம் பணிகின்றேன். கொண்ட கோபம் தணிக! வஞ்சினம் தீர்ந்ததும், வெகுளி பறந்திருக்குமென மதிக்கிறேன். விஜயநகரம் உன் அடைக்கலம். அதனை வாழ வைத்தல் உன் கடன்" என்று கைகூப்பி நின்றான்.

"இவ்வரசை வாழ வைத்தல் எங்ஙனம்? என் மரபின் மானத்தைப் பங்கம் பண்ணிய பார்த்திபனை இதோ பழி வாங்கியிருக்கிறேன். இனிமேல் வாழ வைக்க வகை ஏது? விதியின்றி யான் மாலையிட்ட இம்மன்னவனுடன்

மடிதலே எனக்குத் தகும். பிறந்த குலமும் புகுந்த குலமும் ஓங்கச் செய்யும் பாக்கியம் வாய்த்தேன் அல்லேன். மரபுக்குரிய மானங்காத்து வஞ்சினமும் தீர்த்த ஒன்றே எனக்குச் சாலும்! ஒன்று இவ்வுடலத்துடன் நீக்கிரையாதல் வேண்டும். இன்றேல், இந்த உடலத்தைக் குத்திக் குமைத்த ஈட்டிகொண்டு என் உடலத்தையும் குமைத்தல் வேண்டும். இரண்டில் ஒன்றுக்கு விடை தருக" என்றாள் அக்குமரி.

"தேவியே! அடியேன் விஜயநகரின் பிரதம வேலையாள்! நீ ஏவின வேலை எதுவும் செய்ய இசைந்து நிற்பவன்! யோசனை யொன்று கூற எனக்கு உத்தரவு வேண்டும்" என்றான் திம்மரசு. நல்லது என்றாள் அந்நங்கை.

"அனையே! சிறிதும் சிந்தனை வேண்டாம். இதோ சிதைந்து கிடக்கும் சவத்துக்கு உயிரூட்ட என்னால் ஆகும். உயிர் ஊட்டியபின், எங்கள் இறைவனுடன், உன் தலைவனுடன் வாழ, நினது அருள்மொழி வேண்டும். அம்மொழி கிடைப்பின், இவ்வரசு வாழும்" என்று அப் பாஜி பகர்ந்தான்.

அடுத்த அறையில் பதுங்கியிருந்த கிருஷ்ணதேவராயன் சுவரிலுள்ள கள்ளத் துவாரத்தினூடே அனைத்தையும் பார்த்து, ஆத்திரமும் அதிசயமும் ஒருங்கே கொண்டு உன்மத்தன்போல் நின்றிருந்தனன். இதற்குள் திம்மரசு அம்மாதர் மணியிடம் விடைபெற்றுப் பக்கத்து அறையுட் புகுந்தான். புகுந்ததும், அவனைக் கட்டித் தழுவிக்கொண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தான் அவ் விறைவர் பெருமான்.

"அரசே! அனைத்தையும் அறிந்திருப்பாய்! கஜபதியின் குமரி துர்க்கை போன்றவள், மரபின் மானமே

பெரிதெனமதித்தவள். அத்தகைய உயர்குல மாத ருக்கு—வீரமாதருக்கு—நம் தேசமே பிறப்பிடம் கௌரவ குலத்தையே திரௌபதி வேரறுத்தாள். க்ஷத்திரிய குலத்தை இருபத்தொரு தலைமுறை பூண்டறுத்தாள் ரேணுகாதேவி. மாதர் வஞ்சினங் கொள்ளின், மாதேவ ரும் மாற்றலரிது. நம் அரசினுக்குப் பேரனர்த்தம் நேரக் கூடாதெனக் கருதியே, தேவியின் மனப் போக்கினுக்கு ஒரு மார்க்கம் காட்டினேன். நீயும் சென்றதை மறந்து, சிறப்புடன் வாழ்தல் வேண்டும்'' என்று மன்றாடினான் திம்மரசு.

வனப்பின் வடிவைக் காணும் ஆவலுடன் கிருஷ்ண தேவன் பக்கத்து அறைக்குள் விரைந்தான். திம்மரசும் அவனைத் தொடர்ந்து சென்றான். இருவரும் அப் படுக்கையறையில் புகுந்தனர். கண்ணெதிரே கணவனை, காவலனை உயிருடன் கண்டதும், ராஜசுந்தரி சற்றே திகைத்தாள்; கிருஷ்ணதேவனது மார்பகத்தை உற்று நோக்கினாள்! ஊறு ஒன்றும் தென்படவில்லை. உடனே மஞ்சத்தை நோக்கினாள்! அங்கே கிடந்த உருவம் பொய் யுருவம் என உணர்ந்தாள்; பேரானந்தம் அடைந்தாள்.

அப்பால், கண நேரமும் திம்மரசு அவ்வறையில் நிற்கவில்லை. மாயமாய் மறைந்துவிட்டான், வெளிப் பக்கம் தாளிட்டுக்கொண்டு! மறுதினம் பொழுது புலர்ந் தது. அரசனும் அரசியும் ஆனந்த பரவசராய் வெளிக் கிளம்பினர். அச் சதிபதிகளின் மன ஒற்றுமை கண்டு, விஜயநகரம் குதூகலங் கொண்டது. பிறமாதரைப்போல், காமக்கனியாக அந்தப்புரத்தினூடே கிடக்க ராஜசுந்தரி இசையவில்லை. மந்திர சுற்றத்திலும், போர் முகத்திலும் கலந்துகொண்டு, உண்மையில் ராஜவாழ்க்கைத் துணை யாக வாழ்ந்து வந்தனள்! ———

வைர முனைப்பு

குருவியைக் காகம் அடித்துத் தின்னும். மற்றப் பறவைகளை வல்லூறு வீழ்த்திப் புசிக்கும். வேடனோ புள்ளினங்களைக் கண்ணிவைத்துக் கைப்பற்றுவான். கானவரை வேடர் தலைவன் ஏவல் கொள்ளுவான். இஃது உலக இயற்கை! எளியாரை வலியார் வாட்டுதல் யுக தர்மம் போலும்!

பதினாறும் நூற்றாண்டிலே நம் தேசத்தின் வடக்கே விளங்கிய வல்லரசு முகலாய ராஜ்யம். தக்காணத்திலே, ஆமது நகர், பீஜபூர், கோல்கொண்டா இவை சிற்றரசுகள். தெற்கேயிருந்த குறுநில மன்னரை அச்சிற்றரசுகள் அடிப்படுத்தி வந்தன. முகலாய ராஜ்யமோ அச் சிற்றரசுகளை விழுங்கிவிட முயலாநின்றது.

ஆமதுநகர அரசின் பிரதம தளகர்த்தன் மலிக் ஆம்பர் என்பவன். அவனுக்கு அடுத்த தளபதி யாதவ ராவ். அந்த யாதவராவின் மருமகன் ராஜாஷாஜி என்பான், அத்தளபதிக்கு அடுத்தபடி.

அந்த ஆமதுநகர அரசை முறியடிக்க முயன்றான் மொகலாய சக்கரவர்த்தியான ஜஹாங்கீர். யாதவராவும், ராஜாஷாஜியும் தங்கள் அரசின் சார்பாக அருஞ்சமர் ஆற்றினர். ஆற்றவே, குளிக்கவந்து சேற்றைப் பூசிக் கொண்டதுபோல் மொகலாய வீரர் முதுகு காட்டி யோடினர்.

ஜஹாங்கிருக்கோ அத்தோல்வி கண்டு, வெட்கம் பிடுங்கித் தின்றது. அதன்மேல், மேலும் பெரியசேனை கொடுத்து மைந்தன் ஷாஜஹானை அனுப்பினான் அச் சக்கரவர்த்தி. படையுடன் வந்த மைந்தனும் போர் முனையிலே முறிபட்டான். தந்தையிடம் சென்று ஷாஜ ஹான் யாதுரைப்பது? யாதவராவும் ராஜா ஷாஜியும் இருக்கும் வரையில், ஆமதுநகரைப் புறங்காண முடியா தென்று அப்புதல்வனுக்குப் புலப்பட்டது. உடனே சதுர்வித உபாயங்களையும் கையாண்டான் அக்கோமகன்.

பட்டத்துக்கும் பதவிக்கும் மோகங்கொண்டு, மொகலாயரின் பக்கம் போய்விட்டான் யாதவராவ். மொகலாயப் படை மறுபடியும் மதர்த்து வந்தது. மலீக் ஆம்பரும் ராஜா ஷாஜியும் உயர் வீரங்காட்டி, ஒப்பற்ற சமர் செய்தனர். ஷாஜியோ மொகலாயரைத் துரத்தித் துரத்தி யடித்தான். அதனால் மண்ணைக் கௌவிய வண்ணம் ஷாஜஹான் திரும்பிப்போக நேர்ந்தது. எனினும் ஷாஜியையும் அவ்விளவரசன் வசம்செய்து கொள்ள முயன்றான். அது பலிக்கவில்லை.

காலம் பார்த்து நின்றான் காளை ஷாஜஹான். சின்னாளில் மலீக்ஆம்பர் காலகதியாயினன். அதுவே சமயமெனக் கிளம்பினான் அம்மொகலாய இளவல். ஆமது நகரக் கோட்டையை மொகலாய வீரர் நாற்புறமும் வளைத்துக்கொண்டனர். அதுகண்டு, ஆமதுநகர சுல்தான் கலங்கிவிட்டான். ராஜா ஷாஜி அதனை உணர்ந்து ஆறுதல் கூறி அரும்போர் விளைத்தனன்.

மொகலாய வீரர் அக்கோட்டையை நெருங்க முடியவில்லை. எனவே கோட்டையை அவர்கள் வசம் செய்வது எப்படி? ஆறுமாத காலம் அங்ஙனம் அவர்களை

வாட்டி வீரமே காட்டி நின்றான் ஷாஜி. தண்டோபாயம் பலிக்காதெனக் கண்ட மொகலாயரோ வஞ்சனை முனையில் வெற்றிகொள்ளப் பார்த்தனர். மாமனைப்போலவே மருமகனும் நம்மைக் கைவிட்டுப் போய்விடுவான் என்றாள் சுல்தான் தேவி.

சுல்தானுக்கோ அச்சொல் கேட்டு, நடுக்கம் பிறந்துவிட்டது. ஆதலின் மாற்றானுக்கு மண்டியிட அச சுல்தான் சிந்தியாநின்றான். அந்நிலையில் போரை, நடத்துதல் வீணென்று கருதினான் ராஜா ஷாஜி; உடனே தன் படைகளை அழைத்துக்கொண்டான்; தனது ஜமீனை நோக்கிச் செல்ல ஆயத்தமானான். மாமன் யாதவ ராவுக்கோ ஷாஜியின்மீது அடங்கா ஆத்திரம். போரில் அவன் முன்னே நிற்க முடியாது போயிற்றே என்பதே காரணம். ஆதலின் ஷாஜியைத் தொடரலானான் யாதவ ராவ் கடுஞ்சினத்துடன்.

அப்போது ஷாஜியின் மனையாள்—யாதவராவின் மகள்—ஜீஜாபாய் என்பாள்—கணவனுடன் இருந்தாள். அவளோ பூரண கர்பவதி. வீரவிளக்கான சிவாஜி கருவில் இருக்கிறான். பெண் கொடுத்த மாமன் பெரும் பகைவனாகிப் பழிவாங்கப் பின்தொடர்வதை ஷாஜி உணர்ந்தான். கர்பிணியான மனையாள் உடனிருக்க, மாமனுடன் போர்புரிய அவனுக்கு மனமில்லை.

ஆதலின் ராஜா ஷாஜி, சிவனேரி எனும் கோட்டை சேர்ந்தான்; தன் தோழன் சீனிவாசராவிடம் தேவியை ஒப்படைத்தான்; பின்னர் முகலாயரை எதிர்த்து முறியடித்தான். யாதவராவோ பல்லைக் கடித்துப் பரக்க விழித்துப் பதறநேர்ந்தது. பிள்ளைவரம் கேட்கப்போய்ப் புருஷனையே பறிகொடுத்த கதையாக முடிந்ததே என்பர்.

ஷாஜியைச் சிறைசெய்து கொணர்வதாகச் சபதம் பண்ணிவந்த யாதவராவ் அம்மொகலாயரின் முகத்தில் விழிப்பதெங்ஙனம்?

ராஜா ஷாஜியைச் சிறை செய்யாவிடினும், அவன் தேவியையாவது சிறைசெய்யலா மெனச் சிறுமதி கொண்டான் யாதவராவ்! பலபேசி என்ன? சிவனேரிக் கோட்டை சென்று, ஜீஜாபாயைச் சிறை செய்தான். அருகிலிருந்தோர் அதுகண்டு, ஆத்திரமடைந்தனர்; பெற்றெடுத்த மகளையா சிறை பிடிப்பது?—என்று சீறினர்; பெண்பாலைச் சிறை செய்வதும் பெருமையோ?—என்று இடித்துக் கூறினர். பூரண கர்ப்பிணியைச் சிறையிடுதல் சிறுமையிலும் சிறுமை என்று சுடச்சுடச் சொல்லினர்.

அதன்மேல் யாதவராவுக்கு அறிவு தலைப்பட்டது. அருமை மகளை அந்தரங்கத்தில் காணச் சென்றான் அத் தளகர்த்தன். தன் முன்னே வந்துநிற்போன் பிதா என்பதை அப்பெண்பால் உணர்ந்தாள். தந்தைக்கு மரியாதையாக ஆசனம் விட்டு எழுந்தாள்; ஆயினும் அவ்வீரனை ஏறிட்டுப் பார்க்கவில்லை; நிலத்தை நோக்கிய வண்ணம் நவிலலானாள்:

"எந்தாய்! எந்தாய் என்பது இன்றன்று, அன்று! இன்று யான் எந்தாயென உம்மை அழைத்தல் ஏற்காது; எனினும் மரியாதை மீறி வேறு விதம் அழைக்க விரும்பவில்லை. பெண் என்றால் பேயும் இரங்கும் என்பரே. பேயினும் பேதமை கொண்டுவிட்டது உமது புத்தி. பெருவீரரே! நீர் இப்போது பெண்பாலைச் சிறை செய்துள்ளீர். மருமகனை அகப்படுத்த உம்மால் இயலவில்லை,

மகளை மடக்கி விட்டீர். இந்து மரபுக்குரிய வீரம் போலும்! மானமும் ஆகும் போலும்!

"எனது பதியைப் பழிவாங்க ஆற்றலில்லை. நல்லது, என்னையேனும் கொன்று, ஆறுதல் கொள்ளும். என்னை மட்டுமா? என் கருவிலுள்ள உயிரும் உம் கைக்குள் உளது! மகாராஷ்டிர தளகர்த்தரின் மகிமையே மகிமை! எஜமானரான மொகலாயருடன் சேர்ந்த பாபமா? சாபமா? என்ன இது!

"அன்று செஞ்சோற்றுக்கடன் கழிக்கக் கர்ணன் தன் சோதரரான பாண்டவருக்கு எதிராகப் போர் புரிந்தான். படுகளத்தில் பொன்றியும் வீழ்ந்தான். இன்று நீர், சுற்றமும் துணையும் நோக்காது சமர் செய்தல் எக்கடன் கழிக்க? சோற்றுக்கடன் கழிப்பதிலும் வீரம் வேண்டாமா? உடைவாள் தரித்திருப்பதின் கருத்து யாது? ஆண்மை காட்டவன்றோ? பேடிபோல் பேதைச்செயல் இழைத்தல் வீரகுலத்துக்கே இழுக்கன்றோ? இதனை எண்ணிப்பாரும், உம் இஷ்டப்படி செய்யும். என் வயிற்றுக் கருவும் நானும் உம் கைக்குள்! நீர் விரும்பும் வண்ணம் காரியம் ஆகட்டும்!"

அம்மொழி கேட்டான் யாதவராவ்; தன் மதியினத்தை உணர்ந்தான்; மரபின் மானத்தை எண்ணினன்; தலையிறக்கங் கொண்டான்; தழுதழுத்த குரலில், என்செய்வேன்? என்று செப்பினன்; எல்லாம் ஈசன் செயல் என்று கூறினன்; இன்றேல் விதியின் வினை வென்று கொள்க என்று விளம்பினன்; பின்பு வாடிய முகத்துடன் வந்தவழி நோக்கினன்.

பதிவிடுத்த அப்பதியிலேயே வாழ விரும்பிய அத தேவி தன் உயிர் உள்ளளவும் பிறந்தகம் போகவில்லை. போக வேண்டுமெனக் கனவிலும் கருதவில்லை.

ஆமதுநகரைத் துறந்து, ராஜா ஷாஜி செல்வதைக் கேள்வியுற்றான் விஜயபுரி சுல்தான்; உடனே ஒரு தூதனுப்பி ஷாஜியை வரவழைத்தான்; விஜயபுரி அரசில் விழுமிய பதவியளித்தான்; தளகர்த்தனாக அமர்த்திக் கொண்டான். ஷாஜி அங்ஙனமிருக்க.

ஜிஜாபாயோ மொகலாயரால் தனக்கு நேர்ந்த கதியைக் கருதினாள்; அன்னவருக்குப் பாடம் புகட்டும் புத்திரன் பிறக்க வேண்டுமென்று விரும்பினாள்; தேச பக்தியை வளர்க்கும் புதல்வன் அவதரிக்க வேண்டுமென ஆவல் கொண்டாள்; மானாபிமானமற்று, மாற்றானிடம் மண்டியிடும் மக்களை மண்டையிலடித்துப் புத்தி புகட்டும் வீரபாலன் பிறக்க வேண்டுமென உன்னினாள்; வீரப் புதல்வன் பிறப்பின், சிவாஜி எனும் நாமஞ்சூட்டுவதாக முடிவு கொண்டாள்.

அவ்விதமே மைந்தன் பிறந்தான்; சிவாஜி என்று பெயர் பெற்றான்; அண்டை அயலார் மெச்ச வளர்ந்தான்! ராஜா ஷாஜியும் அது கேட்டுக் களித்தான்; வந்து சொன்ன தூதுவனுக்குக் காசும் தூசும் பரிசளித்தான். மொகலாயரின் படையெடுப்புக் காரணமாக ஒரு கண நேரமும் விஜயபுரியை விட்டகல ஷாஜியினால் இயல வில்லை. கணவன் பிரிவைக் கண்டாற்றாத ஜிஜாபாய் தன் பாலன் முகத்தைக் கண்டு ஓரளவு ஆறுதல் அடையலானாள்!

ஷாஜி விட்டகன்ற பின்னர், ஆமதுநகர அரசு அலங்கோலம் கொண்டது. இடையில் அச் சுல்தானை

யாதவராவையும் அவன் மைந்தனையும் பரிவுடன் அழைத்தான் விருந்தினுக்கு. மொலாயருக்கும் ஆமது நகர சுல்தானுக்கும் சமரஸம் ஏற்பட்டுவிட்டதனால், வஞ்சனையின்றிச் சென்றான் யாதவராவ். விருந்தின் நடுவே யாதவராவும் அவன் மைந்தனும் கொலையுண்டனர் வஞ்சனையாக!

அதனை உணர்ந்தாள் ஜிஜாபாய். தெய்வம் தண்டனை கொடுத்தது என்றெண்ணிக் களிக்கவில்லை. மற்று, மனத்தகத்தே மாழ்கினாள். அம் முகம்மதியவரசின் மீது வைரமே கொண்டாள். ராஜா ஷாஜியும் தன் மாமனது மாய முடிவு கண்டு, மனம் கொதித்தான். உதிரம் உறவறியுமன்றோ? கண்ட கண்ட இடமெல்லாம், மொகலாயரை எதிர்க்கவும் முறிக்கவுமே கங்கணம் பூண்டான் ஷாஜி. அங்ஙனமே காரியமும் செய்தான்.

அச்சமயம் மொகலாயரின் பிரதம தளகர்த்தன் முகம்மத்கான் என்பவன். அவனுக்கோ ஷாஜியின் மீது மாறாக் கோபம், மட்டிலா வைரம். ஆதலின் ஷாஜியைச் சிறை செய்ய அவன் பன்முறை முயன்று முயன்று பார்த்தான், முடியவில்லை. எவ்விதத்திலேனும் ஷாஜிக்கு ஊறு செய்வதே அவன் நோக்கம்; ஆதலின் ஜிஜாபாயைச் சிறைசெய்யச் சூழ்ச்சி புரியலானான்.

அங்ஙனமே வீர தளகர்த்தனொருவன் கிளம்பினான். அனுடன் படை வகுப்பொன்றும் புறப்பட்டது. ஒரு பெண்பாலையும், ஒரு சிறிய கோட்டையையும் எதிர்க்கப் பெருஞ்சேனை எழுந்து செல்வது கண்டு, பலரும் பரிகசித்தனர். சென்ற தளகர்த்தன் அச்சின்னஞ்சிறு கோட்டையைத் தகர்த்தான்; ஜிஜாபாயையும் அவள் கைக்குழந்தை சிவாஜியையும் சிறை செய்தான்; தன் பாசறைக்குக் கொண்டு சென்றான் கம்பீரமாக.

அதுசமயம் டில்லிச் சேனையில் சேவித்து நின்றான் யாதவராவின் சோதரனொருவன். ஜிஜாபாயின் நிலை கண்டதும், அவன் மனம் பொங்கியது. மூன்று வயது கூட நிரம்பப் பெறாத சிவாஜியின் சாயல் கண்டதும் சிந்தனை விண்டது. மரபின் மானமும் இயற்கை மதி நலமும் அவன் பிடரியைப்பிடித்து உந்தின. மதிவளங்கொண்டு இருவரையும் தப்புவிக்க அம்மகிமை யாளன் வழி தேடினான்.

சிறை செய்த தளகர்த்தன் தனித்திருக்கும் சமயம் பார்த்து, அச்சோதரன் சென்று "வீர! ஷாஜியைச் சிறைசெய்தால், அது சுத்த வீரமாகும். அதனை உலக மும் மெச்சும். அஃதின்றி அவன் தேவியை அகப்படுத் தியதில் ஆண்மை ஏது? மேலும் விஜயபுரி சேர்ந்த பின்னர், ஜீஜாபாயை மறந்துவிட்டான் ஷாஜி. வேறு மனைவியையும் மணந்து வாழ்கிறான். இந்நிலையில், ஜிஜா பாயைச் சிறை செய்து என்ன பயன்? கைவிடப்பட்ட மனைவியின் கதிகண்டு ஷாஜிக்கு அவமானம் ஏது? கருதிப்பார்.

"வீணே பெண்பாவம் நேரும். நம் குலத்துக்கே மாசு உண்டாகும். வேறென்ன பயன் உண்டு? அல்லா மலும், மகாராஷ்டிரரிலே பல பெருமக்கள் மொகலாய வரசைச்சார்ந்து நிற்கின்றனர். வீரரிலும் பலர் சேவித்து நிற்கின்றனர். குலமங்கை யொருத்தியை நீ சிறை செய்த செய்தி வெளிப்படின்,அவர்களின் மனநிலை திரியுமன்றோ? தானாடாவிடினும் தன் சதை ஆடும் அல்லவா?

அங்ஙனமெல்லாம் யாதவராவின் சோதரன் வாதாடி னன். வாதாடவே அத்தளகர்த்தனது மனம் இளகியது. மங்கையின்பால் கருணையும் உதித்தது. உடனே ஜிஜா

பாயும் சிவாஜியும் விடுதலை பெற்றனர்; சிவனேரிக் கோட்டை சென்று, முன்போல் வாழ்ந்துவரவும் தலைப் பட்டனர். பாலனுக்கு வயது மூன்றே ஆயினும் என்ன? சிறைப்பட்டதையும், சிறைவிடுபெற்றதையும் அக் குழந்தை கூர்ந்து கவனித்தது.

சிவனேரி சென்ற ஜீஜாபாய் தன் மைந்தனுக்கு வீரப்பாலூட்ட முற்பட்டனள். முன்னம் மகாராஷ்டிரர் தேவகிரியைத் தலைநகராகக்கொண்டு ஆண்ட கதை யெல்லாம் கூறினாள்; தனியரசு செலுத்திய வீர வேந்தரின் சரிதத்தை வரன் முறையாக விளம்பினாள்; ரஜபுத்திர வழிமுறையில் வந்த வரலாற்றை விளங்க உரைத்தாள்; அன்னியரால் சுதேச அரசுகள் பல அழிந்ததை மனத்தகத்தே பதியவைத்தாள்; பராக்கிர மம் ஊட்டினாள்.

ராமாயணம், பாரதம், பாகவதம், ஸ்காந்தம் இவற்றை ஆதியோடந்தமாக உரைத்தாள்; துஷ்டர் களைச் சிதைத்த அவதார புருஷர்களின் வாழ்க்கையை விவரித்தாள்; கிருஷ்ண பலராமரது பால லீலைகளைப் பக்குவமாகப் பகர்ந்தாள்; அர்ச்சுனனது ஆற்றலையும் வீரத்தையும் வரன்முறையாக உரைத்தாள்; குமாரக் கடவுள், ராமபிரான் இவர்களின் வீர நிகழ்ச்சிகளை விளக்கிப் புகட்டினாள்.

தந்தையான ஷாஜியின் அஞ்சா நெஞ்சம், அளவிலா ஆண்மை, இணையிலா வீரம் இவற்றை எடுத்தோதினாள்; துப்பாக்கியின் வயிற்றில் பீரங்கி பிறப்பது மேல் என்றாள்.

புராணமும் இதிகாசமும் உரைக்க உரைக்க, அப் பாலன் பரிவுடன் கேட்பான்; பராக்கிரமம் காட்டுவது

போல் துள்ளி எழுவான்; தாண்டிக் குதிப்பான்; தாயே கண்கலக்கம் வேண்டாம் என்று சாற்றுவான்.

கருவிலிருந்த அபிமன்யுவுக்கு மாபாரதப் போரைக் கூறி வீரம் புகட்டினான் கண்ணபிரான் என்பர் பெரியோர். ஜீஜாபாயோ சிவாஜிக்குப் பால் கொடுக்கத் தலைப்பட்டது முதல், வீரமே புகட்டி வந்தாள் அல்லவா? தேச சரித்திரத்தையும் குல சரித்திரத்தையும் கேட்டுக் கேட்டுச் சிந்தனை செய்து வீராதி வீரனாவேன், வெற்றிக் கொடி தூக்குவேன் என்றே எண்ணமிட்டு நின்றான் அவ்விளம் பாலன்.

கருவிலிருந்த காலத்திலேயே ஒரு முறை மொகலாயரிடம் சிவாஜி சிறைப்பட்டான். மீண்டும் மூன்றாம் ஆண்டில் அவர்களின் கையில் சிக்கினான்! கருவில் முளைத்த பகை, கைக்குழந்தைப் பருவத்திலே காழ்ப்புக்கொண்டது; தாயின் வீரப்பாலோ, அக் காழ்ப்பினை வேரோடச் செய்தது; இயற்கையறிவும் ஆற்றலும் அதனை மேலும் மேலும் காட்டுத் தீ போல் வளர்த்தே வந்தன.

அவன் பிறநத காலந்தொட்டுப் பதினாறு வயது வரையில் தக்காண மெங்கும் ஒரே படையெடுப்பு, அடிபிடி சண்டை, அல்லோலகல்லோலம், வெட்டுப்பழி குத்துப்பழி. இவை யெல்லாம் இவ்வீரனுக்கு வீறுப்பை வளர்த்து வந்தன; சுதந்திர வாழ்வில் விருவிருப்பு ஊட்டின. அது கண்ட ஜீஜாபாய், களித்து, இனி நம் கலி நீங்கும், தேசம் சிறக்கும் என்றெண்ணி ஈசனை வழுத்தி நின்றனள்.

பாலப் பருவம் நீங்கி, வாலிப வயது கொண்டான் சிவாஜி. பூனாவுக்கு அருகிலுள்ள மலைவாசிகளான மாவலரைத் திரட்டினான்; பெரிய சேனை யொன்று சேர்த்தான்;

அயலேயுள்ள கோட்டைகளை ஒவ்வொன்ருகப் பிடித்தான்; பற்பல பிரதேசங்களையும் கைப்பற்றினன்; அன்னிய மொகலாயவரசினுல் தேசம், தர்மம் இரண்டும் கெடுவதை நோக்கினுன்; சமயம் பார்த்து, மொகலாயரின் மீது பாய்ந்தான்.

சிற்றுளியால் மலையும் தகரும். அஃதேபோல் வல்லரசான மொகலாய ராஜ்யத்தை சிவாஜி தகர்த்தான். ஔரங்கசீப் ஆனமட்டும் முயன்றும், சிவாஜியை மடக்க இயலவில்லை. பேரரசு கட்டி வாழ்ந்துமென்ன? இச்சிறுவனைச் சிதைக்க முடியவில்லையே என்று உயிருள்ளளவும் அச் சக்கரவர்த்தி தேம்பிநின்ருன். கருவிலே வளர்த்த பகை வைரங் கொண்டதினுல், மொகலாய வல்லரசு மகாராஷ்டிரரால் சிதறுண்டது. சத்திரபதியாகிச் சிறந்தான் நம் வீர சிவாஜி!

ஸையத் கோரி

பேசா மடந்தையின் சயன அறையிலே, வரிசை வரிசையாகப் பதுமைகள் பல இருக்கும் அவற்றினுக்கு விசையூட்டினால் ஒவ்வொன்றும் ஒரொரு அற்புதமான கதை கூறுமாம். அங்ஙனமே ஆராய்ச்சி எனும் விசையூட்டின், நமது நாட்டிலுள்ள புராதனக் கட்டடம் ஒவ்வொன்றும் ஒரொரு சரித்திர சம்பவத்தை நிகழ்த்தும். அத்தகைய கட்டடங்களில் ஒன்று தஞ்சைமாநகரிலே வடவாற்றின் கரையிலுள்ள ஸையத் கோரி என்பது.

ஸையத் எனும் வீரத் துருக்கன் வெட்டுண்டு புதைந்த இடம் அது. தஞ்சை மகாராஷ்டிர மன்னவரிடம் அவன் ஒரு தளபதியாக இருந்தான். ஒரு சமயம் அவன் ராஜகர்த்தா ஆனான்; அடுத்தடுத்து நால்வரை அரியணையில் அமர்த்தினான்; ஓராண்டினுக்குள் ஒவ்வொருவரையும் வாளுக்கு இரையாக்கினான்; தானே அரியாசனத்தில் அமரவும் ஆவல் கொண்டான்; தமிழகத்தில் அன்று எஞ்சி நின்ற ஒரேயொரு ஹிந்து அரசையும் முகம்மதிய அரசாக்க முனைந்தான்! ஆயினும் கருதியபடி காரியம் கைகூடவில்லை.

அவன் கோலாகலங் கொண்டு குலவிய காலத்திலேயே, தஞ்சைச் சீமையிலே ஆலயங்கள் விளக்கொளியும் இழந்தன; மானியங்கள் பலவும் பறிபோயின; அன்னசத்திரங்கள் அனைத்தும் மூடுண்டன. தர்மதேவதை

தலைகவிழ்ந்து நின்று தவிக்கலானாள்! 'குட்டிக்கவி' என்பார் அது கண்டு, "அந்தோ! என்ன காலம இது! மதிமந்திரிகளான நாரு, ஆனந்த ராவ் ஆகியவர்கள் இல்லையே!" என்று மகிஷாஷ்டகம் எனும நூலில் வருந்திப் பாடியிருக்கிறார்.

அங்கிலையில் "காட்டுராஜா" என்பான் வெளிக் கிளம்பி, நாட்டு மக்களின் கண்ணீரைத் துடைக்கிறான்; சிம்மாசனத்தில் அமர்ந்து சிறப்பாக அரசு நடத்துகிறான்; படையொன்று திரட்டி ஸையதைப் போர் முனையில் முறியடிக்கிறான்; பின்னர் அப்பாவியின் சூழ்ச்சியால் அரசிழந்து சிறையில் கிடக்கிறான்; அப்போதும் நாட்டின் நலமே கருதித் தம்பி பிரதாப சிம்மனை அரசுக் கட்டிலில் அமரச் செய்கிறான்! முடிவில் பிரதாப சிம்மனால் வெட்டுண்டு வீழ்கிறான் ஸையத்!

தஞ்சைச் சீமையிலே மகாராஷ்டிர அரசை நிலைக்கச் செய்த முதல்வன் சிவாஜியின் தம்பி வெங்காஜி. 1676-ம் வருஷம் முதல் 1855-ஆம் வருஷம் வரையில் தஞ்சையிலே வெஙகாஜியின் வமிசத்தார் விழுமிய அரசு நடத்தி வருகின்றனர். ஆதியிலே வெங்காஜியிடம் ஏவலாளாக அமர்கிறான் ஸையத். வேலையாளின் முகப்பொலிவும் மனப்போக்கும் வெங்காஜியின் மனத்தைக் கவர்கின்றன. உடனே போர்ச் சேவக வேலை பெறுகிறான் ஸையத் என்பான்.

ஸையதுக்கு நல்ல காலம் வந்து கூடிக்கொள்கிறது. தஞ்சை மாளிகையின் காவலாளனுக அமர்கிறான் அவன். அரிய ஊழியம் புரிந்து அரசனது அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமாகிறான். வெங்காஜி விண்ணகம புகும் சமயம், ஸையதைத் தன் மகன் ஷாஜி

யிடம் ஒப்படைத்துச் செல்லுகிறான். ஷாஜியின் காலத்திலே சேதுபதிக்கும் தஞ்சைக்கும் போர் மூளுகிறது. அதில் பெரும் வீரங் காட்டுகிறான் ஸையத்! ஷாஜியோ அது கண்டு மெச்சி, அரண்மனை வீரருக்குத் தளபதி எனும் பதம் ஸையதுக்கு அளிக்கிறான்.

ஷாஜிக்குப் பின் ஸரபோஜி என்பான் பட்டத்துக்கு வருகிறான். தஞ்சைச் சீமையை மிக்க நேர்மையாகப் பரிபாலிக்கிறான். அப்போதும், ஒப்பற்ற தளபதியாகத் துலங்குகிறான் ஸையத். ஸரபோஜிக்குப் பின் துக்கோஜி என்பான் அரியாசனத்தில் அமருகிறான். துக்கோஜியின் கடைநாளிலே சுப்புசெட்டி என்பான் பிரதம அமைச்சன் ஆகிறான். உடனே ஸையதும் செட்டியும் பிரியா நேசம் கொள்கின்றனர்.

துக்கோஜி காலமானதும், ஸையதின் மனம் மாறுபடுகிறது. தீய எண்ணமும் உதிக்கிறது. நாளடைவில் துக்கோஜியும் கண்மூடவே எக்கோஜி என்பான் சிம்மாசனத்தில் அமருகிறான். வேலியே பயிரை மேய்வது போல், அரசைக் கெடுக்க முயல்கிறான் ஸையத். இதற்குச் சுப்பு செட்டியும் உற்ற துணையாக விளங்குகிறான். ஓராண்டினுக்குள் உயிரிழக்கிறான் எக்கோஜி. உடனே பட்டமேற ஒருவரும் இல்லை. எக்கோஜியின் மனைவி ஸுஜனுபாய் பட்டத்தில் குந்துகிறாள். அத்தேவி தர்ம சிந்தை கொண்டவள்; நலமேபுரியும் நாட்டமுடையவள்!

ஸையதின் சூழ்ச்சியை அத்தேவி அறிந்து பக்கபலம் தேடலானாள். ஸித்தோஜி, துளஸாஜி, துக்காஜி ஆகிய மூவரும் துணையாக நிற்கின்றனர். சுப்புசெட்டியும் மகா யோக்கியன் போல் அரசியிடம் நடந்துகொள்கிறான். அரசி அவனை நம்பிவிடுகிறாள். மதியூகிகளான

மூவர் உற்ற துணையாக இருக்கையில் பரிபாலனம் நன்கு நடைபெறுகின்றது. அது கண்டு ஸையத் சகிக்கவில்லை. ஆற்காட்டு நவாபான சந்தா சாகிபுடன் அவன் கூடிக் கொண்டு சதி செய்யத் தொடங்குகிறான்.

அச்சமயம் பிரசித்திபெற்ற மதுரை நாயக்க அரசு மறையவே தஞ்சையரசு ஒன்றே தமிழகத்திலுள்ள ஹிந்து அரசாம்! இந்த ஒன்றையும் விழுங்கிவிடவேண்டு மென நவாபும் ஸையதும் சதி செய்கின்றனர். ஆயினும் பகிரங்கத்தில் படைகொண்டு கிளம்ப நவாபுக்கும் துணிவில்லை. ஸையதுக்கும் தைரியமில்லை. மாய வழியையே இருவரும் மேற்கொள்கின்றனர். திரை மறைவிலிருந்து தாபம் போடுகிறான் நவாப். ஸையதோ ஆட்டமெல்லாம் ஆடுகிறான்.

அரண்மனைத் தளபதியென அகங்கரித்து அனைவரையும் வெருட்டுகிறான் ஸையத். அவனை மண்டையிலடிப்பது போல், மர்மமாக ஆணையிடுகிறாள் ஸுஜனாபாய். ஆதலின் அரசியை மாய்த்துவிட வேண்டுமென அவன் முனைகிறான். ராணியின் துணைவர் மூவரில் ஸித்தோஜியே மகா புத்திமான். அடிக்கடி இவன் அந்தப்புரஞ் செல்வான்; அரசிக்கு உபாய மெல்லாம் உரைப்பான்! அவ்வேளை அந்தப்புரச் சேடி யொருத்தி இவன் காதலி யாயினள்.

அதுபற்றி ஸித்தோஜி ஓய்வு நேரங்களி லெல்லாம் அரண்மனையிலேயே தங்கியிருத்தல் வழக்கம். அரசியைப் பழிக்கவும், ஸித்தோஜியை ஒழிக்கவும் அவ் வழக்கத்தினை ஒரு வியாஜமாகக் கொள்கிறான் ஸையத். உடனே அரசிக்கும் ஸித்தோஜிக்கும் கள்ள

நட்பு உண்டென ஒரு வதந்தி கிளம்புகிறது; அரண்மனை யெங்கும் பரவுகிறது; முடிவில் நகரிலும் வியாபிக்கிறது. கைம்பெண் காதல் மணம் கொள்வதா வென நகர மாந்தரிலே சிலர் சீறுகின்றனர்.

அப் பழியை நம்பிய பலரும் அரசியை வெறுக்கத் தொடங்குகின்றனர். இதற்கு ஆகுதி வார்க்கிருன் ஸையத். நகர மக்களுக்குள்ளே அது காரணமாகக் கட்சிப் பிரதி கட்சிகள் உதிக்கின்றன. ஒரு சாரார் ஸையதைச் சார்ந்து நிற்கின்றனர். மற்ருெரு சாராரோ, எல்லாம் அபாண்டம் என்று ராணியை ஆதரித்து நிற்கின்றனர். அப்போது ஸையதே சேனைத் தலைவன், கோட்டைக்கும் காவலன், அரண்மனையின். அதிபன். அவன் கைக்குள் சேனை முழுதும்!

ஒரு நாள் திடீரென அரசி கொலையுண்டாள். கொலைப் பாதகன் யாவனென வெளியாகவில்லை. தீய ஒழுக்கத் தால் தேவி உயிரிழந்தாள் என்று ஸையதே தூற்று கிருன். அதனைப் பலரும் நம்புகின்றனர். அந் நிலையில், ஸித்தோஜியின் மீது கொலைப் பாவம் சுமத்துகிருன் ஸையத். பின்பு ஸித்தோஜியும் அவன் துணைவர் இருவரும் ஸையதின் ஏவலால் கொலையடைகின்றனர். அடாது செய்தவன், படாத பாடு பட்டான் என்றே எல்லாரும் பேசுகின்றனர்.

தன் கொலைப் பாதகத்தை உணராமல் மக்கள் தன்னை மெச்சுகின்றனர் என்று ஸையத் மகிழ்கிருன். ஆயினும், உடனே அரியணையில் ஏறியமர அவன் விரும்பவில்லை. காலம் பார்த்து நிற்கிருன். இதற்கிடையில் பால ஞெருவனைச் சிம்மாசனத்தில் தூக்கி வைக்கிருன் ஸையத். பெயரளவில் அப் பாலனே அரசன். ஆனல்

உண்மை யரசன் ஸையதே. அப்போதுதான் ஹிந்து மதம், ஹிந்து மக்கள், ஹிந்துக் கோயில் இவற்றின் மீது ஸையத் துவஜம் கட்டுகிறான்.

அதன் விளைவாகவே ஆலயங்கள் அனைத்தும் விளக் கொளியும் இழக்கின்றன; அக்கிரகாரங்கள் அலறுகின்றன; அன்ன சத்திரங்கள் அடைபடுகின்றன; மானியங்கள் பறிமுதலாகின்றன! இவ்வளவுக்கும் ஆற்காட்டு நவாப் உடந்தையாக இருக்கின்றான்; பலே! பேஷ்!—என்று கூறித் தூதும் பரிசும் தஞ்சைக்கு அனுப்புகின்றான்; சின்னாளில் எல்லாம் துருக்க மயமாகி விடுமோ என்று மறுகாத மக்கள் கிடையாது; மயங்காத அதிகாரிகளும் இல்லை. ஸையதை அம்மட்டோடு நிறுத்திக் காட்டு ராஜாவைப் பார்ப்போம்.

ஸரபோஜியின் காலத்திலே தஞ்சை மாளிகையில் வண்ணாத்தி ஒருத்தி இருந்தாள். அவள் மகா ரூபவதி. அவளது இயற்பெயர் குப்பிஜி. காரணச் சிறப்புப் பெயரோ ரூபிஜி. பார்வைக்கு அவளை வண்ணாத்தி என்று சொல்லமுடியாது. ராஜாத்தி என்றே சொல்ல வேண்டும். ஸரபோஜிக்கு அவள் காமக்கிழத்தியானாள்; உடனே ராஜாத்தி ஆகிவிட்டாள்! அந்தப்புரத்திலே அவளுக்குத்தான் அக்கிர ஸ்தானம். அவள் வயிற்றில் மகனொருவன் பிறந்தான். அவன் பெயர் ஷாஜி. இது நிற்க.

ஸரபோஜிக்கோ பிள்ளைப்பேற்றில் பிரேமை மிகுதி. கடிமணங்கொண்ட மனைவியர் மூவரில் ஒருவரும் வயிறு திறக்கவில்லையே என்று அவன் பெரிதும் வருந்தினான். பட்டத்துக்கு மைந்தன் இல்லையே யென மகிஷியர் மூவரும் மனம் கரைந்தனர். இரண்டாவது மனையா

ளுக்கோ அத் துக்கம் தாங்க முடியவில்லை. ஆதலின் கருக் கொண்டிருப்பதாகப் பாசாங்கு பண்ணினாள். பத்து மாதமானதும் பாலசூரியனைப்போல் ஒருபுதல்வனை யும் எடுத்துக் காட்டினாள், இறைவனுக்கு!

அந்த அரசிக்கு ஓர் அந்தண மாது உயிர்த் தோழி. அம் மாதின் பெயர் கல்யாணி. அரசிகளுக்குப் புத்திர பாக்கியம் இல்லையே என்று கல்யாணிக்கு வருத்தம் அதிகம். ஆதலின், அரசியின் வேண்டுகோளுக் கிணங்கித் தன் குழந்தையை அரசிக்குக் கொடுத்தாள். அவ் வேதிய மாதுக்குப் பிறந்த மைந்தனையே தன் மைந்தனென மொழிந்தாள் அரசியும். ஸரபோஜியும் அதனை நம்பி அகங்களித்தான். தன் மைந்தனெனவே அப் பாலனைப் போற்றிவந்தான்.

ஸரபோஜிக்குச் சோதரன் ஒருவன் இருந்தான். அண்ணனுக்குப் பிள்ளை இல்லாததனால், தனக்கே பட்டங் கிடைக்குமென்பது அத் தம்பியின் நினைப்பு. ஆயினும் மைந்தன் பிறந்தமை கேட்டு அவன் ஆசையில் இடி விழுந்தது. இந் நிலையில் அவனுக்கு அப் பிள்ளைப் பேற்றின் மீது ஐயம் உண்டாயிற்று. ஆதலின் அதனைக் கூர்ந்து விசாரிக்கத் தலைப்பட்டான். உண்மை புலப் பட்டது. உடனே அண்ணனிடம் சென்று முடி போட் டான். தமையனும் மதி பிசகினான்.

அவ்வளவில் பிள்ளைப் பேறு கொண்ட அரசி அந்தப் புரத்திலிருந்து விரட்டப்பட்டாள். ஆதலின் பிள்ளையுடன் சென்று அவள் பதுங்கி வாழ நேர்ந்தது.

ஸரபோஜி காலகதியானதும், வண்ணாத்தி குப்பிஜியின் வாழ்வு மங்கிற்று. ஆகவே, தன் மைந்த

னுடன் சென்று தலியிடத்திலே அவளும் வாழ்ந்து வர நேர்ந்தது. ஸையதின் வஞ்சனை உச்சநிலை கொண்ட சமயம், அப் பையன் படபடப்புக் கொண்டான். ராஜ பிந்துவுக்குத் தோன்றியவன் அல்லவா?

அக் காலத்திலே தஞ்சைப் பக்கம் காடுகள் மிகுதி; அக் காடுகளினிடையே கள்ளர் மரபார் வசித்துவந்தனர். அவர்களுக்கு உற்ற நண்பனாகத் துலங்கினான் குப்பி மகன். வேதிய மாதின் வயிற்றில் தோன்றி, அரசமாதின் புதல்வனான பேர்வழியோ கள்ளர் குலத்தாரின் திலகமென விளங்கினான் என்பர் சிலர். குப்பி மகனோ வேதியப் புதல்வனோ யாவனாயினும் என்ன? தஞ்சையிலே ஸையத் நடத்தும் சூழ்ச்சி கண்டு அப் பெருமகன் சிறிதும் சகிக்கவில்லை.

கள்ளர் குலத் தலைவர்களுடன் அக் குமரன் கலந்தாலோசித்தான். அரண்மனையின் அந்தரங்கமெல்லாம் அந்தணர் சிலர் உணர்ந்து வந்து, அம் மைந்தனுக்கு உணர்த்தினர். பக்க பலம் கிட்டியவுடனே, படைபலங்கொண்டு உறுமியெழுந்தான் அப் பாலன். ஒரு நாள் அதிகாலை தஞ்சைக் கோட்டைக்கு வெளியே போர் முரசுகள் எழுந்தன. பலரும் திகில் கொண்டனர். அப்போது ஸையத் என்பானோ, முந்தைய இரவிலே கொண்ட மாதர் மயக்கும், மதுவின் மயக்குங் காரணமாக கும்பகர்ணனது அவதாரமாக விளங்கினான்.

முன்னேற்பாட்டின்படி கோட்டைக் கதவுகள் திறவுண்டன. பரிவாரங்களுடன் அப் பையன் உள்ளே நுழைந்தான்; நேரே அத்தாணிமண்டபம் புகுந்தான்; இருபக்கத்திலும் வீரக்கள்ளர் வாளுருவி நிற்க, அந்தண சிரேஷ்டர் தோன்றி அவனுக்கு முடிகவித்தனர்.

காட்டுப் பக்க மிருந்து கிளம்பி வந்தமையால், காட்டு ராஜா என்று பெயரிட்டனர். இதற் கிடையில் ஸையத் என்பான் தன் மஞ்சத்திலேயே விலங்கிடப்பட்டுச் சிறை கிடந்தான்.

காட்டு ராஜா என்று நாமம் தாங்கித் தஞ்சைக் காவலனுனது குப்பி மகன் என்பர் சிலர்; அன்று, வேதிய மாதின் புதல்வன் என்பர் வேறு சிலர். இது எங்ஙனமாயினும் சரி, காட்டு ராஜா அரியணையில் அமர்ந்ததும், ஆலயங்களெல்லாம் முன்னமே போல் அலங்கார அபிஷேக ஆராதனைகள் கொண்டன, அன்ன சத்திரங்கள் திறப்புண்டன, அக்கிரகாரங்கள் ஆனந்தம் எய்தின, பறிபோன மானியங்கள் திரும்பி வந்தன, தர்ம தேவதையும் தலைகாட்டத் தலைப்பட்டாள்.

பெட்டிப் பாம்பு போலான ஸையத் பச்சாத்தாபங் கொண்டான்; பரம பணிவு காட்டினுன்; நல்ல பிள்ளை யாக நடப்பதாகச் சத்தியஞ் செய்தான்; தன்னை மன்னிக்கும்படியும் வேண்டிக் கொண்டான். காட்டு ராஜாவும் மனமிளகி விடுதலை யளித்தான் அவ னுக்கு. பாம்புக்குப் பால் வார்த்தாலும் அது விஷத் தையே கக்குமன்ருே? விடுதலை கிடைத்ததும் வீருப்பு டன் கிளம்பினுன் ஸையத்; காட்டு ராஜாவைப் போருக்கு அழைத்தான்.

சுருங்கச் சொல்லின் இருவருக்கும் போர் மூண்டது. கள்ளர் குலத்தார் காட்டு ராஜாவின் பக்கம்; ஸையதின் பக்கமோ பழைய தஞ்சை வீரரும், ஆற்காட்டு நவாபின் ஆட்களும். அப்போரிலே ஸையத் முறியுண்டான்; உயிர்ப் பிச்சையும் வேண்டினுன். இளகிய மனதுடைய காட்டு ராஜாவும் பிழைத்துப்போ என்ருன். பின்பு

சின்னுள் தன்வாலை மடக்கி வைத்துக்கொண்டிருந்தான், ஸையத். ஆயினும் உள்ளூர சூழ்ச்சி புரிந்து வந்தான்.

போர்முனையில் ஸையது சாய்ந்துமென்ன? ஆற்காட்டு நவாபுக்கோ தஞ்சையின் மீதுள்ள ஆசை அகலவில்லை. ஆதலின் கண்குத்திப் பாம்புபோலக் காலம் பார்த்து நின்ருன், தஞ்சையைக் கட்டிக் கொள்ள! இதனை யறிந்த காட்டு ராஜா சும்மா இருக்கவில்லை. அச்சமயம் புதுச்சேரியிலிருந்த பிரஞ்சுக்காரருடன் ஓர் உடன்படிக்கை கொண்டான். அதன்படி காட்டு ராஜாவுக்கு அவர்கள் உதவிபுரியவேண்டும்: அவனே அதற்கு ஈடாகக் காரைக்காலை அவர்களுக்குக் கொடுத்து விடவேண்டும்.

சதியில் சிறந்த ஸையதோ, "ஈதென்ன விந்தை! க்ஷத்திரியர் அரசாண்ட நாட்டை வண்ணுத்தி மைந்தன் ஆளுவதோ! குப்பி மகன் அல்லவோ காட்டு ராஜன்! அரியணையில் அவன் அமருதல் அடுக்குமோ?" என்று ஒரு கட்டு கட்டி விட்டான். அத்துடன், ஏகாலி மகன் காரைக்காலை அந்நியருக்குக் கொடுத்துவிடப் பார்க்கிருன் என்று அம்பலப்படுத்திஞன். வண்ணுத்தி மகன் என்று கேட்டதும் மக்களில் பலரும் பேதுற்றனர்.

தஞ்சைச் சீமை யெங்கும் கொந்தளிப்பு மிகுந்துவிட்டது. அதுவே சமயமெனக் கொண்டான் ஸையத். உடனே கிளம்பிக் காட்டு ராஜாவைப் பிடித்துச் சிறையில் போட்டுவிட்டான். மக்களுக்கு நம்பிக்கை பிறக்க வேண்டி, ராஜகுலப் பாலனெருவனை அரியணையில் அமர்த்துவதாகப் பறையறைவித்தான்.

ஸரபோஜியின் காதல் மனைவியரிலே ஒருத்தி அன்னபூரணி என்பாள். அவள் புதல்வன் பிரதாப சிம்

மன். அப்பிரதாபனை யடைந்து வேண்டிக்கொண்டான் ஸையத். பிரதாபனுக்கோ ஸையதின் வஞ்சகமெல்லாம் நன்கு தெரியும். பரம வஞ்சகனை நம்பி அரியாசனத்தில் எங்ஙனம் அமருவது? தவிர காட்டு ராஜாவின் பராக்கிரமங் கண்டு அவனுக்கு ஒருபுறம் மட்டற்ற மகிழ்ச்சி! சிறையில் கிடப்பது கண்டு ஒருபுறம் உரைக்கொணுத் துயரம்! ஆதலின் அரசும் வேண்டாம், அல்லலும் வேண்டாம் என்று சொல்லிவிட்டான் பிரதாபன்.

சிறையில் கிடக்கும் காட்டு ராஜா அஃதறிந்து பிரதாபனுக்கு உடனே ஒரு தூது போக்கினன். அதன் சாரம் இது: "தம்பி, பிரதாப, தஞ்சை நமது மூதாதையர் தேடிய அரசு! படுபாவி ஸையத் என்பான் நாலைந்து வருஷமாகத் தன் இஷ்டப்படி ஆட்டி வருகின்றான். அது கண்டு பொறுமல் வெளிக் கிளம்பி, வீருப்புக் காட்டினேன். இப்போதோ சிறையில் கிடக்கின்றேன். வண்ணுத்தி மகனென என்னை எல்லாரும் எண்ணியுளர். எல்லாம் விதி வசம்! இது கிடக்கட்டும்.

"நீயும் நானும் வீர சிவாஜியின் வமிசத்தினர் அன்றே? ஸையத் விரும்பும் வண்ணம் அரியணையில் நீ தட்டாது அமரு. சமயம் பார்த்து அவன் உயிரை வாங்கலாம். வலுவில்வரும் ஸ்ரீ தேவியைக் கைவிடாதே. இந்த ஸையத் எம்மாத்திரம்? ஊர்க்குருவியைக் கண்டு வல்லூறு அஞ்சுமோ? தயக்கமேன்? தாமதமேன்? நாட்டைப்பார்; மக்களைப்பார்; உன் உயிரா பெரிது? நலம்புரிய நாட்டங்கொள். பவானி அருள் புரிவாள்!

"வடக்கே நம்மவர் நாற்றிசையும் இசை பரப்புவதைப் பார். தென்னுட்டிலே நாம் நலிவதோ? அன்னியத் துருப்புகளைக் கண்டு அஞ்சுவதோ? ஐந்து வருஷ காலம்

அவன் அவதி இழைத்தது போதும். அவனுக்குப் பாடம் புகட்டவேண்டும். இதில் உன் உயிர் போனால் என்ன? நம் மரபின் மானம் நிலை நிற்கும். இதனையே எண்ணிப்பார். தயக்கமும், தாமதமும் வேண்டாம். வருவது வருக. விரைந்தெழுக.''

அது கேட்ட பிரதாப சிம்மன் அங்ஙனமே தஞ்சைச் சீமையின் அரசனானான், 1739-ம் வருஷம்! மனவலியற்ற அம்மன்னவனே கூண்டில் சிக்கிய சிங்கமே போல் வாழ்ந்து வர நேர்ந்தது. காட்டு ராஜாவின் பேச்சைக் கேட்டுப் பேதுற்றானுமே என்று கலங்கினான் அக் காவலன். இதனைத் தஞ்சை மக்கள், அதிலும் குறிப்பாக வீரக் கள்ளரும் வீர வேதியரும் உணர்ந்தனர். இதற்குள் ஸையதின் அட்டகாசம் தலை மிஞ்சி விட்டது.

கள்ளரும் வேதியரும் கூடி ஒரு நாள் இரவு மந்திராலோசனை செய்தனர். மறுதினம் மாலையிலே மதோன்மதத்தனான ஸையத் மாளிகையிலே உலாவி நின்றான். அவ்வேளை வீரர் இருவர்—ஒருவன் கள்ளன்—மற்றவன் மறையவன்—அவன் முன்னே தோன்றினர். ஸையதின் சிரம் உடனே தரையில் உருண்டது. சனி தொலைந்த தென நகரமாந்தர் களித்தனர். முகம்மதிய மதப்படி அவனது உடலை அடக்கஞ் செய்தனர். வடவாற்றின் கரையிலே கோரியும் கட்டினர். அதுவே ஸையத் கோரியாம்.

புலிக்குட்டி

மழைக்கு ஒதுங்க இடங்கொடுத்தால், மனைக்கே வழக்காடுவதா ?—என்பர். மனைக்கு மட்டுமா வழக்கு ? மண்ணையும் கட்டிக்கொண்டு, மன்னவரையும் மாய்த்து, மகிதலத்தைக் கட்டியாள முற்பட்ட கதை, சரித்திர வரலாறு, கேளுங்கள்.

திருவாங்கூர்ச் சீமை, ஆங்குள்ள ஆண்டவன் அனந்த பத்மநாப சுவாமிக்கே சொந்தம். அங்ஙனம் சொந்தமாக்கியவன் மகாராஜா மார்த்தாண்ட வர்மன். அது முதல், சமஸ்தான மன்னர் அனைவரும் பத்மநாப சுவாமியின் தாஸராகவே பரிபாலனம் பண்ணி வருகின்றனர். நாள்தோறும் அவர்கள் ஆண்டவன் சந்நிதானம் சென்று, கணக்கு வழக்கு ஒப்புவிக்க வேண்டும்.

தனி மனிதனது சொத்தாக இல்லாமல், தெய்வச் சொத்தாகத் திருவாங்கூரை ஆக்கியதற்கு அநேக காரணங்கள் உண்டு. அவற்றுள் ஒன்று எட்டு வீட்டுப் பிள்ளைமாரின் அட்டகாசமாம்.

கேரள தேச மக்களிலே ஒரு வகுப்பார் நாயர்கள். அந் நாயர்களுக்கு நம்பியார், மேனன் என்று பல பட்டப் பெயர்கள் உண்டு. பிள்ளைமார் என்பதும் ஒரு பட்டப் பெயராம். முன்னம் திருவாங்கூரிலே பிரபல பிள்ளைமாரின் குடும்பங்கள் பல இருந்தன. அவற்றிலே எட்டுக் குடும்பத்தார் இருநூறு வருஷகாலம் அங்கே மிக்க எடுப்பாக இருந்தனர். அவர்களைத்தான் எட்டு வீட்டுப் பிள்ளைமார் என்பர்.

பிரமாதமாக வாழ்ந்துவந்த காலத்திலே திருவாங் கூரில் அப் பிள்ளைமார் இட்டதுதான் சட்டம்; இயம் பியதுதான் தீர்ப்பு; இசைத்ததுதான் ராஜநீதி! அரியணையில் அரசனொருவன் அமர்ந்திருந்தாலும், அவர் களின் சொற்படியே அவன் நடக்கவேண்டும். இல்லை யானல், அவனது அரசுரிமை போய்விடும். ஆருயிரும் பறந்துபோம்!

அனந்த பத்மநாப சுவாமி ஆலயத்தின் தர்மகர்த் தாக்களான (யோகக்காரரான) நம்பூரிப் பிராம்மணர்கள் அப் பிள்ளைமார்க்கு உட்கை! பிள்ளைமாரின் விருப்பத்தை மீறி நடப்பின், யோகக்காரருக்கும் ஆபத்து நேரும். கையாலாகாத திருவாங்கூரின் காவலர் பலரும் அப் பிள்ளைமாருக்குக் கை கட்டியே வாழ்ந்து வந்தனர்.

ஆதியிலே அப் பிள்ளைமார் அனைவரும் கூலிக்கு உழு தொழில் செய்து, காலங் கழித்து வந்தனர். நிலத் துக்கு உடையோரான போற்றிகள் (போத்திகள்) என்போர் அந்த உழு தொழிலாளரை உள்ளன்புடன் நடத்தி வந்தார்கள். கன்னட தேசத்திலிருந்து திருவாங் கூரில் வந்து குடியேறிய வேதியருக்கே போற்றிகள் (போற்றிகள் போற்றப்படும் பெருமை உடைய பிராமணர்) என்று பெயர். பாலை வார்த்தாலும், பாம்பு விஷத்தையே கக்கும். அங்ஙனம் போற்றிகள் பேரன்பு காட்டி வந்தும், நாளடைவில் அவர்களின் திரண்ட பூசொத்தை அபகரித்துக்கொண்டனர் அப் பிள்ளைமார்.

செல்வச் சீமான்களாக ஆனவுடனே, அப் பிள்ளை மாருக்குத் தலை கால் தெரியவில்லை. அப்போது திருவாங்கூர் வேந்தரோ திறனற்றுக் கிடந்தனர். கிடக்கவே, அரசைக் கட்டிக்கொள்ள அவர்களுக்கு

ஆசை பிறந்தது. ஆதித்தியவர்மன் என்பான் திருவாய்கூர் அரசனாக விளங்கி நின்றான்! அப்போது அனந்த பத்மநாபரின் ஆலய நிர்வாகம் செவ்வனே நடைபெற வில்லை. ஏராளமான சொத்திருந்தும், ஆண்டவனுக்கு அபிஷேக ஆராதனை நடப்பது அருமை.

தர்மகர்த்தாக்களை யழைத்து வினவினான் ஆதித்திய வர்மன். அவர்களோ, அப்படியா என்று வினவி அப் பிள்ளைமாரிடம் சேதி சொல்லினர். சொல்லவே, நல்லது என்றனர் பிள்ளைமார். அவ்வளவில் எட்டு வீட்டாரும் சேர்ந்து, சதி செய்யத் தொடங்கினர்.

இப்போதுள்ள திருவனந்தபுரம் அப்போது ராஜதானி யன்று. தலைநகரம் அப்போது திருவனந்த புரத்துக்கு முப்பது மைல் தூரத்தில் இருந்தது. ஒரு நாள் இரவு ஆதித்தியவர்மன் அயர்ந்து நித்திரை செய்யும் சமயம், அவனது அரண்மனை தீப் பிடித்துக் கொண்டது. உயிர் தப்பினால் போதுமென அப் பார்த்திபன் தன் குழந்தை குட்டிகளுடன் வெளிப் பட்டான் மாளிகையை விட்டு.

அரண்மனைக்குச் சற்று தூரத்திலே பிள்ளைமாரின் பந்துக்கள் வசித்திருந்தனர். பாதிராத்திரி வேளையில் பார்த்திபன் பரிதபிப்பதை யுணர்ந்தும், அப் பந்துக்கள் தங்கள் வீட்டைவிட்டு வெளியே வரவில்லை. இரவு முழுதும் வெட்ட வெளியிலேயே தங்கி, மிகவும் கஷ்டப் பட்டான் அக் காவலன். அதி காலையிலே, யோகக்காரர் தோன்றி, அரசனுக்கு ஆறுதல் கூறி, ஒப்புக்கு வருந்தி நின்றனர் வெளுத்த தெல்லாம் பா லென்று மதித்தல் அம் மன்னவன் இயற்கை.

அதுமுதல் சின்னாள் காறும், ஆண்டவனது நிவேதனமே அரசனுக்குப் புசிப்பாயிற்று. வேந்தனது இல்லக் கிழத்தியோ சற்றே சம்சயங் கொண்டாள், இறைவனுக்கு எச்சரிக்கையும் செய்தாள். தெய்வப் பிரசாதத்தில் தீங்கொன்றும் இராது என்று இசைத்தான் இறைவன். தெய்வப்பிரசாதம் என்றால், ஆதித்தியவர்மனுக்கு அவ்வளவு நம்பிக்கை. கொஞ்ச நாள் வரையில் அப் பிரசாதத்தையே பயபக்திவிசுவாசத்துடன் அவன் புசித்து வந்தான்.

கள்ளங் கபடற்ற கொற்றவன் நிலையை அப் பிள்ளைமார் கண்டுகொண்டனர். ஒரு தினம் இரவு அப் பிரசாதத்தை உண்டயர்ந்தான் ஆதித்திய வர்மன். மறுதினம் பொழுது புலர்ந்தது. நிவேதனத்தில் கலந்திருந்த நஞ்சோ அவன் ஆவியைப் பருகிவிட்டது! 1661 ஆம் ஆண்டில் நடந்த சம்பவம் இது.

உடனே பட்டத்திற்கு உரிய ராணியான உமையம்மையோ தனது பிள்ளைக் குழந்தைகள் அறுவருடன் மணக்காடு எனும் இடத்திலே வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு வசித்து வரலானாள். சதிச் செயலுக்கு இலக்கு ஆகாமல் குழந்தைகளைக் காத்தல் எங்ஙனம்? ராஜவம்சம் வழி யற்றுப் போய்விடுமோ என்பதே அவள் கவலை. பிள்ளைமார் எண்மரும் அஃதறிந்து ஆண்டவன்மீது சத்தியஞ் செய்து, அரசியின் அச்சத்தைப் போக்க முயன்றனர்.

அங்ஙனம் இருக்கையில், ஒரு நாள் பூரணசந்திரன் தனது தண்ணிய கிரணங்கள் அனைத்தையும் பரப்பிக் கொண்டு, வான வீதியில் கிளம்பினான். சந்திரிகை என்றால், சிறுவர்க்குக் கொண்டாட்டம் அல்லவா?

ராணியின் கைக்குழந்தை நீங்கலாக ஏனைய ஐவரும் நிலவிலே விளையாடி நின்றனர். விளையாட்டில் அவர்களுடன் கலந்துகொண்ட பையன்களில் ஒருவனே, "எல்லாரும் வாருங்கள். அயலே யுள்ள குளத்தில் சென்று நீராடலாம்" என்றான்.

அங்ஙனமே சிறுவர் அனைவரும் அருகே யுள்ள களப்பன் குளம் போயினர். அதில் இறங்கி நீராடினர். அவ்வேளை பையன்களில் ஒருவன், அந்த ஐந்து குமாரரையும் ஆழத்திலே அழுத்திக் கொன்றுவிட்டான். நீர் விளையாடச் சென்ற ராஜகுல மைந்தர் ஐவரும் தற்செயலாக நீரில் மூழ்கி மாண்டுபோயினர் என்றே எங்கும் செய்தி பறந்தது, பிள்ளைமாரின் சூழ்ச்சியினால்.

என் செய்வாள் ஏழைப் பெண்பால்! புதன் கோட்டையில் இனி இருத்தல் தகாது என்று கருதினாள்; நெடுமாங்காடு எனும் இடம் சேர்ந்தாள். அது முதல் பரிபாலனத்தைப் பற்றிய சிந்தையே அவளுக் கில்லை. அரசுக் குரிய கடைசிப் பிள்ளையைக் காப்ப தெப்படி என்பதிலேயே கண்ணுங் கருத்துமா யிருந்து வந்தாள். ராஜ்ய பரிபாலனமோ எட்டு வீட்டுப் பிள்ளைமாரின் கைக்குள் வந்தது. நாட்டு மக்களின் பாடோ திண்டாட்டமாக முடிந்தது.

ஆதித்திய வர்மனுக்குப் பின் வந்த அரசர் பலரும் பிள்ளைமாரைக்கண்டு பீதிகொண்டே கிடந்தனர். அரசியலில் தலையிடவேயில்லை. யோகக்காரரும் பிள்ளைமாருமே பரிபாலனத்தை நடத்தி வந்தனர். அது கண்டு பொறாத மக்களில் சிலர் சீறி எழ, ராஜ்யத்திலே குழப்பங்கள் நேர்ந்தன; ஒழுங்கீனங்கள் பெருகின; பத்மநாப சுவாமி ஆலயத்தின் பணியாளரும் பிணங்கி

நின்றனர். யோகக்காரரையும் பிள்ளைமாரையுங்கண்டு அவர்களுக்கு வெறுப்பு மிகுந்தது. ஐந்து வருஷ காலம் ஆலயம் அடைபட்டுக் கிடந்தது.

அப்பால் ராமவர்மன் என்பான் 1724-ஆம் ஆண்டு திருவாங்கூர் அரசனாக வந்தான். ராம வர்மனை மாய்த்து விட அப்பிள்ளைமார் பற்பல சதிகள் செய்தனர். அச்சமயம் இளவரசனாக விளங்கியவன் மார்த்தாண்டவர்மன். இவனுக்கு வயது இருபதுதான். எனினும் இவன் வெகு தீரன். ஆதலின் அப்பிள்ளைமாரைப் பூண்டறுக்க வேண்டுமென்று கங்கணம் பூண்டனன்.

ராமவர்மனுக்கோ அஃதுணர்ந்து அச்சம் பிறந்தது. பிறக்கவே பிள்ளைமாருடன் சமரஸமாகப் போகவே அவன் விரும்பி நின்ருன். பிள்ளைமாரும் பசுத்தோல் போர்த்த புலியாக நடந்து வந்தனர். அந்நிலையில் பிள்ளைமாருக்கு திகில் ஊட்டவேண்டும், அத்துடன் மாமன் ராமவர்மனது பீதியையும் போக்க வேண்டும் என்பதே மார்த்தாண்டனது கருத்தாயிற்று. ஆகவே காலங் கருதி நின்ருன் மார்த்தாண்டவர்மன்.

அம்மார்த்தாண்டனுக்குச் சிங்கம், புலி இவற்றின் குட்டிகளை வளர்ப்பதில் ஆவல் மிகுதி. பிள்ளைமாரில் ஒருவனுன பள்ளிச்சால் கிராமத்துப் பிள்ளையின் இல்லத்துக்கு அருகே அடர்ந்த காடு உண்டு. அக்காட்டில் முன்னம் புலிகள் அதிகம். ஆதலின் ஆங்கிருந்து புலிக்குட்டியொன்று பிடித்தனுப்ப வேண்டும் என்று இளவரசன் மார்த்தாண்டன் ஓலை போக்கினுன்.

அந்த ஓலை கண்டதும் பிள்ளைக்கு ஆத்திரம் மிஞ்சியது. யார் இவன்? நமக்கு ஓலையனுப்புகிருன்! எட்டு வீட்டுப் பிள்ளைமாரில் நாம் ஒருவர் என்பதை இப்பயல்

அறியவில்லை. ஆதலின் தக்க பாடம் புகட்ட வேண்டு மென அப்பிள்ளை கருதி நின்றனன். பின்பு "புலிக் குட்டியா வேண்டும்? இங்கு வந்தால் பார்க்கலாம்" என்று பதில் விடுத்தான்.

புலிக்குட்டியா வேண்டும்? இங்கு வந்தால் பார்க்க லாம் என்பதின் உட்கருத்தென்ன? "நானே புலிக்குட்டி, வந்து பார்!" என்பதே அவ்வாக்கியத்தின் கருத்தாம்! இதனை மார்த்தாண்டவர்மன் மதித்துணர்ந்தான். உடனே புறப்பட்டு விட்டான் பள்ளிச்சால் கிராமம் நோக்கி! பின்னரே ராமவர்மனுக்கு விஷய விவரம் புலப்பட்டது. "புலியின் புதர் சென்று, அதன் வாயில் யாரேனும் கையிடுவரோ? என்ன மதியீனம் இது? மருமான் மார்த்தாண்டன் உயிருடன் திரும்ப வேண்டுமே, என்ற கவலையில் ஆழ்ந்தான் காவலன் ராமவர்மன்.

புறப்பட்ட மார்த்தாண்டனே தோளிரண்டுமே துணையெனக் கொண்டான். உடைவாளும் குத்தீட்டியும் தரித்தான்; மனவலி என்பதையே கவசமாகப் பூண் டான்; ஆண்டவன் பத்மநாப சுவாமியின் அருளையே பக்க பலமாக வரித்தான். பட்டப்பகல் பதினைந்து நாழிகைக்குப் பள்ளிச்சால் சேர்ந்தான்; பிள்ளையின் இல்லத்திலே பெருமிதமாகப் புகுந்தான். எங்கே பிள்ளை? எங்கே பிள்ளை? —என்று இரைந்து கேட்டான்.

அப்பிள்ளையும் தருக்குடன் வந்து மார்த்தாண்டன் முன்னே நின்றனன். அவ்வளவில் அவனைக் குடுமி பற்றி இறுகப் பிடித்து, "எங்கே புலிக்குட்டி? உடனே காட்டு" என்று கர்ஜித்தான் மார்த்தாண்டன். இதற்குள் பிள்ளையின் பணியாளர் கழிகம்புடன் வந்து மார்த்தாண் டனை எதிர்த்தனர். பிள்ளையின் குடுமியை ஒரு கையினால்

பிடித்த வணணம் மற்றைக் கையினுல் குத்திட்டி தாங்கி எதிர்த்த அத்தனை பெயரையும் குமைத்தான் இளவரசன்.

பின்பு "பிள்ளாய்! நீ தானே புலிக்குட்டி! நல்லது. இக்குட்டி வளர்ப்புக்கு உதவாது. வாள் வீச்சினுக்கே உதவும்," என்று மார்த்தாண்டவர்மன் கூறியவுடனே, பிள்ளையின் உடம்பு இரு துண்டாயிற்று. அவ்விதம் இரு துண்டாக உடலம் விழுந்த இடம் இன்றும் "நடுவத்துமுறி" என்ற பெயருடன் நின்று நிலவுகின்றது.

அப்பிள்ளையின் சொத்தோ உடனே ஏலத்துக்கு விடப்பட்டது. வேதியரொருவர் அதனை ஏலத்தில் எடுத்தார். ஆயினும் அதனை அனுபவிக்க அவர் விரும்பவில்லை. ஆதலின் ஆண்டவனுக்கே அச்சொத்தை வழங்கி விட்டார்.

அத்துடன் மார்த்தாண்டவர்மன் நிற்கவில்லை. ஏனைய பிள்ளைமாரையும் சமயம் பார்த்துப் பூண்டறுத்தான். எட்டு வீட்டுப் பிள்ளைமாரின் கொட்டம் அத்துடன் தீர்ந்தது; அவர்களின் வம்சமும் பூண்டற்றது. எனினும் அப்பிள்ளைமாரின் வழியில் வந்த இரண்டொருவர் திருவாங்கூரில் நாளையும் இருப்பதாகக் கேள்வி. சின்னுளுக்கு முன் அச்சந்ததியாரில் ஒருவன் அரசாங்க ஊழியத்தில் அமர விரும்பி மனுப்போட்டான்.

தேசத்துக்கும் ராஜாங்கத்துக்கும் துரோகமே விளைத்து வந்த குடும்பத்தானுக்கா வேலை? அவ்வம்சம் இன்னுமா இருக்கிறது? என்று பலரும் கொதித்தனராம். ஆதலின் அப்பேர்வழிக்கு வேலை கிடைக்கவில்லை.

தேசத்துக்கு துரோகம் புரிவோர் தலைநிமிர்ந்து நடப்பதும் எப்படி?

மிளகு வியாபாரங் கருதி மேனாட்டினர் இங்கே வந்து எடுப்புக்கொள்ள நேர்ந்த காலத்திலே போர்த்துகல்காரர், டச்சுக்காரர், ஆங்கிலேயர் இவர்களுக்கு அப்பிள்ளைமாரே பக்கபலமாக நின்றதாகவும், திருவாங்கூரிலே சலுகை பல தேடித் தந்ததாகவும் சரித்திரம் சாற்றும்.

வீரப் புதல்வன்

தாசரதி யாகத்தைக் காக்கச் சென்றான். லட்சுமணன் உடன் போனான். இருவருக்கும் தக்க பாதுகாப்பு விசுவாமித்திர மகாமுனிவர். அவர் புதியதொரு சுவர்க்கம் படைத்தவர்; மூவுலகையும் அழித்தளிக்க வல்லவர்.

அத்தகைய முனிவரின் பாதுகாவல் இருந்தும் என்ன? தந்தை தசரதனுக்குத் தாளவில்லை; மனமுளைந்தான், புத்திரர் பிரிவு பொல்லாதது அல்லவா?

*　　*　　*　　*

அத்துறையில் மைசூர் திப்பு சுல்தான் நிலைமை எப்படி? போரிலே அச்சுல்தான் தோற்றுப் போனான். பகைவரோ அவனது தலை நகரை நாற்புறமும் சூழ்ந்து கொண்டனர்! இட்ட நிபந்தனைக்கு இணங்கு என்றனர்! இல்லையேல் அரண்மனையும் அந்தப்புரமும் தவிடுபொடி என்று பீரங்கிகளைக் காட்டினர்.

என் செய்வான் திப்பு! விதியின்றியே சரி என்றான். அவன் வார்த்தையில் பகைவருக்கு நம்பிக்கையில்லை. ஆதலின், "உனது பிள்ளைகளில் இருவரைப் பிணையாகக் கொடு" என்று இறுதி உரை விடுத்தனர். வேறு வகை இல்லை. மைந்தர் இருவரையும் பிணையாக அனுப்ப இசைந்தான் திப்பு. பெற்ற புதல்வரைப் பகைவரிடம் ஒப்படைத்தல் சாமானியமோ? தசரதனைப்போல் மனம் உடைய நேருமன்றோ?

பதினெட்டாம் நூற்றாண்டிலே நம் தேசத்தின் சாபத்தீடு பாருங்கள்! வர்த்தகம் புரிய வந்த ஆங்கிலக் கும்பினிக்கு இங்கே அரசு கொள்ள ஆசை மூண்டது! உளுத்துப் போய்விட்ட மொகலாய ராஜ்யத்தைச் சிதைத்து ஹிந்து சாம்ராஜ்யத்தை நிலை நிறுத்த மகாராஷ்டிரருக்கு முனைப்பு மிகுந்தது! ஹைதராபாத் நிஜாமுக்கோ தக்காணத்திலே தனியரசு கொள்ள நினைப்பு உதித்தது. திப்பு சுல்தானுக்கோ தென் இந்தியாவில் சர்வாதிகாரம் கொள்ளும் எடுப்பு மேலிட்டது.

முண்டனுக்கு இரண்டு ஆள் என்பர். மூன்று ஆள் சேர்ந்து விட்டால், முண்டன் என்ன செய்வான்? முதல் மூவரும் சேர்ந்து திப்பு சுல்தான் மீது பாய்ந்தனர். வேந்தன் திப்பு சுல்தான் தோற்றுப் போனான். உடனே சமாதான நிபந்தனைகள் கிளம்பின. அவை:

1. மைசூர் ராஜ்யத்தில் பாதியை திப்பு தந்துவிட வேண்டும். 2. யுத்த நஷ்ட ஈடாக மூன்று கோடியே முப்பது லட்சம் ரூபாய் கட்டித்தர வேண்டும். 3. யுத்தக் கைதிகளை விடுவிக்க வேண்டும். 4. உடன் படிக்கையின் படி நடக்க மைந்தரில் இருவரைப் பிணையாக அனுப்பித் தரவேண்டும். 1792 ஆம் வருஷம் பிப்பரவரிமாதம் 22-ந் தேதி இந்த நிபந்தனைகள் வெளியாயின.

திப்பு சுல்தானுக்கு அப்போது மைந்தர் மூவர். மூத்தவனுக்கு வயது இருபது. இவன் போர் முனையில் இருந்தான். இரண்டாவன் பெயர் அப்துல் காலிகி; வயது சுமார் பதினைந்து. மூன்றாமவன் பெயர் மூஸாதீன்; வயது பத்து. கடைக் குட்டிகளான இருவருமே பிணையாதல் வேண்டும்!

பச்சைப் பாலரை விரோதிகளிடம் ஒப்படைக்க மனம் ஒப்புமா? பிதா சம்மதிப்பாரு? சம்மதித்து விட்டான். அந்தப்புரத்திலே தாய் அலறுகிருள்; அடி வயிற்றைப் பிசைந்து கொள்ளுகிருள்; மார்பின் மீது புடைத்துக் கொள்ளுகிருள். நெஞ்சம் விண்டு விடுமோ என்று எல்லாரும் அஞ்சி நிற்கின்றனர்.

அப்துல் கலிக் அனைத்தையும் அறிந்தான்; அந்தப்புரம் சேர்ந்தான்; அன்னையின் பாதம் பணிந்தான்; தாயின் புலம்பல் கண்டான்; தானும் கதறினன்; கண்ணீர் வடித்தான்; பின்பு தாயை நோக்கி உரைப்பான்:

'தாயே! நீ மெத்தப் படித்தவள் ஆயிற்றே! பிறப்பு, உடனே இறப்பு! அங்ஙனமே வாழ்வு, உடனே தாழ்வு! இஃது இயற்கை. இதனை வெல்ல, அல்லது மாற்ற, மானிடரால் ஆகுமோ? போர் என்ருல் வெற்றியும் உண்டு; தோல்வியும் உண்டு! வெற்றி கிட்டினல் களிப்பு, தோல்வி எய்தினல் சலிப்பு! என்ன விபரீதம் இது!

"அண்ணன் போர் முனையில் இருக்கிருன். நானும் போர் முனை போகிறேன் என்றேன். தந்தையோ மறுத்துவிட்டார்! இன்றேல், போரில் புகுந்திருப்பேன்; பெரு வீரம் விளைத்திருப்பேன்! வெற்றியோ வீர சுவர்க்கமோ எய்தியிருப்பேன்! இதற்கு நான் கொடுத்து வைக்கவில்லை, என்ன செய்யலாம்?

"போரில் புகுந்தால் ஒன்று, வெற்றி; இன்றேல் வீர சுவர்க்கம். தந்தை இதனை மறந்தார்; தோல்விக்கு ஒப்பினர்; அரண்மனையும் அந்தப்புரமும் அழிந்தால் என்ன? ஆண்மைக்கு அழிவு உண்டோ? வீரத்துக்கு இறுதி உண்டோ? உன்னையும் என்னையும் பெரிதாக எண்ணி விட்டார் தந்தை. பாவம்! பாவம்!

"பகைவருக்கா பணிவது? அதிலும் ஆங்கிலக் கும்பினியிடமா நாம் கைகட்டி நிற்பது? என்ன மதி இது! மானம் மடிவதினும், நாடும் நகரும் மாடமும் மாளிகையும் மடிந்தால் என்ன? உலகம் உள்ளளவும் உயர் புகழ் நிலைக்குமே! தந்தை இதனை மறந்தார். மதிப்பிசகென மொழியேன், சஞ்சலபுத்தி என்றே சாற்றுவேன்!"

அச்சமயம் திப்பு சுல்தான் அந்தப்புரம் புகுந்தான்; மனைவியையும் மகனையும் கண்டான்: புதல்வனை மார்போடு அணைத்துக் கொண்டான்; மகனே மகனே என்று புலம்பி யழுதான். பார்த்தான் மைந்தன்; தந்தையை நோக்கி நவில்வான்:

"எந்தாய்! கலக்கமேன்? கரைவதும் ஏன்? போர் முகத்திலே, வாள் முனையிலே, துப்பாக்கி ரவையிலே, பீரங்கிக் குண்டிலே, பொன்றி விழ அஞ்சினேனில்லை! பகைவன் கையில்— அதிலும் ஆங்கிலக் கும்பினியின் அதிபனை லார்டு காரன்வாலிஸ் என்பவன் கையில்— பிணையாகக் கிடக்கவா வேண்டும்? எல்லாம் ஆண்டவன் அல்லாவின் அருள்!"

அது கேட்டான் திப்பு; உள்ளம் உடைந்தான்; ஓட்டை மனத்தன் ஆனான். உடனே, "அப்பா! மகனே! மாற்றானிடம் உன்னை அனுப்பேன் பிணையாக! உன் தம்பியையும் அனுப்பேன்! வேறு இரு சிறுவரை அமர்த்தி யிருக்கிறேன். அவ்விருவரையுமே என் மக்கள் எனக் கூறி அனுப்பப் போகிறேன்" என்றான்.

அப்துல் காலிக் அது அறிந்ததும் கண் சிவந்தான், "எந்தையே! யாது சொன்னீர்?" என்று சினந்தான்! "உம் மகனென யாரை அனுப்புவது? அவ்விருவரின் தாயார் யார்? அவளைக் கண்டு கேட்கிறேன். என் தந்தை

யிடமா அவ்விருவரையும் அவள் பெற்றெடுத்தாள்? என்ன பாவம் இது? வறுமையின் கொடுமையா? செங் கோலுக்கு முன்னே விதி யில்லாத பணிவா? அப்பாவம் யார் தலையில்? அவள் உத்தமியா யிருப்பின், நம் குலத் துக்கே கேடு நேருமே!" என்று பதில் கூறினன்.

பின்பு, "எந்தையே! எதிரிகளை ஏமாற்றலாம். ஆண்டவனும் கிடக்கட்டும்! நெஞ்சை ஒளித்து ஒரு வஞ்சகம் உண்டோ? நெஞ்சார நீங்கள் பொய் புகலு வதோ? என் பொருட்டு ஏன் இப்பொய்யுரை? வேண் டாம், வேண்டாம்; மரணத்துக்கு அஞ்சாதவன் பகைவ னிடம் பிணையிருக்கவா அஞ்சுவான்? பேதுற வேண்டாம்.

"சுல்தான் மகனென வேறு இருவரை அனுப்பின் அது எனக்குப் பெருமையோ? உங்களுக்குத்தான் மகிமையோ? நம் நகர்த்தரும் ஜனங்களும் தங்களை மதிப்பரோ? ஊரார் உங்கள் கோலுக்கு அஞ்சி வாய் திறவாமல் கிடக்கலாம்; அவர்களது உள்ளம் உங்களை ஏசுமே! லேசாகப் பேசுமே! நான் பிள்ளையாகப் பிறந்து, உங்களுக்கு இந்த அபகீர்த்தி தேடித்தரப் பாத்திரம் ஆனேன்!

"உங்கள் சிந்தை யாது? நம் தலைநகர் உளது, சேனை யும் உளது. உயிருள்ள வரையில் போர் புரிவோம். நாமே பொன்றுகையில், இந்நாடும் நகரும் பொன்றினல் என்ன? நிபந்தனைகளை ஏற்கும் நினைவில்லை என்று சொல்லி விடுங்கள். நாம் எல்லோரும் போரில் குதிக் கலாம்."

இங்ஙனம் அப்துல் காலிக் சொல்லவே முஸா தீனும், "ஆம் அப்பா! அதுதான் சரி" என்றான். மைந்த

ரின் உள்ளக் கிடக்கையை உணர்ந்ததும் திப்பு தேம்பினன்; தயங்கினன்.

பெற்ற தாயோ, "என் மகனே! இப்போதுதான் என் வயிறு—உன்னைப் பத்து மாதஞ் சுமந்து நின்ற வயிறு—குளிர்ந்தது! தாய்க்கு வேறு என்ன வேண்டும்? பெற்றெடுத்த அன்றையினும் இன்றே நான் பெரிதும் உவக்கின்றேன். நீயே சான்றோன்! நீயே என் மகன்! அல்லா உன்னைக் காப்பார்! உனக்கு மங்களம் எல்லாம் உண்டாகும்" என்று போற்றினள், பாராட்டினள்!

வீர திலகங்களில் ஒருவன் திப்பு சுல்தான். சமயம் பார்த்து மீண்டும் போரில் புகுவதே அவன் கருத்து. ஆயினும் இக்கட்டான வேளையில் பகைவருக்கு இசையவே எண்ணினன். மக்களிருவரையும் அனுப்பினன்.

சதுரங்க சேனை புடைசூழ, மைந்தர் இருவரும் பயணமாயினர். கவர்னர் ஜெனரலான லார்டு காரன் வாலிஸ் அம்மைந்தரின் வரவை எதிர்நோக்கி ஆசனத்தில் ஆடம்பரமாக வீற்றிருந்தான். மைந்தர் இருவரும் முகமலர்ச்சியுடன் வந்துசேர்ந்தனர்.

இருவரும் பெருமித மைந்தர் அல்லவா? பெருந்தன்மை மிக்க இருவரையும் கண்டவுடனே, இடம் விட்டு எழுந்தான்; இருவரையும் எதிர்கொண்டான்; இருவருக்கும் சலாம் செய்தான்; கைலாகு கொடுத்து அழைத்து வந்தான்; சரியாசனம் கொடுத்துச் சிறப்புச் செய்தான்.


பிரகதியின்
பேர் பெற்ற
சரித்திர ஜோதி.
- உன்னதக்கலை -
ஓவியம்
மஹா
ராஜ ராஜ சோழன்
பிரகதி பிக்சர்ஸ் (மதராஸ்) லிமிடெட்
அட்மிரால்டி ஹவுஸ் மதராஸ் 4.